# இந்து ஒளி

## Hindu Oli

தீபம் - 20 சுடர் - 04



### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

அனுசரணை : அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியம்

துர்முகி வருடம்
சித்திரை - வைகாசி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

April - May
2016

## மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீட்டு நிகழ்வு - யாழ்ப்பாணம் (28 - 05 - 2016)



சிவதொண்டர் அணி ஊர்வலம் மாமன்ற யாழ். பணிமனையிலிருந்து புறப்படுதல்



கலாநிதி ஆறு.திருமுருகன் வைரவிழா மலரை ஊர்வலத்தில் கொண்டு செல்கிறார்.



மாமன்றப் பிரதானிகள் சிவதொண்டர் அணி ஊர்வலத்தில்



நல்லூரில் வைரவிழா மலருடன் கந்தனை வழிபட்டு நின்ற வேளை




இ-வ : இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ ஆ.நடராஜன், வடமாகாண முதல்வர் மாண்புமிகு க.வி.விக்னேஸ்வரன், சீர்வளர்சீர் மருதாசல அடிகளார், மாமன்றத் தலைவர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆன்மீகச்சுடர் ரிஷி தெண்டுநாதன் சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன்



மாமன்ற வைரவிழா மலரினை சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் வெளியிட்டு வைக்க மாண்புமிகு க.வி. விக்னேஸ்வரன் பெற்றுக் கொள்கிறார். அருகில் மாமன்றத் தலைவர்



சிறப்புப் பிரதியை பேராசிரியர் மா.வேதநாதன் அவர்கள் மாமன்ற பிரதித் தலைவர் மா. தவயோகராஜா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட போது.



சிறப்புப் பிரதியை திரு. வே.கந்தசாமி அவர்கள், மாமன்றத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டபோது.



சிறப்புப் பிரதியை விரிவுரையாளர் சந்திரசேகரம் அவர்கள் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட போது.



வடமாகாண முதல்வர் மாண்புமிகு எக.வி.விக்னேஸ்வரன் அவர்கள் உரையாற்றும்போது.



இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ ஆ.நடராஜன் அவர்கள் உரையாற்றும்போது.



தமிழ்நாடு, பேரூராதீன இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகள் ஆன்மீகப் பேருரை ஆற்றியவேளை.



மாமன்றப் பொருளாளர் வே.கந்தசாமி அவர்கள் நன்றியுரையின் போது

உ
சிவமயம்

தீபம் - 20

# இந்து ஒளி

சுடர் - 04

துர்முகி வருடம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் (12.06.2016)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே!

### திருவாசகம்

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே!

### திருவிசைப்பா

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கண்
பகவனாம் அகஉயிர்க்கு அமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள் மூன்றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய கலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடி
யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

சீர்வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழில் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர்!

திருச்சிற்றம்பலம்

## அலைகடல் மத்தியில் அருள்மழை பொழியும் நயினை நாகபூஷணி அம்மன்

ஈழத்து திருக்கோயில்களில் பழமையும் பெருமையும் மிக்க சக்தி தலமாக விளங்குவது நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலாகும். இத்திருக்கோயில் இயற்கைக் கடல் சூழ்ந்த தீவில் புதுமைகள் நிறைந்த வகையில் விளங்குகிறது. பலநூறு வருட கால வரலாறு கூறும் இக் கோயிலில் நாகம் வழிபாடு செய்த அற்புத நிகழ்வு தனித்துவமுடையது. இத்திருக்கோயிலை தமிழர்கள் மட்டுமன்றி ஏனைய இனத்தவர்களும் பக்தி பூர்வமாக வழிபாடு செய்து வருகின்றனர். சைவ மக்கள் தங்கள் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு இத்திருக்கோயிலை நாடுவது வழக்கம். அவ்வகையில் பிள்ளைச் செல்வம் வேண்டியும், நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், மங்கள வாழ்வு வேண்டியும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நயினாதீவை நோக்கி தினமும் செல்கிறார்கள். ஆழ்கடலைத்



### நயினாதீவு
### ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
### மகோற்சவ சிறப்பிதழ்

இலங்கைத் திருநாட்டின் வடபகுதியில் அலைகடல் மத்தியில் அழகுற அமைந்துள்ள நயினைப் பதியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவப் பெருவிழா நிகழ்ந்துகொண்டிருக்கும் காலப்பகுதி இது. இம்மாதம் (ஜுன்) 6ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகியது. எதிர்வரும் 19ஆம் திகதி இரதோற்சவமும், 20ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறுகிறது. இதனையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான இந்து ஒளி (தீபம் 20, சுடர் 04) ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

தாண்டி அலை ஓசைகளுக்கு மத்தியில் அருள்மழை பொழியும் அம்பாளின் திருவருள் சிறப்பைப்பற்றி புலவர்கள் பலர் பாமாலை பாடியுள்ளனர். அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் விளங்குவது சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழர்களின் தொன்மை வரலாற்றோடு தொடர்புபட்ட இத்தீவை பௌத்த மதத்தவர்களும் தங்கள் வரலாற்றோடு தொடர்புபடுத்தி உரிமை கோரியவண்ணம் உள்ளனர். நயினாதீவு அம்மனின் திருவருளால் ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்களுக்கு அமுது அளிப்பதற்கு பல மடங்கள் தோற்றம் பெற்று சிறப்பாக இயங்கி வருகின்றன. எவர் நயினாதீவு சென்றாலும் பசி போக்குகின்ற பாரிய பணி அம்பாளின் அருளால் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஈழத்தில் புகழ்பூத்த சக்தித் தலங்கள் வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், சுதுமலை புவனேஸ்வரி அம்மன், வற்றாப்பளை கண்ணகி அம்மன், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் போன்ற தலங்கள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. திருகோணமலை பத்திரகாளி அம்மன் திருக்கோயிலிலும் தனித்துவம் மிக்கதாக விளங்குகிறது. நயினை நாகபூஷனி அம்மன் திருக்கோயில் திருவிழாக்காலம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் இத்திருவிழாக்காலத்தில் தவறாது வழிபாட்டிற்காக வருகிறார்கள். கடல்மேல் பயணம் செய்து சின்னஞ்சிறிய தீவில் அமைந்துள்ள இத்திருக்கோயிலை வழிபாடு செய்வதற்கு பல லட்சம் மக்கள் நாடி வருவது சாதாரண விடயம் அல்ல. நயினாதீவில் சித்தர்கள், யோகிகள், ஞானிகள் தங்கியிருந்து பலரை ஆற்றுப்படுத்தியுள்ளமை அனைவரும் அறிந்ததே. பழமையும் புதுமையும் மிக்க நாகபூஷணி அம்மனின் நல்லருளால் நமது நாட்டில் நல்லறங்கள் நிலைத்திட அனைவரும் வேண்டுதல் செய்வோமாக!



---

**அடுத்த சுடர்**

துர்முகி வருடம் ஆனி – ஆடி

வாழ்த்து

வாழ்கவே வாழ்க வென்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே! *(திருமந்திரம்)*


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

**துர்முகி வருடம் சித்திரை - வைகாசி**



**ஆசிரியர் குழு :**
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.சி. தில்லைநடராஜா
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



ஒரு பிரதியின் விலை — ரூபா 50.00
வருடாந்தச் சந்தா [உள்நாடு] — ரூபா 300.00 [தபாற் செலவு தனி]
வருடாந்தச் சந்தா [வெளிநாடு] — US டொலர் 15



## அகில இலங்கை இந்து மாமன்றம்

91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



## HINDU OLI

**Publication of**
**HINDU RESEARCH CENTRE OF**
**ALL CEYLON HINDU CONGRESS**

Nainativu Sri Nagapooshani Amman Mahotsava Special Issue
April - May 2016



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. S. Thillainadarajah
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



Price — Rs. 50.00
Annual Subscription (Inland) — Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign) — U. S. $ 15 (Including Postage)




**ALL CEYLON HINDU CONGRESS**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**



ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்



# பண்புடையவரை அறிவுடையவராக்குவோம்

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

என்ற திருவள்ளுவரின் குறள் எக்காலத்துக்கும் பொருத்தமானது. உலகில் தோன்றிய ஆன்மீக சிந்தனையாளர்கள் அனைவரும் பண்புடையவர்களேயானால் உலகம் அமைதிபெறும் என உரைத்துள்ளார். ஒவ்வொருவரையும் சிறுவயது முதல் பண்புடையவர்களாக வளர்க்கவேண்டும். பண்பில்லாதவருடைய கையில் படிப்பு பணம் பதவி என்பன இருந்தால் அது மிகவும் ஆபத்தானது. சித்தர்கள் யோகிகள் மகான்கள் என்போர் மனிதர்களைப் பண்புடையவர்களாக ஆற்றுப்படுத்துவதே ஆன்மீகமாகக் கருதினார்கள்.

இன்று எம்மண்ணில் இளைய தலைமுறையினர் பண்பு தவறிவிட்டதாக பலரும் கவலைப்படுகிறார்கள். இத்தலைமுறையினருக்கு வழிகாட்டுவதற்கு நல்ல பண்புடையவர் கிடைக்கவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். எமது மூதாதையரிடமிருந்த உயர்பண்பாடு நற்பண்புகள் என்பவைகளை நாம் எந்தளவுதூரம் பேணினோம் என சிந்திக்க முற்படுவோமாயின் நாம்விட்ட தவறுகள் விளங்கும். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலை எல்லாவற்றுக்கும் காரணம் காட்டமுடியாது. நல்ல பண்புகளை நாம் பேணினால் அவற்றை நமது சந்ததியும் பின்பற்றும்.



கடவுள் வழிபாடு. பெற்றோரைப் பேணுதல். குருமற்றும் மூத்தோரை மதித்தல் உறவினர்களையும் அயலவர்களையும் நேசித்தல் பிறரது இன்ப துன்பங்களை நமதாகக் கருதி உதவுதல் போன்ற உயர் பண்புகளை நாம் எவ்வளவு தூரம் பாதுகாத்து வந்தோம் என சிந்திக்கின்ற போது எமது தோல்வியை நாமே ஒத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் குழப்படி என்று சொல்லுகின்ற பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக எவ்வாறு நடந்து கொண்டார்கள் என தம்மைத்தாமே சுயகணிப்பீடு செய்தல் அவசியமாகும்.

எழுத்தறிவு குறைந்த காலத்தில் வாழ்ந்த மக்களிடம் இருந்த பண்பு கற்றதோர் சமூகமாக மாற்றம் பெற்ற பின் ஏன் வற்றிப் போகிறது? இது பெரும் ஆச்சரியத்தை தருகிறது. எல்லோர்க்கும் கல்வி என்பது உயர்ந்த சிந்தனை. கல்வியால் உயர்ந்த மானுட பக்குவத்தை உருவாக்கலாம் என பலரும் கருதுகின்றனர். எங்கள் மண்ணிலே கல்வி வளர்ந்த போதிலும் கருணை இரக்கம் சாந்தம் அமைதி என்பன ஏன் வளர மறுத்தன என்பது இன்று எமது மத்தியில் எழுகின்ற வினாவாகும். கல்வி வளர்ந்தாலும் கல்வியோடு மெய்ஞ்ஞான அறிவும் நற்பண்புகளும் வளராது விட்டால் உலகம் பொய்த்துவிடும் என ஆத்மஞானிகள் இதற்கு பதில் கூறுகிறார்கள். "கற்றாரை யான் வேண்டேன்" என மணிவாசகப் பெருமான் சுட்டிக் காட்டியது மிகப்பெரிய தத்துவத்தை விளக்கி நிற்கிறது. காரணம் வெறும் புத்தகக் கல்வியினால் பெறும் பட்டங்கள் பதவிகள் என்பன சுயநலச் சிந்தனையை மட்டுமே வளர்க்கும் என்ற காரணத்தினால் கல்வியுடன் மெய்ஞ்ஞான அறிவும் நற்பண்புகளும் இணைந்திருத்தல் அவசியம் என்பதை விளக்கினார். ஒரு கல்வியாளன் ஏதாவதொரு காரியத்தை கெட்டித்தனமாகச் செய்வதில் வல்லவராக இருப்பார் எனக் கருதமுடியாது. வல்லவரிடம் நல்ல பண்புகள் இயல்பாக இருக்குமானால் அவர் தனது வல்லமையை பலர் பயன்பெற உதவுவார்.

இன்று எமது மண்ணில் பண்பு குறைந்தவர்கள் பலரிடம் படிப்பும் பதவியும் பணமும் சேர்ந்துவிட்டது. அதனால் போட்டியும் பொறாமையும் பூசலும் மலிந்து காணப்படுகிறது. பண்பில்லாதவர்களிடம் பாவபுண்ணியம் பற்றிய நம்பிக்கை முற்றுமுழுதாக விடைபெற்றுவிடும். அதனால் அவர்கள் எதையும் செய்வார்கள். இன்று படித்தவர்களிடையே ஒற்றுமையின்மை பெரும்பாலும் காணப்படுகிறது. ஆன்மீகப் பலத்தைவிட அறிவுப்பலம் பணப்பலம் பிறசெல்வாக்குப்பலம் பதவிப்பலம் என்னும் மாயை அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இவை நிரந்தரம் அல்ல என்ற உண்மை அவர்களுக்குத் தெரிவதில்லை. இந்த தற்காலிக பலம் இருக்கும்போது எல்லோரும் தங்களைத் தாங்களே தலைவர்களாகக் கருதுகின்றார்கள். தங்களுக்கு மேலே இருக்கின்ற தலைமையை விளங்கிக் கொள்வதில்லை. இதனால் பகையும் பாவமும் இருளும் எம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன.

இன்று இளைய தலைமுறையினரில் பலர் பண்பு இழந்து பாழும் விதிக்குள் பாய்ந்து நிற்கிறார்கள். எவராலும் இவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. உயர்ந்த பாடசாலைகளில் தமது பிள்ளைகள் படிக்கவேண்டும் என்று உறங்காது ஓடியாடி உழைத்த பெற்றோர் முதல் சமூகம் வரை செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். சிறந்த கல்விப்பெறுபேறு பெற்ற மாணவரும் சிறிய பாதையில் தவறி நடப்பது எதனால்? அறப்போதனைகளையும் அன்புப் போதனைகளையும் கருணைப் போதனைகளையும் முற்றாகக் கைவிட்டு வெறும் கல்விப் போதனையால் பிள்ளைகள் சாதிக்கப்போகிறார்கள் எனக் கருதிய சமூகம் தோற்றுவிட்டது.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்"

என்ற வள்ளுவரின் குறள் இன்று எம் மண்ணில் பொருத்தமாக இருக்கிறது. இளைய தலைமுறையினரிடம் மட்டுமல்ல அவர்களுக்கு வழிகாட்டவேண்டியவர்களிடம் கூட பண்புக்கு தட்டுப்பாடு நிலவுவதனால் இந்த அவல அறுவடையை நாம் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அறிவுடையாரை நாம் உருவாக்குவதற்கு முன்னர் அவர்களை பண்புடையவர்களாக நெறிப்படுத்துவது அவசியமாகும்.

ரிஷி தொண்டுநாதன்




# நாகேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு

குல.சபாநாதன்

### நயினாதீவு

எவர் எவர் எவ்வெச்சமயத்தைக் கைக்கொண்ட போதிலும், இறுதி இலட்சியம் ஒன்றே என்பதைக் காட்டுவதற்கான தலங்கள், உலகாயதம் பரவிவரும் இக்காலத்திலும் உலகெங்கணும் இருக்கத்தான் செய்கின்றன! எங்கள் சிறிய இலங்கையிலும் கானக மத்தியில் விளங்கும் கதிர்காமம், வானுறவோங்கும் சிவனொளிபாதம், ஆழ்கடல்சூழ் நயினாதீவு என்பன எம்மதத்தவர்களுக்கும் சம்மதம் கொடுப்பனவாய் அமைந்துள்ளன.

நயினாதீவைப்பற்றிப் பல ஐதீகங்களுள. அத்தீவிலுள்ள நாகேஸ்வரி ஆலயத்தைப்பற்றியுள்ள ஐதீகங்களும் மிகப்பல. இஃது எப்போது தோன்றியது? எவ்வாறு விருத்தியாகிப் புகழ் பெற்றது? என்னும் இன்னோரன்ன வினாக்களுக்கு ஆராய்ச்சியாளர்கள் திருப்தியடையக் கூடியதாக விடைகூறும் சரித்திர நூல்கள் இல்லை. எனவே கர்ண பரம்பரையாக வழங்கும் கதைகளைக் கொண்டும் பிற்காலத்தவர் ஆங்காங்கு எழுதிய குறிப்புகளைக் கொண்டும் இத்தலத்தின் வரலாற்றை ஊகிக்க முடியுமேயன்றி நிதார்த்தமாக அதுபற்றிக் குறிப்பிடத் துணியவொண்ணாது.

நயினாதீவுக்கு நந்தாப் புகழையளிப்பது அங்குள்ள நாகேஸ்வரி ஆலயமாகும். இது நாகம்மாள் கோயில், நாகபூஷணியம்பாள் கோயில் எனவும் வழங்கப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து காரைதீவுக்குச் சென்று அங்கிருந்து வத்தைகள், போட்டுகள், மோட்டார் லாஞ்சிகள் மூலமாக யாத்திரீகர்கள் நயினாதீவுக்குச் செல்வது வழக்கம். புகழ்பெற்ற இச்சிறு தீவின் சுற்றளவு ஏறக்குறைய நாலு மைல் வரையிருக்கும்.

இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு நேராகச் செல்வதற்குச் சாலை வசதி ஏற்பட்டு விட்டது. எனவே யாத்திரீகர்கள் புங்குடுதீவு சென்று, இயந்திரப்படகு மூலம் நயினாதீவுக்குப் போதல் சுலபமும் துரிதமும் ஆகும்.

### நாகம் அர்ச்சனை செய்தது.

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்வதற்காகப் பூக்கள் கொய்வதற்கு செல்லும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டு அஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின்மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில், அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசியன் ஒருவன் அந் நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து, மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என்முன் வைத்தால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும்பொழுது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபோது நாகரத்தினக் கற்கள் அவ் அறையில் இருப்பதைக் கண்டார்கள். நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினாப்பட்டர் எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத்தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டுகிறார்கள். இக் கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகியிருத்தலும் கூடும்.

### பழைய துறைமுகம்

நயினாதீவு பண்டைக் காலத்திற் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கிற்றென்பதற்கு ஐயமில்லை. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையால், தமிழ் நாட்டுக் கப்பல்களும் அந்நிய நாட்டுக் கப்பல்களும் இத்துறையிற் தங்கியே சென்றிருக்கக் கூடும். இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதிக் கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது.

மேலும் நாகம்மாள் கோவிலிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமும் இக் கொள்கையினை வலியுறுத்துகின்றது. இச் சாசனம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலநறுவையிலிருந்து அரசாண்ட மகா பராக்கிரமபாகு என்பவனால் பொறிக்கப் பெற்றது. இக்கடலில் நாவாய்கள் காற்றில் அகப்பட்டு உடைந்துபோனால் எவ்விதமுறை கையாளப்பட வேண்டுமென்பது இச் சாசனத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. எனவே கப்பல்களிற் போக்குவரத்துச் செய்தவர்களும் வணிகரும் நயினாதீவிலுள்ள ஆலயத்தைத் தரிசித்திருக்கக் கூடுமென ஊகிக்க இடமுண்டு.

### சீனத்துச் சாடிகள்

சில வருடங்களுக்கு முன் 'பப்பரவன் சல்லி' எனும் காணியில் கிணறு ஒன்று தோண்டியபோது சில சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றைக் கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பிவைத்தபொழுது அவை சீன தேசத்துச் சாடிகள் எனவும், 12ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்டவையாயிருத்தல் கூடுமெனவும், நூதனசாலை அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். பௌத்த மதம் இலங்கையிற் பரவியிருந்த காலத்தில் புங்குடுதீவு (புவங்கு திவயின), நயினாதீவு (நாக திவயின), ஊறாத்துறை (தன்னி திவயின), அனலைதீவு (அக்னி திவயன), காரைதீவு (காற திவயின) முதலிய தீவுகள் பிரபல்யமுற்று விளங்கின. பௌத்தர்கள் இத்தீவுகளில் விகாரைகளைக் கட்டினார்கள். நயினாதீவிலும் ஒரு விகாரை கட்டப்பெற்றது. ஆனால் அந்த விகாரை இப்பொழுது அழிவுற்றுக் கிடக்கின்றது. எனினும் புத்தர் கோயிற்குளம், புத்தர் கோயிலடி, புத்தர் திடல் எனும் இடப்பெயர்கள் பண்டைக் கோயிலின் பெருமையை நினைவூட்டும் சாதனங்களாக இன்றும் மிளிர்கின்றன. புத்தர் திடலில் துளசிச் செடிகள் இப்பொழுதும் தாமே முளைத்து அழிதலையும் காணலாம்.




### மணிமேகலா சம்பந்தம்

மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்த தென்ற ஐதீகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதை பண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. மணிமேகலை மணிபல்லவத்தைத் தரிசித்தாளென மணிமேகலையெனும் காப்பியம் கூறுகின்றது. மணிபல்லவம் என்பது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனையளவிலுள்ள ஒரு சிறு தீவு என்பது மணிமேகலை எனும் நூலிற் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை, மணிபல்லவத்தில் இறங்கி அமுதசுரபியெனும் அட்சய பாத்திரத்தைப் பெற்றாள் என மேற்கூறிய நூல் தெரிவிக்கின்றது. மகாவம்சத்தில் இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறப்பட்டுள்ளது நாகதீபத்தைப்பற்றி புத்த ஜாதகக்கதைகளில் அநேக குறிப்புக்கள் காணப்படுகின்றன.

நாகதீவு அல்லது மணிபல்லவம் எதுவாயிருக்கலாம் என்பது பற்றி அபிப்பிராய பேதமுண்டு. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமே மணிபல்லவம் அல்லது நாகதீவு என்றழைக்கப்பட்ட தெனக் காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதினார்கள். டாக்டர் போல்பீரிஸ் அவர்களும் இக் கொள்கையை ஆதரித்து எழுதியுள்ளார். வல்லிபுரக் கோயிற் பொற்சாஸனத்தைப் பற்றி டாக்டர் எஸ்.பரணவிதான அவர்கள் எழுதிய கட்டுரையிலும் இக் கொள்கையினை வலியுறுத்தியே எழுதியுள்ளார். இப்பொழுது நயினாதீவு எனப்படுவதே


**இந்து ஒளி - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்**
**மகோற்சவ சிறப்பிதழ் வெளியீடு**

அனுசரணை:

**அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியம்**
**குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**

**தலைமையகம்:**
64, கல்பொத்த வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

**கிளைகள்:**
52, 2ம் குறுக்கு வீதி, வவுனியா.
110, பஜார் வீதி, வவுனியா




பண்டைக்காலத்தில் மணிபல்லவம், நாகதீவு, மணித்தீவு எனப்பல பெயர்களால் வழங்கப்பட்டதென்பர் பிறிதொரு சாரார். இக்கொள்கையினை ஆதரித்து திரு. செல்லையா தில்லையம்பலம் அவர்கள் 'நற்றவம் மிக்க நயினாதீவு' எனும் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். இங்ஙனம் ஆராய்ச்சியாளர் வாதமிடினும் பொதுஜனங்கள் இவற்றைப் புறக்கணித்து நயினாதீவையே புண்ணியஸ்தலமாக கொண்டு வழிபடுகின்றனர். பௌத்தர்களும் தங்கள் புத்தர் பெருமானின் பாதம் படிந்த புண்ணிய ஸ்தலமாகிய நாகதீவு இந்த நயினாதீவேயென்று கருதி அங்கே ஒரு விகாரை கட்டியுள்ளார்கள். இப்பொழுது ஏறக்குறைய நாள்தோறும் யாத்திரீகர்கள் அநேகர் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த விகாரை பல்லாயிரக்கணக்கானோர் பக்தியுடன் சென்று வணங்கும் ஆலயமாக விளங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கடலோட்டுகாதை, வெடியரசன் நாடகம், வையா பாடல் முதலியவற்றை நோக்குடமிடத்து நயினாதீவு யாத்திரை ஸ்தலமாக விளங்கியிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு.

நாகநயினார் அல்லது நாகதம்பிரான் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்தலமாதலின் இது நாகநயினாதீவு எனப் பெயர் பெற்றதெனவுங் கொள்ளலாம்.

**கோயிலை இடித்தல்**

புராதனப் பெருமைவாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்குவதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டுவைப்பார்களா? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசை பிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினார். கோயில் தரைமாக்கப்பட்டது. இந்த வன்கணாளரின் கொடிய செயலைக் கண்டு சைவ மக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடி துடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டு வந்த மூர்த்திகளையும் பூசைப் பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக் கூடாததெனக் கருதிய சைவ நன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங்களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்த மரம் 'அம்மாள் ஒளித்த ஆல்' என வழங்கப்பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அந்நியர் கோயிலை இடித்தபோதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவள் நயினாதீவு மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் உறுதியான இடம் பெற்று விளங்கினாள். அந்நிய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினாதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லையென்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயிலை அந்நியர் அழிக்க வந்த பொழுது கோயிற் தேர் தானாகவே உருண்டு மேற்கு கடலில் ஆழ்ந்துவிட்டதாம். ஒரு சமயம் அக்காலச் சைவமக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருத்தலும் கூடும். சிற்சில காலங்களில் தேர்முடி கடலில் பௌர்ணிமைத் தினத்தில் தெரிகிறது என்ற ஒரு கதையும் அடிக்கடி கேட்கப்படுவதுமுண்டு. இது பண்டைக் காலத்தில் தேர் முதலியன கடலினுள் தள்ளப்பட்ட நிகழ்ச்சியின் எதிரொலியாக இருக்கலாம். இவ்வாலயத்திற்குச் சமீபமாகவிருக்கும் தென்னந் தோப்புக்களிற் சிலவிடங்களிற் கிண்டிப்பார்த்த பொழுது, தரையின் கீழ் பழைய கட்டடங்கள் காணப்பட்டன. திருக்குளமொன்று வெட்டிய பொழுது கோயிற் பூசைக்குரிய வெண்கலப் பொருட்கள் சில வெளிக்கிளம்பின.

**கோயிற் புனரமைப்பு**

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினாதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே தாபிக்கபெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள் தாம் மறைத்துவைத்திருந்த இடத்திற் காணாமையாற் பெரிதும் கவலை கொண்டார்கள். ஆயினும் நயினாதீவுக்கு வடபாலுள்ள புலியேந்தி அல்லது புளியந்தீவு எனும் சிறுதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினார்கள். இக்கோயில் நாகதம்பிரான் கோயில் என அழைக்கப்படுகின்றது. புலியேந்தியிலுள்ள நாகதம்பிரான் கோயிலிலே தாபித்திருக்கும் சிவலிங்கம் நயினாதீவு நாகேஸ்வரி ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் முன்னரே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கங்களுள் ஒன்றாயிருத்தல் கூடும் என்ற கொள்கையும் உண்டு.

டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்னர் நாகேச்சரத்தில் தேவி ஆலயமே முதன்மை பெற்றுள்ளதெனக் கருத இடமுண்டு. அற்றன்று, பண்டுதொட்டு இது தேவி ஆலயமாகவே விளங்கிற்று என வாதிப்பாருமுளர்.

அழகிய கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. நாகேஸ்வரி கோயிலின் வாயிலில் இரண்டு பீரங்கிகளும் ஒரு கற்சில்லும் இருப்பதை யாத்திரீகர்கள் அவதானித்திருக்கலாம். இப்பீரங்கிகள் டச்சுக்காரர் காலத்தனவாயிருக்கலாம். இவை இத்தீவின் அயலிலுள்ள கடலிலிருந்து கடற்தொழிலாளரால் கொண்டுவரப்பட்டன. அங்குள்ள கற்சில்லு பழைய தேர்ச்சில்லு எனவும், கப்பல் நங்கூரமெனவும் கூறப்படுகிறது. இது பழைய கோயிலின் துவஜஸ்தம்பத்தின் பாகமாயிருக்கவும் கூடும்.

அண்மைக் காலம் வரை நாகபாம்புகள் இக்கோயிலுக்கருகில் வந்து செல்வது வழக்கமெனச் சில முதியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். பாம்பு வணக்கம் இந்துக்களுட் பண்டுதொட்டுக் காணப்பட்ட மிகவும் புராதன வழிபாடாகவே தெரிகின்றது.

*(நன்றி: இலங்கையின் புராதன சைவாலயங்கள் நயினை நாகேஸ்வரி , குல.சபாநாதன் (1962), மறுஅச்சு 2006: குமரன் புத்தக இல்லம்)*

# உயர்சக்தி ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பிகை




**கலாநிதி பிரம்மஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா**
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருததுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

"சிவபூமி" என திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கை திருநாட்டின் வடபுறத்தே யாழ்ப்பாண நகரத்திலிருந்து தென்மேற்கு பக்கமாக சுமார் முப்பத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் அலைகடல் நடுவே அழகுற அமைந்திருக்கும் இடம் நயினதீவாகும். "நகரேஷு காஞ்சி" என்று சிறப்பிக்கப்படுவதைப் போன்று "த்வீபேஷு நயினத்வீப" என்று சிறப்பிக்கப்படும் அளவிற்கு சப்த தீவுகளில் சிறப்புப் பொருந்திய தீவாக நயினாதீவு விளங்குகின்றது. நயினாதீவின் புரதானமான நாயகியாக ஜகன்மாதா அன்னை ஸ்ரீ நாகபூஷணி அருள்பாலித்து வருகின்றாள். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களை கொண்டமையப்பெற்ற தேவஸ்தானமாகவும், ஈழநாட்டின் மிக முக்கியமான அம்பிகை ஆலயமாகவும் இத்திருத்தலம் விளங்கி வருகின்றது.

**கோவில் அமைவிடம்**

குறிகாட்டுவானிலிருந்து சுமார் ஒரு கடல்மைல் தூரம் மேற்கே கடல் நடுவில் அமைந்துள்ள அழகிய இடம் நயினாதீவாகும். நயினாதீவில் கோவிலிற்கு முன்பாகவுள்ள இறங்குதுறையில் பயணப்படகில் இருந்து இறங்கி வருபவர்களை அரவணைத்து ஆசீர்வதித்து நல்வரவு கூறும் உலகின் தாயாக நீலத்திரைக் கடலோரத்தில் பெரும் கோவில் கொண்டு உலகிற்கு அருளாட்சி செய்துவருகின்றாள் நயினை நாகபூஷனி அம்பிகை. கோவிற்பாலத்தில் இறங்குபவர்களுக்கு செவிற்கின்பமாக நாதமணியும், வேதஒலியும் தேவாரத்திருவாசக திருமுறைகளும் காற்றிலே மிதந்து வருகின்றன. கிழக்கு வாசலிலே விண்ணைத்தொட்டு நிற்கும் அளவிற்கு வானளாவிய இராஜகோபுரம் அமைந்துள்ளது.

**புராதனமான ஆலயம்**

நாகபூஷணி அம்பாளின் ஆரம்பகால ஆலயம் எவ்வாறு கட்டப்பட்டது, எவ்வாறு பெரும் ஆலயமாக வளர்ச்சி பெற்று புகழ்பெற்றதுஎனும் வினாக்களுக்கு ஆதாரபூர்வமான விடைகள் தரக்கூடிய அளவிற்கு ஆலயத்துடன் தொடர்புபட்ட சரித்திர நூல்களோ குறிப்புக்களோ கிடைக்கப்பெறவில்லை. எனினும் இவ்வாலயம் இரண்டாயிரத்து மேல் சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் வரை மிக பழமைவாய்ந்த ஆலயமாக அறியப்படுகின்றது.

**அறிஞர் பெருமக்களின் கருத்தும், நம்பிக்கையும்**

இவ்வாலய மூலஸ்தானத்தில் அமைந்துள்ள ஒருசாதி பழமை பொருந்திய புனிதமான தெய்வீகம் நிறைந்த கல்லிலான (கருங்கல் அல்ல) ஐந்துதலை நாக உருவை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் பலகருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். புரதானமான கலப்பற்ற இடைச்செருகலற்ற நாகவழிபாடு ஆரம்பகாலத்தில் நயினாதீவிலேயே காணப்பட்டிருக்கின்றது. ஐந்துதலை நாகத்தின் முன்பு அம்பாள் போன்ற உருவம் கொண்ட அம்பாளின் விக்கிரகமும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மூலஸ்தானத்தில் அமைந்த நாகஉருவின் வால்பகுதி நிலத்துள் பல அடி ஆழத்திற்கு தோண்டிப்பார்த்த போதும் முற்றுப்பெறாது வளர்ந்து சென்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் வாலின் நுனிப்பகுதி அயலிலுள்ள புளியந்தீவு அல்லது புலியேந்தி என்னுமிடத்தில் உள்ள நாகதம்பிரான் கோயிலின் மூலஸ்தானத்தில் சிவலிங்கமாக வெளிக்கிளப்பியுள்ளதாக ஆழமான நம்பிக்கை மக்களிடையே நீண்டகாலமாக நிலவி வருகின்றது.

வரலாற்றுக் கதைகளுக்கான சான்றாதாரங்கள் அம்பாளின் ஆலயத்திற்கு வடக்கே (புளியந்தீவுக்கு போகும் கடல்வழி) கடலில் இருந்து மேலெழுந்தவாரியாக நன்கு தெரியும் வண்ணம் இரு கற்கள் காணப்படுகின்றன. அவை பாம்பு சுற்றியகல், கருடன் இருந்த கல் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன.

முதலாம் பராக்கிரமபாகு காலத்துக்கு கல்வெட்டு ஒன்று இன்றும் ஆலயத்திற்கு தெற்கு வாசலிலே காணப்படுகின்றது. அதில் பராக்கிரமபாகு ஆட்சிக்கால சாசனவிபரங்கள் கிரந்த எழுத்தில் காணப்படுகின்றன. இவையும் பராதன ஆலயத்துடன் தொடர்புபடுகின்றன.

**மூலஸ்தானத்தில் மணி பீடம்**

அம்பாளின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்பாளின் உருவமும், சுயம்புவாகவுள்ள ஐந்து தலையுள்ள நாகமும் சேர்ந்து அமர்ந்துள்ள அம்பாளின் உபபீடமாக மணிபீடம் காணப்படுகின்றது.

தெய்வீகம் நிறைந்த ஒரே கல்லினால் (கருங்கல் அல்ல) அமைக்கப்பட்ட மணிபீடத்தில் பல சிறப்பு சிற்ப வடிவங்களும் ஜலஜந்துக்களும், பஞ்சாசன அமைப்பும் காணப்படுகின்றன. இந்த மணிபீட அமைப்பானது ஆலயத்தின் புரதானகால வரலாற்றை எடுத்துக்காட்டுகின்ற அடையாளமாகக் காணப்படுகின்றது.

இம்மணிபீடத்திலேயே சுயம்புவான ஐந்துதலை கொண்ட நாகபாம்பும், அம்பிகை அமைப்புக் கொண்ட

விக்கிரகமும் காணப்படுகின்றது. மணிபீடத்தில் அம்பிகை விக்கிரகமும் அஷ்ட பந்தனம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எந்தக் காலத்தில் இருந்து அம்பிகையை மணிபீடத்தில் இருத்தி வழிபடப்பட்டு வருகின்றாள் என்பதை அறியமுடியாதுள்ளது. மிகவும் புராதனமாக காலத்திலிருந்து நாகமும். அம்பிகையும் மூலவிக்கிரகங்களாக வீற்றிருக்க நாகபூஷணி என்ற சிறப்புப் பெயருடன் இற்றைவரைக்கும் அம்பிகை சிறப்புடன் வழிபடப்பட்டு வருகின்றாள்.

**மணிபல்லவம் – மணி ஆசனம் –மணிபீடம்**

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை எனும் நூலில் குறிக்கப்படும் மணிபல்லவமே நயினாதீவு எனச்சில இலக்கிய ஆய்வாளர்கள் கூறுவதையும் மறுப்பதற்கு இடமில்லை. மணிபல்லவத்திலே காணப்பட்டதும், தேவர்கோனாகிய இந்திரனால் இடப்பட்டதுமாகிய மணி ஆசனபீடத்தை தமதாக்கிக்கொள்ள நாகநாட்டரசர்கள் இருவர் தமக்குள் கடும் போரிட்டனர்.

இறுதியில் இருவரும் போரை நிறுத்தி, சமாதானப்பட்டமையினால் இந்திரனால் இடப்பட்ட மணி ஆசனத்தில் அம்பிகை அமர்ந்து அருளாட்சிசெய்துவருகின்றாள். இதேபோன்றதொரு கதை புத்த பிக்கு மகாநாகரின் பாளி நூலாகிய மஹாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. மஹாவம்சம் இச் சம்பவம் நடந்த இடத்தை நாகதீபம் எனக் கூறுகின்றது. ஆனால் மணிபல்லவம் எனப்பட்டதோ, அல்லது நாகதீபம் எனப்பட்டதோ இன்றைய நயினாதீவுதான் என்பது இற்றைவரைக்கும் தெளிவுபட நிறுவப்படாது ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

எனினும் நம்பிக்கை அடிப்படையில் சமயப் பொருத்தப்பாட்டு கண்ணோட்டத்திலும், வரலாற்று நோக்கிலும் நோக்குகின்ற போது, தேவர்கோனாகிய இந்திரனுக்கும் இந்துக்களுக்குமே அவற்றில் என்றும் மாறுபடாத நம்பிக்கை உரித்துண்டு என்பதும் சந்தேகமின்றி புலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மணிபல்லவத் தீவான நயினாதீவில் இந்திரனால் இடப்பட்ட மணியாசன பீடத்தில் நாகபூஷணி அம்பிகை புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள் என்பதே சிறப்புக்குரிய விடயமாகும்.

**ஸ்ரீ புவனேஸ்வரி பீடம்**

சிவபெருமானை மதிக்காமல் தக்கன் செய்த யாகத்திற்குச் சென்ற பராசக்தியாகிய தாட்சாயணி அங்கு தானும் தனது நாயகனாகிய சிவனும் அவமதிக்கப்பட்டதையறிந்து மனம் பொறுக்காமல் யாககுண்டலத்திலேயே விழுந்து உயிர்துறந்தாள். இதனைக் கேள்வியுற்ற சிவபெருமான் அடங்காச் சினத்துடன் அங்குவந்து கோபக் கனலாக மாறித் தனது தேவியின் உடலை எடுத்து சிரசின் மேலே வைத்து சுழன்று, சுழன்று ஆவேசமாக ஆடினார். உலகமே அஞ்சியது. அழிவு நெருங்கிவிட்டதோ என்று, பிரம்மா முதல் அனைவரும் நடுநடுங்கினர். கடல் பொங்கியது. கோள்கள் நிலைதடுமாறிச் சுழன்றன, பூமி நடுங்கியது. இதனைப் பார்த்த காத்தற் கடவுளாகிய விஷ்ணு பகவான் தனது சக்ராயுதத்தை ஏவிப் பராசக்தியின் உடலைத் துண்டுகளாக்கித் தெறித்து விழச்செய்தார். பாரத நாட்டிலும் ஈழத்திலும் (மணித் தீவிலும்) பல்வேறு பகுதிகளில் உடற் பாகங்களும் பராசக்தியின் அணிகலன்களும் வீழ்ந்தன. அவையே இன்று சக்தி பீடங்களாகத் திகழுகின்றன.

சக்தி பீடங்கள் ஐம்பத்தொன்று என்றும், அறுபத்து நான்கு என்றும், நூற்றெட்டு என்றும் கூறுவர். "பீடநிர்மயா" எனும் நூல் ஐம்பத்தொரு சக்திபீடங்களின் பெயர்களைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. சிவபெருமான் தேவியின் சிற்கலாரூபத்தை தாங்கி நிற்கையில், உலக ஜீவனத்தின் பொருட்டு அதனை வேண்டி திருமாலே சக்தி பீடங்களாக ஸ்தாபித்தார் என்கிறது "அபிதானசிந்தாமணி" எனும் நூல். பராசக்தியின் உடலைத் துண்டுகளாகத் தெறித்து வீழ்த்தும் போது அம்பிகை பராசக்தியின் காற்சதங்கை விழுந்த இடமே மணித்தீபத்தில் (நயினாதீவில்) விளங்கும் புவனேஸ்வரி பீடமாகும். இது நாற்பத்தெட்டாவது சக்தி பீடமாகும். பராசக்தியின் நாமம் இந்திராணியாகும். காவற்தெய்வமான பைரவரின் மூர்த்தம் ரக்ஷேஸ்வரர் ஆகும். இக் குறிப்பை வங்காள தேசத்து ஸ்ரீ பவானிபீட ஆதீனம் வெளியிட்ட குறிப்பொன்றில் இருந்து அறியமுடிகின்றது.

பராசக்தி அம்பிகையின் காற்சதங்கை வீழ்ந்த இடமாகத் திகழும் மணித்தீவில் (மணிபல்லவத் தீவு. நயினாதீவு என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.) தேவர்கோனாகிய இந்திரன் இட்ட மணியாசன ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தில் சுயம்புலிங்கமாகவுள்ள ஐந்துதலை கொண்ட நாகபாம்பும், புராதனமான காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்பிகை வடிவமான விக்கிரகமும் அமையப்பெற்று ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தில் சுயம்புவாகக் காணப்படும் நாகத்தினை ஆபரணமாகக்கொண்ட மூர்த்தமாக நாகபூஷணி என சிறப்புப் பெயருடன் வீற்றிருக்கும் சிறப்பினை நயினைத்தீவில் காணலாம். அம்பிகையின் உற்சவநாயகியின் தோற்றம் மனோன்மணி மூர்த்தமாகும். அம்பாள் அலங்கரிக்கப்படும் போது நாகாபரணத்திற்கு முக்கியம் கொடுக்கப்பட்டு நாகபூஷணியாக எழுந்தருள்கின்றாள்.

**பிரம்ம வித்தையும் ஸ்ரீ வித்தையும் ஒன்றே என்பதை எடுத்துக்காட்டும் மூலவிக்கிரம அமைப்பு.**

நயினை அம்பாளின் மூலவிக்கிரக அமைப்பை நோக்கும் போது மணிபல்லவத்தீவில் தேவர் கோனாகிய இந்திரனால் இடம் பெற்ற மணியாசனமான ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தில் அம்பிகை நாகபூஷணி அமர்ந்துள்ளாள். சுயம்புவாக அமையப்பட்ட ஐந்து தலையுள்ள நாகபாம்பும், அணிகலனாக அமையப்பெற்று நாகபாம்பின் கீழ் அம்பிகை உருவம் அமர்ந்துள்ளதைப் போன்ற விக்கிரக அமைப்புமே மூலவிக்கிரகங்களாகவுள்ளன.

நாகமும் அம்பிகையும் சேர்ந்து சிவனும், சக்தியுமாக இணைந்து சிவசக்தி வழிபாடாக மூலவிக்கிரகம்

காடசியளிக்கின்றது. இதனையே ஆதி சங்கரரும் தனது "சௌந்தர்யலகரி" என்ற ஸ்தோத்திர நூலிலே "சிவ: சக்தியா யுக்தக: (சிவன் சக்தியுடன் கூட இருப்பவன். சக்தியை பிரிக்க முடியாது) என்று குறிப்பிடுவதை தெளிவாகக் காணலாம். சிவனையும், சக்தியையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு சிவனின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவனில்லை என்ற உயர்ந்த தத்துவப் பொருளை உணர்த்துகின்ற தத்துவார்த்த சிந்தனைக் கொண்ட இடமாகவும், வேதாந்த சித்தாந்தத்தின் இடமாகவும், சிவ வழிபாட்டையும், சக்தி வழிபாட்டையும், எடுத்து விளக்கி நிற்குமிடமாகவும் நயினை நாகபூஷணி அம்பாளின் மூலவிக்கிரக அமைப்பு காணப்படுகிறது. சிவவடிவமாகக் காணப்படும் நாகத்தையும் அம்பிகையும் சேர்ந்து சிவ சக்தி வழிபாட்டின் உயர்ந்த ஸ்தானமாகவும் மகோன்னதமான தேவஸ்தானமாகவும் நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள். மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விஷாலாட்சியாகவும் சக்தி சிறப்புப் பெறுவதைப்போன்று (சிவனுடன் சக்தி சேர்ந்திருக்கும் நிலை) நயினாதீவில் சிவத்துவாக விளங்கும் நாகத்துடன் சேர்ந்து புவனேஸ்வரி பீடத்தை நாகபூஷணி அம்பாள் அலங்கரிக்கின்றாள்.

மிகவும் புராதனமான காலத்திலிருந்து கலப்பற்ற தூ ய்மையான புனித்துவமுள்ள நாக வழிபாட்டின் ஆரம்பகால இடமாகவும் நயினை விளங்குகின்றது என்று ஆய்வாளர்களும், வரலாற்றாசிரியர்களும் கூறுவதை காணலாம்.

"சிற்பவடிவிலே செதுக்கியே செப்புருவாய் வார்த்தெடுத்தோ, பிரதிஷ்டை செய்யப்படாது, தாமாகவே தோன்றி வழிபாட்டிற்குரிய இடமாகவுள்ள தெய்வ உருவங்கள் சுயம்பு மூர்த்தம் என வழங்கப்படும். நயினை நாகபூஷணி ஆலயத்தின் கருவறையிலே ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகமாகவுள்ளது. அம்பாளின் விக்கிரகமும் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது.அதன் முன்பே சுயம்பு நாகப் பிரதிஷ்டை ஏற்பட்டிருக்கலாம்" என காரைக்குடி எம். செல்லக்கண்ணுஸ்பதியார் 11.03.1951 இல் வெளியான வீரகேசரியில் குறிப்பிடுகின்றார்.

சிற்ப சாஸ்திர ஆராச்சியாளர் எம்.நரசிம்மன் அவர்கள் கூறியுள்ள பின்வரும் கருத்து (28.08.1983 கும்பாபிஷேக மலர்) நயினையில் நாக வழிபாடு எத்துணைப் பழமையானது என்பதை அறிந்து கொள்ள உதவும்.

"நயினாதீவின் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பதும் பழைய நாக பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்த அம்மன் உருவம் போலத்தெரிகிறது. இதற்கு பின் பக்கமாக ஐந்துதலை நாக பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதனமான கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாகவழிபாட்டின் பண்பினை நயினாத்தீவில் காணலாம். இந்த சுயம்புவான நாகச்சிலை பதினான்காயிரம் வருடங்கள் பழமையுடையது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கின்றது."என ஆராச்சியாளர் எம்.நரசிம்மன் மிகத் தெளிவாக கூறியுள்ளார்.




**ஓம் – என்ற பிரம்மவித்யா மந்திரம்**

**ஹ்ரீம் – என்ற ஸ்ரீவித்யா மந்திரம்**

பிரம்ம வித்தையும், ஸ்ரீ வித்தையும் ஒன்றே என்பதை கருத்திற்கொண்டு தான் வழிபாட்டு மரபுகள் சாக்த நெறியிலே காணப்படுகின்றன. பிரம்ம வித்தையான வேதாந்தம் கூறும் உண்மைகளை அனுபவத்திற்கு கொண்டு வர வழிகாட்டுவது ஸ்ரீ வித்தையாகும். மந்திரமும் தந்திரமும் ஸ்ரீ வித்தையிலே அடங்கும்.

பரம்பொருள் ஒன்றுதான் என்பதை "ஓம்" என்ற பிரம்மவித்யா மந்திரத்தாலும் "ஹ்ரீம்" என்ற ஸ்ரீவித்யா மந்திரத்தாலும் கூறப்படுகின்றது. பிரம்மமும், பிரம்ம சக்தியும் (இங்கு நாகமும் அம்பிகையும்) பிரிக்க முடியாததால் ஓம்காரமும் உபயாத்மகமாகும். ஹ்ரீங்காரமும் உபயாத்மகமாகும் ஆகும். "ஹ்ரீம்" என்பது மாயாபீஜமான ஸ்ரீ புவனேஸ்வரி பீஜமாகும். விதையிலிருந்து முளை, கிளை, அரும்பு, மலர், காய், கனி முதலியன தோன்றுவது போல், ஸ்ரீ புவனேஸ்வரி பீஜத்திலிருந்துதான் சக்தியின் பல்வேறு வடிவங்களான மஹா காளி, மஹாலஷ்மி, மஹா சரஸ்வதி, லலிதா,திரிபுரா, பட்டாரிகா, ராஜராஜேஸ்வரி, புவனேஷ்வரி போன்ற எண்ணற்ற சக்தி பேதங்கள் தோற்றம் பெறுகின்றனர். இவ்வாறு தோற்றம் பெற்று வரும் தேவதைகளின் சமஷ்டி மந்திர வடிவங்களில் முக்கியமானவை இரண்டு விடயங்களாகும். ஒன்று நவாக்ஷ ரி மந்திரமாகும். மற்றயது ஸப்தசதிமாலா மந்திரமுமாகும். நவாக்ஷரிமந்திரம் பிரம்ம வித்தையும், ஸப்தசதிமாலா மந்திரம் ஸ்ரீவித்தையும் சிறப்பாக எடுத்து காட்டுகின்ற அம்சங்களாகும். நவாக்ஷரி மந்திரம் தீக்ஷை பெற்றவர்கள் நவார்ணவ ஜபத்திற்கு அங்கமாக ஸப்தசதீ பாராயணத்தையும்.ஸ ப்தசதி மந்திரத்தை முக்கியமாக கொண்டவர்கள் அதற்கு அங்கமாகவுள்ள நவாக்ஷரி ஜபத்தையும் அனுஷ்டித்து வருவதை சாக்த நெறியிலே சிறப்பாக காணலாம்.

இவ்வாறு சிறப்புக்களுடன் காணப்படும் சாக்த நெறி வழிபாடுகளிலே சிறந்து விளங்கும் பிரம்ம வித்தையும், ஸ்ரீ வித்தையும் ஒருங்கே சேர்ந்து காணுமிடமாக நயினை அம்பாளின் மூல விக்கிரக அமைப்பு அமைந்துள்ள சிறப்பானது சக்தி வழிபாட்டின் உயர் நிலையாகும்

**மற்றைய ஆலயங்கள்**

ஏனைய ஆலயங்களிலே மூலவிக்கிரகங்கள் தனிமையாகத்தான் விளங்கும். சிவாலயமாக இருந்தாலும் சிவனுக்கு தனியான சந்நிதானமாகவும், சிவனுக்குரிய அம்பிகைக்கு தனியான சந்நிதானமாகும் சிவாலய அமைப்பு விளங்கும். ஏனைய தெய்வங்களாயின் குறிப்பிட்ட மூர்த்தம் மட்டுமே பிரதான மூலமூர்த்தியாகக் காணப்படும். மூலவிக்ககிரக அமைப்பிற்கு ஏற்றவாறே கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், விமானம், ராஜகோபுரம், பரிவார மூர்த்தங்கள் என்பன அமையப்பெறும்.




ஆனால் நயினை அம்பாளின் மூல விக்கிரக அமைப்பு வித்தியாசமானது. சுயம்பு வடிவமான ஐந்து தலையுள்ள நாகம் (சிவ - தத்துவம் - சிவ - வடிவம்) அம்பிகை (புவனேஸ்வரி பீடத்தில்) சமஷ்டி ரூபமான (அம்மையும் அப்பனுமாக) சேர்ந்து விளங்குவது கவனிக்கப்பாலது. எனவே பிரம்ம வித்தைக்குரிய சிவனும் (இங்கு நாகம்) ஸ்ரீ வித்தைக்குரிய சக்தியும் (இங்கு நாகபூஷணி) சேர்ந்து பிரம்ம வித்தயையும் ஸ்ரீ வித்தையையும் ஒன்றே என்பதை எடுத்துக்காட்டும் மூலவிக்கிரக அமைப்பைப் பெற்று சிறப்புடன் விளங்கும் தேவி ஷேத்திரமாக அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

### ஆலய அமைப்பு

பொதுவாக இந்து ஆலய அமைப்புக்கள் நாசரம்,வேசரம், திராவிடம் என்ற மூவகைப் பாணிகளாகப் பெற்றவை. அம்பிகையின் ஆலய கோபுரங்கள், விமானங்கள், மண்டப அமைப்புக்கள் யாவும் திராவிடப் பாணியிலே அமைந்து எழிலும், ஏற்றமும், தெய்வீகமும் ஒருங்கு சேரப்பெற்று விளங்குகிறது. வன்னி மரமே ஆலயத்தின் தல விருட்ஷ மாகும். ஊரின் மேற்கு பக்கமாகவுள்ள தீர்த்தக்கேணியே இதன் புனித தீர்த்தமாகும். இப்புனித தீர்த்தத்திற்கு "சித்தாமிர்த புஷ்கரணி" என்ற சிறப்புப் பெயருண்டு.

### உற்சவ நாயகி

மூலவிக்கிரகமாக நாகபூஷணி விளங்கியிருந்தாலும் நயினை அம்பாளின் உற்சவ மூர்த்தம் மனோன்மணி அம்பாளாகும். நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் மனோன்மணி மூர்த்தத்திலே இடது மேற்கையில் தாமரை பூவும், வலது மேற்கையில் ஜபாக்ஷதை மாலையும், மற்றைய இரு கரங்கள் அபயவரதமாகவும் காணப்படுகின்றன. உற்சவ நாயகி அம்பாள் தங்க ஆபரணங்களினால் அலங்கரிக்கப்படும் போது நாகாபரணத்தினாலும் நாகபட பூஷணங்களினாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டு நாகபூஷணியாக எழுந்தருளுகின்றாள்.

### பாம்பு சுற்றிய கல்லும் கருடன் இருந்த கல்லும்

ஆலயத்தின் மிகப் புராதனமான நிகழ்வுக் கதையினை எடுத்துக்காட்டும் அடையாளமாக அம்பிகையின் ஆலயத்தின் வடக்குப்பக்கமாகவுள்ள நடுக்கடலில் (புளியந்தீவை நோக்கிச் செல்லம் கடல் வழி) இருகற்கள் இன்று வரையும் காணப்படுகின்றன. அவை "பாம்பு சுற்றிய கல்" என்றும் "கருடன் இருந்த கல்" என்றும் அழைக்கப்படுகின்றன.

புளியந்தீவிலிருந்து அம்பிகைக்கு ஒவ்வொரு நாளும் நாகமொன்று பூக்கொண்டு வருவது வழக்கம். ஒரு முறை பூக்கொண்டு வரும் வழியில் கருடனால் வழி மறிக்கப்பட்டு அந்நாகம் கருடனால் கொல்லமுறப்பட்டது. அப்போது அவ்வழியில் வந்த வணிகன் இதனைக் கண்டு கருடனிடம் வேண்டி நாகத்தை விடுவித்தான். அப்போது அந்த கருடனும், நாகமும் இருந்த கற்களே பாம்பு சுற்றிய கல்லும் கருடன் இருந்த கல்லுமாகும். இன்று வரையும் அக்கற்கள் கடல் நடுவிலே இருந்து பழமையான கதையினை புலப்படுத்தி வணிகனால் தனது திரவியத்தைக்கொண்டு நாகேஸ்வரிக்கு ஆலயம் அமைத்த வரலாற்றையும் நினைவுபடுத்துகின்றன.

### விஷேட கருட – ஸர்ப்ப பூஜை ஆராதனைகள்

இன்றும் மகோற்சவ காலத்தில் பதினோராம் நாள் பகல் உற்சவத்தின் போது விஷேட அபிஷேகம், பூஜை ஆராதனைகள் அவ்விருகற்களுக்கும் நடைபெற்று வருகின்றன. அவ்வேளையில் கருடப்பறவை வானத்திலே வட்டமிட்டு வருவதை நேரில் காணலாம். அன்றைய பகல் உற்சவத்தில் அம்பிகை வீதி உலா வரும் போது மூலஸ்தானத்தில் உள்ள சிறிய ஐந்து தலை கொண்ட செப்பினால் செய்யப்பட்ட நாகமும் அம்பாளுடன் சேர்ந்து வீதியுலா வரும். இந்நிகழ்வுகளை விஷேட கருட - ஸர்ப்ப பூஜை எனவும், வாயுபட்சணி நாகம் வீதியுலா எனவும் சிறப்பித்து பகல் உற்சவம் நடைபெறும். இந்நாகம் அம்பிகையுடன் வெளிவந்தவுடன் காற்றும், கடலலையும் அமைதி கொள்ளும். இதன் பின்னர் அம்பிகையின் ஆலயத்திற்கு வரும் அடியார்களின் கூட்டம் அதிகரித்து கடற்பயணம் சௌகரியமாக அமைவதை இன்றும் காணலாம்.

### மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்

நயினை அம்பாளின் மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 1951 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகமும் 1963 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து 1983 ஆம் ஆண்டும் 1998 ஆம் ஆண்டும் மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. 1957 ஆம் ஆண்டும் மிகவும் சிறப்புப் பொருந்திய அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரத்தேர் வெள்ளோட்டம் கண்டிருக்கின்றது. அம்பிகை ஆலயத்தில் பரிவார நாயகியாக 1986 ஆம் ஆண்டு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளும் அறுபத்துநான்கு நாயன்மார்களின் உருவங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

### நித்திய பூஜை ஆராதனைகளும் நைமித்திய உற்சவங்களும்

கிரமம் தவறாது நாள்தோறும் நான்கு கால நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. மாத சங்கிராந்தி அபிஷேகம், மாத பூரணை தினம், ஸ்ரீ சக்ர பூஜை, சகல மாத உற்சவங்களும், விஷேட உற்சவங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. வருட பிறப்பு உற்சவம், கார்த்திகை தீபத் திருவிழா, பொங்கல் உற்சவம், பத்து நாட்கள் இலட்சனை ஆடிப்பூர உற்சவம், சிறப்பாக நவராத்திரி உற்சவம், கந்தசஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பா, தைப்பூச உற்சவம், மஞ்ச ஊர்வலம், சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம்,ஆனி உத்தரம், ஆவணி மூலம்,ஐப்பசி வெள்ளி,தை அமாவாசை, அபிராமி பட்டர் உற்சவம் என்பன மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனிமாத பூரணையை இறுதிநாளாகக் கொண்டு பதினைந்து நாட்கள் வருடாந்த மகோற்சவம்

நடைபெறுகின்றது. பதினாறாம் நாள் தெப்போற்சவம் (பூங்காவனம்) நடைபெறுகின்றது.

### கைலாய காட்சியின் சிறப்பு

மகோற்சவ காலத்தில் அம்பிகை கைலைக்காட்சியுடன் வரும் அழகு தனித்துவமானது. சிவனை அணைத்தபடியும், சிவபூஜை செய்யும் காட்சியாகவும், அனுக்கிரக மூர்த்தமாகவும் நாகம்மை சிவனுடன் வரும் போது நிஜமான கைலைக் காட்சியாகவே அமைந்திருக்கும். ஏழாம் திருவிழா இரவு கைலைக்காட்சியும், பத்தாம் திருவிழா பகல் சிவபூஜை கைலைக் காட்சியும் பதிமூன்றாம் திருவிழா பகல் கைலைக் காட்சியும் இடம்பெறும். புதுவருட பிறப்பன்றும் அம்பிகை கைலாசவாகனத்தில் எழுந்தருள்வாள்.

### நாக சாந்தியும் நாக பிரதிஷ்டையும் செய்யும் சிறப்பும் மகிமையும்

இந்து வழிபாட்டு மரபில் காணப்படும் நாக வழிபாட்டின் புனிதமான இடமாக விளங்கும் நயினை நாகபூஷணி அம்பாளுக்கு நாக சாந்தியும், நாக பிரதிஷ்டையும் செய்யும் சிறப்பும் மகிமையும் நம்பிக்கையுடன் குறிப்பிடதக்க விடயமாகும். அம்பிகையை நம்பி குழந்தை இல்லை என்று வரும் அடியவர்களுக்கு நாகசாந்தியும், நாக பிரதிஷ்டையும் செய்வதால் குழந்தைப்பாக்கியம் கொடுக்கும் கருணையுள்ளம் நிறைந்த தாயாக அன்னை நாகபூஷணி விளங்குகிறாள்.

உலகில் இந்தியா, இலங்கை உட்பட எந்த இடத்திலும் காணப்படாத ஒரு சிறந்த வழிபாடாக நாக சாந்தி கர்மாக்கள் இங்கு நடைபெறுகின்றன. முதல் நாள் இரவே நாக பாம்புகளை அரிசி மாவினால் செய்து இரவு முழுவதும் அம்பாளிடம் பிரார்த்தனைக்காக வைக்கப்படும். மறுநாள் காலை பூஜை முடித்ததும் சாந்தி செய்கின்றவர்களையும் அழைத்து அதற்கென ஈசான மூலைப்பகுதியில் அமைக்கப்பட்ட சாந்தி மண்டபத்தில் நாகசாந்திக்குரிய கிரியை,பூஜை, ஆவாகனம், ஹோமம், அபிஷேகம், பொற்சுண்ணப்பாட்டு என்பன நடைபெற்று நாகங்களை தகனம் பண்ணி, அவற்றை கடலில் சேர்த்து ஸ்நானம் செய்து, பின்பு ஆலயத்திற்கு வந்து நாகபிரதிஷ்டை செய்ய வேண்டும். நாகபிரதிஷ்டை செய்யும் போதும் நாகக்கல்லு விக்கிரகத்திற்கு திரவிய அபிஷேகம் செய்து, அதனை அம்பிகையிடம் ஒப்படைத்து கலச ஜலத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டு நாகப்பிரதிஷ்டை பூரணப்படுத்தப்படுகிறது. நாகம்மையின் அருளினால் நம்பிக்கையுடன் அம்பிகையை சரணடைந்தவர்கள் கைவிடப்பட வில்லை. அனைவருக்கும் குழந்தைப் பாக்கியத்தையும், நாகதோஷத்தையும் நீக்கி அருளியுள்ளாள் நாகம்மை.

நாகதோஷமுள்ளவர்களும், திருமணமாகாத பெண்களும் நாகபிரதிஷ்டை மட்டும் செய்யும் வழக்கமும் உண்டு. நாக சாந்தியும், நாக பிரதிஷ்டையும் செய்து அருளைப்பெறும் ஒரேயொரு இடமாக நாகம்மாளின் ஷேத்திரம் விளங்கிவருவது சிறப்புக்குறியதும், குறிப்பிடத்தகுந்ததும் ஆகும். அர்ச்சனைசெய்யும் போது வெள்ளிக்காணிக்கை பொருட்களையும், நேர்த்திப் பொருட்களையும் ஒப்படைத்து அடியவர்கள் தமது வேண்டுதலை நிறைவேற்றுவார்கள்.

### நிறைவுரை




புராதன காலமாக பல அற்புதங்களையும், ஐதீகங்களையும் கொண்டமையப்பெற்று அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடத்தில் நாகபூஷணியாக வீற்றிருந்து அருள்பாலித்து வரும் நயினை நாகம்மையின் புகழையும், சிறப்பையும், அருளையும் கூற முடியாது. சிறந்த நிர்வாக கட்டமைப்பையும், தர்மகர்த்தா சபையையும் கொண்டமைந்த இவ்வாலயம் சிறந்த சக்தி உபாசனைக்குரிய இடமாகவும், சக்தி ஷேத்திரங்களில் மிக முக்கியமானதாகவும் விளங்குகிறது.

### துணை நூல்கள்


1. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் - திருகுடமுழுக்குப் பெருவிழா மலர் பாகம் 2 (28.08.1983)
2. மகாசக்தி மகத்துவ மலர் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு, (1998).
3. மயூரமங்களம் - கொழும்பு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கும்பாபிஷேக மலர் (2000)
4. இரண்டாவது உலக இந்து மகாநாட்டு சிறப்பு மலர் - (2003).
5. இந்து ஒளி - அகில இலங்கை இந்து மாமன்ற பொன்விழா மலர் - இலங்கை, (2007).
6. குல. சபாநாதன் - நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோயில் தேர் திருப்பணிச்சபை மலர் - (1957).
7. ஐயாத்துரை - நயினாதீவு சோதிடர் நாகதீப மஹத்துவம் - நயினாதீவு நாகபூஷணி வரலாறு
8. சண்முகநாதபிள்ளை க. நா. புராதனி நயினாதீவு நாகபூஷணி
9. அண்ணா - ஸ்ரீதேவி மாஹாத்மியம், மயிலாப்பூர், சென்னை - (1973).
10. ஸ்ரீநிவாஸாச்சாரியார் - கீழாத்தூர் ஸ்ரீ சௌந்தர்யலகரி, தி லிட்டில் ப்ளவர் கம்பனி சென்னை (1985).


கட்டுரைக்குரிய மேலதிக தகவல்களைத் தந்தோர்:

- சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் - ஆதீனக்குரு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில், நயினாதீவு
- ஆ.தியாகராசா - தலைவர் அறங்காவலர் சபை - ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில். - நயினாதீவு




# நயினைப் புலவர் நாவில் நாகபூஷணி அம்மன்

சைவப்புலவர் சித்தாந்தப்பண்டிதர் நா. விசுவலிங்கம்

நாம் பெற்ற அறிவும் ஞானமும் கடவுளை வழிபட்டு முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம் என்பது நாவலர் பெருமானின் நல்வாக்கு. இறைவனை வழிபடும் முறைகளில் மிகச்சிறந்தது இறைவனின் புகழைப் பாடிப் பரவுதலேயாகும். சமயகுரவர்களும் சான்றோர்களும் இறைவனைப் பாடிப்பரவியே முத்தியடைந்ததாக வரலாறு கூறுகின்றது. "உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்று பாடினார் அப்பர். "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சம்" என்பதும் ஞானிகளின் கூற்று. "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா. நமச்சிவாயவே" என்பது சுந்தரர் கூற்று. "நாராயணா என்னாத நா என்ன நாவே" என்பது ஆழ்வார் திருவாக்கு. இறைவனே, "எனக்கு அருச்சனைபாட்டேயாகும். எனவே நம்மேல் சொற்றமிழ்பாடு" எனக் கூறியதாகப் புராணங் கூறுகின்றது. பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்பது அருணகிரி வாக்கு.

இங்ஙனம் இறைவன் புகழ்பாடி அவன் அருள் பெறுவதே இலகுவான வழியென நம்முன்னோர் கண்டறிந்தனர். இன்றும் பஜனை மன்றங்கள் பாடிப்பரவி வழிபடும் முறையை பின்பற்றி வருகின்றனர். பண்டைய ஆலயங்களில் கோவில் அர்ச்சகருடன் ஓதுவார் மூர்த்திகளும் நியமிக்கப்பட்டு தமிழோடிசைபாடி இறைவன் புகழ்பரப்பியதை நாம் அறிவோம்.

இந்த வகையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பேரில் அன்பர்கள் - அடியார்கள் பலர் பல்வேறு காலங்களில் நாவினால் பாடிப்பரவியுள்ளனர். அவ்வாறு பாடிப்பரவிய அன்பர்களில் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு அமரத்துவமடைந்துவிட்ட புலவர்களின் நாவில் நாகபூஷணி அம்மன் எவ்வாறு இடம் பெற்றாள் என்பதை மட்டும் சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரை என்பதைப் பணிவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நயினாதீவு மக்கள் வாக்கு வல்லமையும் பண்ணொன்ற இசைபாடும் வல்லமையும் உடையவர்கள் என்பது பொதுவான கருத்து. இக்கருத்து அம்பிகை கொடுத்த அருட்பிரசாதமேயன்றி வேறு யாதும் இல்லை. நான் எடுத்துக் காட்டும் புலவர்கள் - இலக்கண இலக்கியம் கற்றோ. அன்றேல் பட்டம் பெற்றோ அல்லது காரிகைகற்றுக் கவிபாடியவர்கள் அல்லர். சுயமாகவே அம்பிகை அருளாலே பாடலைப் பாடியவர்கள். இவர்களை சாதாரணமாக வரகவிப் புலவர்கள் என்று கூறுவதுண்டு.

இவ்வாறு புலமை பெற்றவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் நயினை வரகவி நாகமணிப்புலவர் ஆவர். ஈழத்துப்புலவர் சரிதத்தில் இடம் பெற்ற இப்புலவர் நயினை நீரோட்டயமக அந்தாதி, நயினை மான்மியம், வழிநடைச்சிந்து என்ற நூல்களை இயற்றியுள்ளர். இதில் நயினை மான்மியம் மட்டும் அச்சேறவில்லை. கூடிய விரைவில் அஃது அச்சுவாகனம் ஏறும் என எண்ணுகின்றேன். அவர்பாடிய நீரோட்ட யமக அந்தாதி கற்றவர்களுக் கெல்லாம் பெருவிருந்தாக அமைந்துள்ளது. அவர் பாடிய தனிப்பாடல் ஒன்றை மட்டும் தருகின்றேன்.

*"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்*
*பேணலால் அன்னை பெற்றிடுவோர்*
*உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்*
*உதவலால் அன்னை எக்கலையும்*
*சொற்றதாலன்னை உலகொடுவானும்*
*தொழுதலால் அன்னையென்றென்றும்*
*பற்ற தாங்கருணை பொழிதலாலன்னை*
*பராபரை நாகபூஷணியாள்"*

அடுத்து நமது சிந்தைக்கும் வணக்கத்துக்கும் உரியவர் ஈழத்துச் சித்தர் வரிசையில் வைத்து எண்ணப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமியார் அவர்கள். நம்மிடையே வாழ்ந்து 1948 ஆம் ஆண்டளவில் சமாதி அடைந்தவர். அவரின் சமாதிக் கோயில் நயினாதீவு காட்டுக் கந்தசாமி கோயிலின் புறத்தே அமைந்துள்ளது. அவர் நாகபூஷணி அம்மன் பேரில் பல பாடல்கள் இயற்றியுள்ளர். அவரியற்றிய பாடலில் ஒன்று பின்வருமாறு.

*"கற்றவர்க்கினியாய் நயினையம்பதிவாழ்காரணி நாரணன் தங்காய்*
*மற்றவரறியா மரகத வரையின் வாமமே வளர் பசுங்கொடியே*
*நற்றவரோடு சேயெனை இருத்தி நாதநாதாந்தமுங்காட்டி*
*முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திதா நாகபூஷணியே".*

அடுத்து ஈழத்து இல்லறஞானி எனப் போற்றப்படும் நயினாதீவில் பிறந்து உலகப்புகழ் பெற்ற சமயவாதியாக விளங்கிய திரு. க. இராமச்சந்திரா அவர்கள். இவர் ஆத்மஜோதி பத்திரிகையின் போஷகராக இருந்து புகழ்பூத்த மைந்தர்களைப் பெற்ற இல்லற ஞானியாவர். அவர் அம்பாள் பேரில் பாடிய பாடலில் ஒன்றை மட்டுமே ஈண்டு குறிப்பிடுகிறேன்.

*"அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி*
*ஐந்தொழிகள் புரி ஆதி சத்தியேநின்*
*கருணையின்றிக் கணக்கிலாக் கஷ்ட முற்றுக்*
*கதறி நிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த*
*இருளகல வழியேதும் இல்லையென்று*
*ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை*
*உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்*
*உவந்தளிப்பதுன் கடமை ஒப்பில்தாயே"*

அடுத்தபடியாக நயினாதீவு மக்களால் குட்டிப்பிள்ளை எனச் செல்லமாக அழைக்கப்பட்ட வரகவி தியாகர் இராமச்சந்திரர் ஆவர். பண்ணோடு இசைபாடும் வல்லமையுடன் கந்தபுராணம் முதலிய நூல்களுக்குப் பொருள் விளக்கம் செய்யும் பேராற்றல் பெற்றவராக இருந்தவர். யாழ்ப்பாணக் கோயில்களில் இவரின் புராணபடன உரைவிளக்கம் கேட்கப் பலர் கூடி நிற்பர். இவர் அம்பாளைப்பற்றிப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். அவை ஆழ்ந்த கருத்துடையவை நயினை நாகபூஷணியின் தெய்விகப் பெருமைக்கு ஐந்து காரணங்களைக் காட்டியுள்ள அன்னாரின் பாடலை இங்கு தருகின்றேன்.

*"மன்னுசீயர் இலங்காபுரியிலம்பிகை நின்*
*மாபெரும் புகழுக்கு இலக்காய்*
*இன்னல் மேவிய நல்லரவு சுற்றியகல்*
*இருஞ்சிறைக் கருடன் மேவிய கல்*
*இன்ன பாஷையதென் றறிவுறா எழுத்தால்*
*இலங்கு கற்சாதனம் இரண்டு*
*தன்னை நேரிலா நின் உருவெனும் ஐந்தும்*
*சாட்சியாம் நாகபூஷணியே".*

இப்பாடலை இயற்றிய அவர்கள் வாலிப வயதில் இறையடி எய்தியமையினால் அவரின் பெருமையை இக்கால மக்கள் அறிய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

அடுத்ததாகக் "கவிகஸ்தூரி" என்ற புனைபெயரில் பல்வேறு பாடல்களைப் பாடிய திரு.ஆ.இராமுப்பிள்ளை அவர்கள். இவர் ஆயுள்வேத வைத்தியர். இவர் "நயினை நாகபூஷணியின் திருக்கோலக்காட்சியும் அவள் மாட்சியும்" என்ற ஒரு சிறு நூலையும் வெளியிட்டவர். அத்துடன் ஆயிரக்கணக்கான சமரகவிகளையும் பாடியவர். இவரும் அம்பாள் பேரில் பாடிய செய்யுளில் ஒன்றை ஈண்டு தருகின்றேன்.

*"ஆணிப்பொன்முத்தெனும் மாலைசூட்டி அருகினிலே*
*பேணிப்பயந்த புத்திரரோடிந்தப் பெண்ணரசை*
*மாணிக்க இரத்தினம் வைத்தே இழைத்திட்ட வாகனத்திற்*
*காணிற் கவலை கலைந்தோடிடும் பல காதங்களே"*

மற்றும் விவேகானந்தா அச்சகத்தின் உரிமையாளராக இருந்த திரு.வே.செல்வநாயகம் அவர்களும் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய திருவிரட்டை மணிமாலை என்னும் நூலில் அம்பாளைப் பின்வருமாறு துதிக்கின்றார்.

*"சரணம் சரணம் என உனைச் சார்ந்திலன் தாரணிமேற்*
*கரணம் முன்செல்ல அதன்பின்ர்ச் செல்லுங் கதியிலிருக்கும்*
*மரணம் பவமற்றிருக்கவும் நாள்வந்து வாய்த்திடுமோ*
*அரணஞ்சிறந்த நயினையில் வாழ்அருள் அம்பிகையே"*

அடுத்ததாக சமீபகாலத்தில் சிவபதம் அடைந்த வித்துவான் காமாட்சி சுந்தரம் அதிபர் அவர்கள் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார். நாடக நடிகரும் புலமை வாய்ந்தவருமான அவர் பாடிய பாடல்களில் ஒன்றை இதன் கீழ்தருகின்றேன். இப்பாடல் இவரால் பாடப்பெற்று அச்சுவாகனம் ஏறிய நயினாதீவு நாகபூஷணி அம்மன் திருவந்தாதியில் இருந்து எடுக்கப்பட்டது.




"அற்புதமான அருளுடையாள்
அருள் நோன்பினர்க்கே
சற்குணமான நற்புத்திர பாக்கியம்
தானளிப்பாள்
முற்றிய நோய் நனிதீர்ந்திடுவாள்
மூலை மூர்த்தியருட்
பொற்பதம் போற்றிடுவார் பெறுவார்
பலபோகமுமே"

மேலே அம்பிகையைப்பற்றி கவி புனைந்து அமரத்துவம் அடைந்த நயினைப் புலவர்களின் வரலாற்றினை ஓரளவு குறிப்பிட்டேன். அத்துடன் தற்போது சீவியவந்தராக இருக்கும் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை. பசிக்கவி சி.பரராசசிங்கம், அருட்கவி வே.தருமலிங்கம், கவி இரா. குலம், சைவப்புலவர் நா.விசுவலிங்கம் ஆகியோரும் அம்பாள் பேரில் பல பாடல்களை யாத்துள்ளனர். அவற்றினைக் குறிப்பிடுவதனால் இக்கட்டுரை விரிவடையும் என்பதுபற்றி பாடல்களைக் குறிப்பிடவில்லை. இவர்களின் பாடல்களைப் பத்திரிகைகளிலும் புத்தகரூபமாகவும் பார்வையிடலாம். அத்துடன் நயினாதீவு யாத்திரிகர் தொண்டர் சபையாரும் "தேவி தோத்திரத் திரட்டு" என்னும் பெயரில் நூல்களை வெளியிட்டுள்ளனர். விரிவஞ்சி அப்பாடல்களை இங்கு குறிப்பிடவில்லை. இஃதன்றியும் வேறுபல நயினாதீவு அன்பர்களும் அம்பாளைப் பற்றிப் பாடியுள்ளதாக அறிகிறேன். அவை நூல்வடிவில் அமையாதபடியால் இங்கு குறிப்பிடமுடியவில்லை. சொப்பனத் தாண்டகம் என்ற நூலும் அம்பாளைப்பற்றியதே. மேலே குறிப்பிட்ட நயினைப் புலவரைத்தவிர யாழ்ப்பாணம் முத்துக்குமாரப்புலவர், அமரசிங்கப் புலவர், வேலணையூர் தம்பு உபாத்தியார், காவலூர்க்கவிஞர் போன்றோரும் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். இவை அச்சுவாகனம் ஏறியுள்ளன. கண்டுகொள்க.

இறுதியாக கவியோகி சுத்தானந்தர் நயினாதீவுக்கு விஜயம் செய்தபோது அம்பாள் சந்நிதியில் இருந்து பாடிய ஒருபாடலுடன் இக்கட்டுரையினைப் பூர்த்தி செய்கிறேன்.

*"உலக நாயகி உத்தமி நாயகி*
*இலகு சக்தி இறைவி மனோன்மணி*
*நலிவு தீர்த்து நலந்தரும் அம்மையே*
*பொலிவுறச் செய புதுயுக வாழ்க்கையே"*

*(நன்றி :- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு - 1998*




# நாகமணிப் புலவரின் நயினை மான்மியமும் நாகம்பாளும்

பண்டிதர், வித்துவான் க.குகதாசன், பி.ஏ.

**நாகமணிப் புலவரின் வரலாற்றுச் சுருக்கம் :-**

யாழ்ப்பாணத்தின் தென் கோடியில் அமைந்துள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவு. இதனை நாக நயினார் தீவு, மணிபல்லவம், மணித்தீவு என்றும் அழைப்பர். இது சிறிய தீவாக இருப்பினும் பல சரித்திரப் பின்னணிகளைக் கொண்டது. அது மட்டுமன்றிப் பல பெரியோர்கள் தோன்றியதால் பெருமை பெற்றதும் இத்தீவு. ஆத்ம ஞானியாகிய முத்துக்குமார சுவாமிகள் பிறந்ததும் இத்தீவிலே தான். இவர் நயினாதீவுச் சாமியார் என்றும் அழைக்கப்படுவார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்தீவில் அவதரித்தவரே நாகமணிப்புலவர். தனது கவித்துவத்தினாலேயே இவர் புலவர் என அழைக்கப்பெற்றார். இவர் பல தனிப்பாடல்களையும் வேறு இலக்கியப் படைப்புகளையும் ஆக்கித் தமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தவர். இவரது கவிதைச் சிறப்புக் காரணமாக ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் வரிசையில் ஒருவராக இடம்பெறும் பெருமையும் பெற்றார்.

இவர் 1891 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10 ஆம் திகதி கதிரேசபிள்ளை நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராகப் பிறந்தார். ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்யப் பெற்று வீரகத்திப்பிள்ளை ஆசிரியரால் நடாத்தப்பட்டுவந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று வந்தார். பின் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட தில்லையம்பல வித்தியாசாலையில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு கடமையாற்றிய சோமசுந்தர ஐயர் என்னும் ஆசிரியரிடம் சில இலக்கண இலக்கியங்களையும் கற்று வந்தார்.

அதன்பின் பாடசாலையை விட்டு விலகி யாழ்ப்பாணத்தில் வணிகர்களுக்குக் கணக்கு எழுதும் தொழிலில் சேர்ந்தார். பின் அதனைவிடுத்து, நயினாதீவுக் கிராமச் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் உள்ளூர் ஆட்சிச் சட்ட விதிகளுக்கு அமைய கிராமத்தில் ஏற்படும் சிறு சச்சரவுகளை விசாரித்து நீதி வழங்கும் கடமையையும் செய்து வந்தார். அதனால் மக்கள் இவரைக் கிராமக் கோட்டு நீதவான் என்றும் அழைப்பர். சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் மிக்கவர் ஆதலால் இவர், கவி நாகமணிப் புலவர், என்றும் அழைக்கப் பெற்றார்.

இவர் பாடும் வல்லமை பெற்றவர் ஆதலால் அக்காலத்தில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக கல்வெட்டு என்ற பெயரில் சரமகவிகள் பாடி வந்தார். அப்பாடல்களில் காலமானவரின் பெருமை புனைந்துரைக்கப்படும். உண்மையில் அது ஒரு நரஸ்துதியாகவே அமையும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் கூட இராமாயணத்தில் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளல் பற்றிப் பல பாடல்களைப் பாடியமையால் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட முடியாத அல்லற்பட்ட வரலாறு உலகறிந்த ஒன்று. நரஸ்துதி பாடுவோரின் புலமை குடத்தில் இட்ட விளக்குப் போல வெளியுலகுக்குத் தெரியாமல் மங்கி மறைந்து விடும் போலும்! கம்பராமாயணத்தில் இருந்து நரஸ்துதியாக அமைந்து பல பாடல்கள் நீக்கப்பட்ட பின்பே அது அரங்கேற்றப்பட்டது.

நாகமணிப் புலவரது புகழ் பலகாலம் வெளியுலகுக்குத் தெரியாமல் மறைந்திருந்தது. பின் நாடும் நாமும் செய்த நற்பயனால் புலவர் "சரமகவி" பாடும் வேலையை விட்டொழித்தார். "பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்" என்ற சுந்தரர் கூற்று நாகமணிப் புலவருக்கும் ஏற்புடைத்தாக இருந்தது.

நாகமணிப் புலவரின் புலமை இப்போது புதியதோர் பாதையிற் செல்லத் தொடங்கியது. இறவாத புகழுடைய பல நூல்கள் இயற்ற வேண்டும் என்றும், அதனால் திறமான புலவரென வெளிநாட்டார் வணக்கம் செய்ய வேண்டும் என்றும் எண்ணினார். அந்த எண்ணத்தில் அரும்பியவையே நயினை நிரோட்ட யமக அந்தாதியும், நயினை மான்மியமுமாகும். இவற்றில் முந்தியது அச்சுருப் பெற்று வெளிவந்துள்ளது. நயினை மான்மியம் இன்னும் அச்சு வாகனம் ஏறவில்லை. இவையிரண்டிலும் நயினாதீவின் சிறப்பும் அத்தீவில் எழுந்தருளியிருக்கும் நாகம்மாளின் பெருமையும் விதந்து ஓதப்படுகின்றன. இங்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது நூலுருப்பெறாத நயினைமான்மியம் பற்றியதாகும்.

**நயினை மான்மியம் :-**

இது நயினையது மான்மியம் என விரியும் மான்மியமென்றால் சிறப்பு அல்லது மகிமை. சக்தி பீடங்கள் பலவற்றுள் புவனேஸ்வரி பீடம் எனச் சிறப்பிக்கப்படுவது நயினாதீவு ஆகும். அங்கே கோயில் கொண்டிருப்பவள் நாகபூஷணி அம்மன் ஆவர். ஈழத்தில் உள்ள பெருமை பெற்ற அம்மன் ஆலயங்களுள் இது தலை சிறந்ததாகும். இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்கவல்லது என்பது சைவ மக்களின் நம்பிக்கை. இத்தகைய சிறப்புக்களையே புலவர் தமது நூலில் விரிவாகக் கூறுகிறார். "மூர்த்தி தலம்

தீர்த்தம் முறையாய்த் தொழுபவர்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தாயுமானவர் கூறுவார். முதற்கண் இப்பதி அமைந்துள்ள ஈழமண்டலத்தின் சிறப்பினைக் கூறி அதன் பின் நயினைத்தலத்தின் மகிமையையும், அதன் பின் அங்குள்ள அம்பிகையின் கருணைத் திறத்தினையும், பின்பு அங்குள்ள தீர்த்தத்தின் விசேடத்தையும் நயம்பட உரைத்து இறுதியாக இத்தலம் சம்பந்தமான புராண வரலாற்றுகளையும் விரித்துரைத்துத் தனது நூலை நிறைவு செய்கிறார் புலவர்.

நயினை மான்மியம், கடவுள் வணக்கம், அவையடக்கம், பாயிரம் என்ற மூன்று அங்கங்கள் போக, ஈழ மண்டலச்சருக்கம், ஸ்தல விசேடசருக்கம், மூர்த்தி விசேடச்சருக்கம், தீர்த்த விசேடச்சருக்கம், சேடன் அருச்சனைச்சருக்கம், விழாவணிச்சருக்கம், உவவனச்சருக்கம், மகாமணிச்சருக்கம், புண்ணியராச தரிசனைச்சருக்கம், மணி பல்லவச்சருக்கம், பீடிகைச்சருக்கம், நாகர்வதைச்சருக்கம், பாத்திரச்சருக்கம், ஆபுத்திரச்சருக்கம், புகார்ச்சருக்கம், மணித்தீப மகத்துவச்சருக்கம் எனப் பதினாறு சருக்கங்களைக் கொண்டது.

இம்மான்மியம் ஓராயிரம் விருத்தப்பாக்களால் இயன்ற ஒரு நூல். இந்த நூலின் பாயிரத்தில் புலவர் இதனை "நயினையின் மீது மான்மியம் மிக்க விருத்தமாய், ஏதிலாயிரம் ஐந்துடன் ஏழு நான்கு ஓதினேன்" என்று கூறியுள்ளார். இந்தச் சருக்கங்கள் பலவற்றில் பல பாடல்கள் இல்லாதுள்ளன. அவற்றை விடுத்துத் தற்போது கிடைத்துள்ள பாடல்கள் யாவும் மூலப்பிரதியுடன் ஒப்பு நோக்கி கையெழுத்துப் பிரதியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டதே இந்த ஆக்கம் ஆய்வு.

**கடவுள் வணக்கம் :-**

புலவர் தனது நூலுக்குரிய யாப்பாக விருத்தப்பாவினைத் தெரிந்துள்ளார். பக்தியனுபவங்களைத் தங்கு தடையின்றி விரித்துரைப்பதற்கு இந்த யாப்பே அனுகூலமானது. முதலில் முழுமுதற் கடவுளுக்கு வணக்கம் கூறிய புலவர், பின் தான் எடுத்துக் கொண்ட கருமம் இனிதே நிறைவுறவேண்டி முதலில் விநாயகக் கடவுளுக்கும், பின் சபாநாயகர், பராசக்தி, சிவகாமி அம்மையார், சுப்பிரமணியக் கடவுள், வயிரவக்கடவுள், திருநந்திதேவர், திருஞானசம்பந்தர் முதலான சமய குரவர்கள், சரஸ்வதிதேவி, சண்டேசுவர நாயனார் ஆகியோருக்கும் வாழ்த்துக் கூறிப் பதினைந்து பாடல்களால் கடவுள் வணக்கத்தை நிறைவு செய்கிறார். இப்பகுதியில் எடுத்துக்காட்டாக ஒரு பாடல்,

*"முச்சகமுந் தனியளிக்கும் அருள் மழை தோய்ந்தன*
*சூழலும் முதுநீர்க்கஞ்சத்து*
*அச்சனைய திருமுகமும் கருவிழியும் வெண்ணகையும்*
*ஆம்பல் வாயும்*
*கச்சணியும் இளமுலையும் மலர்க்கரமும் சிற்றிடையும்*
*கனகத்தாளும்*
*பச்சுருவுந் திகழ மணியரங்கில் வளர் சுந்தரியைப் பணிதல்*
*செய்வாம்"*




சிவகாமி அம்மை துதியாக அமைந்தது இப்பாடல். தெய்வமகளிரை வர்ணிக்கும் போது கேசாதி பாதமாக வர்ணிப்பது மரபு. இப்பாடலில் அணிச்சிறப்பாகக் கூந்தலுக்குக் கருமுகிலும், முகத்துக்குத் தாமரை மலரும், திருவாய்க்கு ஆம்பலும் உவமைகளாகக் கூறப்பட்டிருப்பதையும், கருவிழியும் வெண்ணகையும் என்ற தொடரில் முரண்தொடை அணியும் மிளிர்கின்றன. இப்பாடல் அருணாசல புராணத்தில் வரும் "காரொழுகும் சூழலாளை" எனத் தொடங்கும் பாடலையும், திருக்கோவையாரில் வரும் "திருவளர் தாமரை சீர்வளர் காவிகள்" என வரும் பாடலையும் எனக்கு நினைவூட்டுகின்றன.

ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதத்தை எழுதிய பிரம்ம ஸ்ரீ வித்துவான் சி.கணேசையர் அவர்கள் நாகமணிப்புலவர் சரித்திரத்தில் அவரின் பாடல் சிறப்புக்கு உதாரணமாக இப்பாடலை எடுத்தாளுகின்றார். இவ்வாறு பதினைந்து பாடல்களால் கடவுள் வணக்கத்தை நிறைவு செய்கிறார் புலவர். அடுத்து, அவையடக்கம் பற்றிப் பார்ப்போம்.

**அவையடக்கம் :-**

நூல் செய்யும் புலவர்கள் தாம் எத்துணைத்திறன் படைத்தவராய் இருந்தாலும் தம்மைத் தாழ்த்தி அடங்கி நடத்தல் மரபு. "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து" என்பார் வள்ளுவர். அறிவுச் செல்வம் உடைய புலவர்க்கு இது பொருந்தும். கம்பர் கூறிய அவையடக்கத்தின் சாயல் இவரது பாக்களிலும் பிரதிபலிக்கிறது. நான்கு பாடல்களால் இது நிறைவுறுகிறது.

*"எண்ணெழுத்தியல் யாப்பிலக்கணங்*
*கண்ணகத்திலுங் கண்டறியேனிவன்*
*பண்ணுமிக்கவி பார்த்திடு மேலையோர்*
*திண்ணமிக்கணி செய்வர் நற் சிந்தையால்"*

என்பது புலவர் கூற்று. 'காரிகை கற்றுக் கவிதை படிப்பதில் பேரிகை தட்டிப் பிழைத்தல் நன்றே' என்ற அறிஞர் கூற்றும் நோக்கற்குரியது.

**பாயிரம் :-**

எந்தவொரு நூலுக்கும் பாயிரம் மிக இன்றியமையாதது. "ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்பது விதி. அதற்கமையத் தனது நூலுக்கும் ஏழுபாடல்களால் பாயிரம் பாடியுள்ளார் புலவர். இப்பகுதியில் புலவர் நயினை நாகபூஷணி அம்மனின் பராக்கிரமமும் கருணைத்திறனும், நயினைத்தலம் பற்றிய பிறநூற் செய்திகளும் நயினைக்கும் மணிமேகலைக்கும் உள்ள தொடர்பும், மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்களும், கோவில் திருவிழாக்காட்சியும் கூறி ஈற்றில் நூற்பயனையும் இருபாடல்களிற் கூறிப் பாயிரத்தை நிறைவு செய்கிறார். நூற்பயனைக் கூறும் ஒரு பாடல்,




*"ஆற்று மிக்கதை யன்பொடு*
*நித்தலுஞ்*
*சாற்று கின்றவர் தண் பொருள்*
*விண்டுளோர்*
*ஏற்ற கேள்வியரே வின*
*ரின்மையின்*
*பேற்றி னோடரும் பேரின்ப*
*தெமய்துவர்"*

என்பதாகும். அடுத்து நூலில் நுழைந்து முதற்சருக்கமாகிய ஈழமண்டலச் சருக்கத்தை ஆராய்வோம்.

இச்சருக்கத்தில் மலைவளமும், தருவளமும், வயல்வளமும், கடல்வளமும், நிறைபெறு மந்திரவிலங்கை நெடும்பதியின் பெருமையெலாம் வியந்தோதப்படுகிறது. மேலும் நாயன்மாரால் பாடப்பெற்ற தலங்களின் சிறப்பும், திருப்புகழாற் பாடப்பெறும் கதிரை மலையின் பெருமையும் விரிவாகப் பேசப்படுகிறது. இலங்கையில் உள்ள சிறந்த மலைகள், ஆறுகள் இவை எனக் கூறப்படுவதோடு ஈழநாட்டில் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில், கமத்தொழிற் சிறப்புகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பின் ஈழத்தின் வடபால் அமைந்துள்ள யாழ் நகரின் சிறப்பும், அங்குள்ள சமயத்தலங்களின் பெருமையும் பேசப்படுகிறது. இச்சருகத்தில் மொத்தம் ஐம்பது விருத்தங்கள் அடங்கியுள்ளன. இதில் நாயன்மாரின் பாடல் பெற்ற தலங்களின் சிறப்பை

*"பந்தமெலா மகற்றிய சம்பந்தருமச் சுந்தரரும்*
*தந்துள தேவாரமெனுந் தமிழ் மறையிற் றனிபுகழ*
*வந்தமர் கேதீச்சரமும் மணிகொளிக்குந் தரையொலிக்குஞ்*
*சிந்(த்)துறை கோணாசலமுந் திகழ்வதிலங் காபுரமே"*

என்று உணர்ச்சி ததும்பக் கூறுகிறார்.

இரண்டாவது சருக்கமான ஸ்தல விசேடச் சருக்கத்தில் யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள நயினையெனும் வளம்பதியின் பெருமையினைக் கூறுகிறார். சப்ததீவுகளின் நடுநாயகமாக அது விளங்குவதையும், மணித்தீபம், நாகதீபம், நயினார்தீபம் என்ற பெயர்கள் வந்த வரலாறுகளும், தீவின் நிலவளம் நீர்வளம் என்பனவும் அழகுற வர்ணிக்கப்படுகின்றன.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் முன்பொருமுறை பெரியதோர் ஆலமரத்தின் கீழ்க் கோயில் கொண்டிருந்தார் என்பது வரலாறு. அவ்வாறு அவர் வீற்றிருந்த ஆல விருட்சத்தின் தோற்றத்தை வர்ணிக்கும் போது,

*"ஈண்டு பாதலத்தின் எல்லையினளவும் இடந்து வேரூன்றி*
*வானளவும்*
*நீண்டு மேலுலகம் புகத்தரும் ஏணி நிகர்த்திட நெடுங்கவ*
*டோச்சி*
*ஆண்டுமால் கிடந்த இலையெனச்சிறந்த அடைசெறிந்திரவி*
*வெங்கதிரால்*
*பூண்டு நீ நிறமுற்று உதிர்ந்த விண்மீனிற் பொதிந்த*
*செங்காதோர் வடமே"*

எனச் சிறப்பித்துக் கூறுகிறார்.

தொடுகடல் நடுவண் சூதமாய் நின்ற சூரனின் இயல்பை வர்ணிக்கும் கந்தபுராணச் செய்யுளை இது எமக்கு ஞாபகமூட்டி நிற்பதை அவதானிக்கலாம்.

கடலில் வீழ்ந்து தத்தளிப்போரைக் காப்பாற்ற உதவும் நாவாய் போல பிறவிப் பெருங்கடலில் தத்தளிப்போரைக் காப்பாற்றும் உமையம்மையது பாதாரவிந்தங்களைப் போன்றது இந்தத் தலம் என்பதை.

*"பவக்கடற் கிடைவீழ்ந்தலமருவோரைப் பாதுகாத்தின்பமே*
*பயக்குஞ்*
*சிவத்திடைப் படரும் பச்சிளங் கொடிதன் திருப்பதத் துணை*
*மலரெனவே*
*யுவப்புறத் தனைச் சூழ் அழிமேல் நாவாய் ஒழிதர மறலி*
*நோயுற்றுத்*
*தவிப்பவரயர்கைக் குறுபுணை மானத் தங்குமந் நயினை*
*யாந் தலமே"* என்னும் பாடலால் விளக்குகிறார்.

மூன்றாவதான மூர்த்திவிசேடச் சருக்கத்தில் சீரியர் வாழ்த்த, முனிவரர் வாழ்த்த, சித்தர் கந்தருவர் வாழ்த்த, வாரியர் வாழ்த்த வளர் மணிதீபத்தில் அமர்ந்த சாம்பவி என்னும் திருநாமத்தைக் கொண்ட அம்பிகையானவள் அடியார்கள் கோரிய யாவும் குறைவிலாதளிப்பவள் என மனமுருகிப்பாடுகிறார். இப்பகுதியில் முப்பது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக இரு பாடல்கள்:-

*"ஆழிவெண் டிரைக் கைதன்னால் அணிவனைக்*
*குழவி தாங்கி*
*மாழையங் கரைச் செஞ்சாலி மேற்றவழ வேற்று*
*மீழமார் தீபத்தான் றோர் இதயமே யுணரும் வித்தாம்*
*ஏழுலகளித்த வன்னை எழுந்தருள் கின்றாளன்றே"*

*"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலால்*
*அன்னை பெற்றிடுவோர்*
*உற்றதால் அன்னை விரும்பியவனைத்தும் உதவலால்*
*அன்னை யெக்கலையுஞ்*
*சொற்றதாலன்னை உலகொடுவானுந் தொழுதாலான்னை*
*யென்றென்றும்*
*பற்றதாங் கருணை பொழிதலால் அன்னை பராபரை*
*நாகபூடணியாள்"*

இவற்றின் பொருள் வெளிப்படை பெற்றதால் அன்னை என்ற பாடல் நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் உட்புறச்சுவரில் பொறிக்கப் பெற்றுள்ளதென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததான தீர்த்த விசேடச் சருக்கத்தில் நாகதீபத்தின் தீர்த்த வரலாறும் அதுகங்கா தீர்த்தத்திலும் பார்க்கச் சிறப்புடையதென்றும் கூறப்படுவதோடு ஒரு முறை அந்தத் தீர்த்தத்தில் ஆடக் கொடுத்து வைத்தவர் உடலில் உறு பிணியகன்று புத்திரசந்தானம் பெற்று ஞானமும் திரிகரணசுத்தியும் பெறுவார் எனக் கூறுகிறார். இங்குள்ள சமுத்திரத்தில் அமாவாசை, பூரணை நாட்களில் நீராடுபவர் பெறும் பயனும், அங்கு அந்தியேட்டிக் கிரியைகள் செய்பவர் அடையும் வரமும் வெகுவிரிவாக இச்சருக்கத்தில்

பேசப்படுகிறது. இச்சருக்கம் ஐம்பது திருவிருத்தங்களைக் கொண்டது. தீர்த்த விசேடம் கூறும் ஒரு பாடல்.

*"ஆகுநல் லமுதமண்டா ரமரரும் ஆடுந்தீர்த்தம்*
*மோகம தெல்லாந்தீர்ந்த முனிவரர் ஆடுந்தீர்த்தம்*
*சேகுறு மொன்பான் கோடி சித்தர்கள் ஆடுந்தீர்த்தம்*
*நாகர்களாடுந் தீர்த்தம் ஆகுமிந்நாக தீர்த்தம்"*

என்று சிறப்பிக்கிறார்.

ஐந்தாவதான சேடன் அருச்சனைக் சருக்கத்தில் பாம்பணையில் பள்ளி கொண்ட பரந்தாமன் அறிதுயில் உணர்ந்து, தனக்கு அணையாக இருந்த ஆதிசேடனுக்குச் சத்திபீடத்தின் மகிமையையும் கூறி அவளை அர்ச்சித்துய்யும் உபாயத்தையும் உரைக்கிறார்.

அது கேட்ட ஆதிசேடன் நாகதீபம் அடைந்து அன்னையைப் பலவாறு துதித்துப் போற்றினார். சிவானுபூதி அருள் வேண்டி அம்பிகையின் பாதத்தில் வீழ்ந்த சேடனை அவர் தனது திருக்கரத்தால் எடுத்து ஆதிசேடனுக்குப் பாரைச்சுமக்கும் பரிசளித்தார். பின் தில்லையின் எல்லையை அடைந்து ஆண்டவன் ஆடும் தாண்டவம் காணும்படி அனுக்கிரகித்தாள். சேடனும் அவ்வாணையை ஏற்று விடைபெற்றுச் செல்லுகையில், அம்பிகையை இராஜ ராஜேஸ்வரி என அழைக்கும் வரத்தையும், நயினைத்தீவில் அன்னையைத் தரிசிப்போருக்கு இன்னருள் புரிய வேண்டும் என்ற வரத்தினையும் கேட்டுப் பெற்றுக்கொண்டான். சேடனுக்கு விடை கொடுத்த அன்னை மீண்டும் மணிப்பீடத்துள் மறைந்தருளினாள் என்ற வியத்தகு செய்திகள் இச் சருக்கத்தில் இடம்பெற்றுள்ளன. மொத்தம் இருபத்தொரு பாடல்களால் இச்சருக்கம் நிறைவு பெறுகிறது. சேடன் அம்பிகையைத் துதிக்கும் பாடல்களில் ஒன்று.

*"தாயக மந்திர பீசையை யேநம சன்மக ராரி நமோ*
*மாயவ சோதரி யேநம வன்னமை வாகன ராதி நமோ*
*தூயக ரீலய காரணி யேநம சொற்றப வாணி நமோ*
*ஏயது மாயில தாயுல காயவளேயென வேத்தலுமே"*

*அம்பிகை சேடனுக்கு காட்சி கொடுத்த திருக்கோலத்தை,*
*"கந்தர வண் குழலிந்தன வொண்ணுதல் கஞ்சம*
*தேய்வதனஞ்*
*சுந்தர மென்குழை நித்தில வெண்ணகை சோபித மார்*
*நயனம்*
*பந்தன வின்னகி றந்தன நுண்ணிடை பாலபயம் வரதந்*
*தந்தர வின்றலை வணங்கை மகிழ்ந் தெதிர் தந்திட*
*நின்றனளால்"*

என்று வர்ணிக்கிறார்.

அடுத்த விழாவணிச் சருக்கத்தில் நாகபூஷணி அம்மன் ஆலயமகோற்சவ கால ஆரவாரமும், அங்கு வரும் பக்தர்களை எதிர்கொள்ள நயினை மக்கள் செய்யும் ஆயத்தங்களும் வெகு விரிவாகப் பேசப்படுகிறது. இப்போது உள்ளது போன்ற அன்னதான வசதிகள் அக்காலத்தில் இல்லை. பக்தர்கள் தாமே சமையல் செய்து உணவருந்தி நிம்மதியாக இரண்டு மூன்று நாட்கள் தங்கி அப்பிகையைத் தரிசித்துச் செல்லுதல் வழக்கு. அதற்கு ஏற்ப ஊர்மக்களும் சகல உதவி ஒத்தாசைகள் செய்து உறவாடி மகிழும் காட்சி மனதை விட்டு அகலாதவை. மக்கள் செய்யும் ஆயத்தங்களை வர்ணித்துச் செல்லும் புலவர் மக்களின் மனோவேகத்துக்கு ஏற்றவாறு தனது பாடல்களைப் பாடிச் செல்கிறார்.




*"ஊறெடுத்த கேணி கூவலுள்ள நீர் குளங்களைச்*
*சேறெடுத்து நாகமென்று செப்பு மென் தகட்டினான்*
*மாறெடுத்த கூடையிற் செய் வாளியோடு பெண்ணையின்*
*கூறெடுத்த வோலையிற் குயின்றபட்டை போடுவார்"*

என்பது ஒரு பாடல். அதில் மொத்தம் ஐம்பது பாடல்கள் உள.

அடுத்து உவவனச்சருக்கம் முதல் மணித்தீப மகத்துவச் சருக்கம் வரையுள்ள ஐந்நூறுக்கு மேற்பட்ட பாடல்களில் பல எமக்கு கிடைத்தில. இச்சருக்கங்களில் மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் காவியங்களில் மணிபல்லவம் என்னும் இடத்தோடு தொடர்புடைய செய்திகள் கூறப்படுகின்றன. இவற்றில் உவவனச்சருக்கத்தில் கோவலன், கண்ணகி இருவரும் இறந்துபட்ட செய்தி கேட்ட மாதவி மனமுடைந்து துயர் உற்று புலம்புவதைப் புலவர் பின்வருமாறு புலப்படுத்துகிறார்.

*"நேரோடும் பலகாலென் மனையிருந்தும் பிரியுமன்று*
*நெடுநாணில்லேன்*
*ஊரோடும் பிரிந்தவளைத் தெரிந்துறுவல் வருந்தேலென்றுறுதி*
*சொற்றாய்*
*பாரோடும் விசும்பு தொழுப் பத்தினிதனுடன் றேவர் பதியிற்*
*போந்தாய்*
*ஆரோடு புகன்றழுதென் மனத்துயரஞ் சிறிதகற்றிய*
*மருவேனான்"*

என்னும் பாடலால் விளக்குகிறார். மகாமணிச் சருக்கத்தில் மணித்தீவில் நாகரெத்தினம் பெற வந்த அரசதூதுவன் அங்கு வந்து அம்பிகை இருந்த மணிப்பீடத்தைக் கண்டு அதனைத் துதித்து வழிபட்ட விதத்தைப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்.

*"உள்ளத் துணர்வார்க் குணர்வாகி யுறைவாய் நின்சீரடி*
*போற்றி*
*அள்ளற்பிறவிக் கடல் கடப்பார்க்கு அருள்வாய் நின் சீரடி*
*போற்றி*
*விள்ளற் கரிதாம் சக்திகளாய் விரிந்தாய் நின் சீரடி போற்றி*
*எள்ளிற்றயில மெனவுலகோ டிருந்தாய் நின் சீரடி போற்றி*

*மண்ணேயானாய் உனக்கபயம் மருந்தேயானாய்*
*உனக்கபயம்*
*காண்ணேயானாய் உனக்கபயம் கதிரேயானாய்*
*உனக்கபயம்*

*பெண்ணேயானாய் உனக்கபயம்*
*பிறவேயானாய் உனக்கபயம்*
*விண்யோயானாய் உனக்கபயம்*
*விதியே ஆனாய் உனக்கபயம்"*

என்று தொடர்ந்து செல்கிறது.

இதுவரை நயினை நாகமணிப்புலவரின் நயினை மான்மியத்தில் நாகம்மை என்னும் பொருள் பற்றிய செய்திகளை இயன்றவரை சுருக்கி உரைத்துள்ளேன். "இலக்கியம்" என்பது காலக் கண்ணாடி. அதன்படி புலவர் தான் வாழ்ந்த காலத்துச் செய்திகளைத் தனது நூலின் மூலம் நாம் அறியத்தந்துள்ளார்.

*"சீரியர் வாழ்த்*
*தமுனிவரர் வாழ்த்தச் சித்தர்கந் தருவர்கள் வாழ்த்த*


*வாரியர் வாழ்த்த வளர் மணித்தீபத்தமர்ந்த சாம்பவி யடியவராற்*

*கோரிய யாவும் தருவிரை மலர்த் தாட்குறைவிலாப் பெரும் புகழென்றும்*

*வாரியினாவா யெனத்திரியாது வாழ்த்துவார் வாய்களே வாய்கள்"*

என்னும் பாடலால் விளக்குகிறார்.

*(நன்றி :- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு - 1998)*



## ஆலயக் கருவறையில் சுயம்புவாய் விளங்கும் நாகமும் அன்னையும்

சிற்பவடிவில் செதுக்கியோ செப்புருவாய் வார்த்தெடுத்தோ பிரதிஷ்டை செய்யப்படாது தாமாகவே தோன்றி வழிபாட்டிற்கு இடமாகும் தெய்வ உருவங்கள் சுயம்பு மூர்த்தம் எனவழங்கப்படும். நயினை ஆலயத்தின் கருவறையிலே ஐந்துதலைநாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது. அம்பாளின் விக்கிரகம் ஆயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்தது எனவும் அதன் முன்பே நாகப்பிரதிஷ்டை ஏற்பட்டிருக்கலாம் எனவும் காரைக்குடி எம். செல்லக்கண்ணுஸ்பதியார் 11-03-1951 இல்வெளியான "வீரகேசரி" யில் குறிப்பிட்டுள்ளார்.

சிற்பசாஸ்திர ஆராய்ச்சியாளர் எம். நரசிம்மன் அவர்கள் கூறியுள்ள பின்வரும் கருத்து (28-08-1983 கும்பாபிஷேக மலர்) நயினையில் நாகவழிபாடு எத்துணைப் பழமையானது என்பதை அறிந்து கொள்ள உதவும்.

"நயினாதீவின் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னர் ஐந்துதலை நாகப்பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாகவழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது. கலக்கற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவிற் காணலாம். அந்த நாகச்சிலை பதினான்காயிரம் வருடப் பழமையுடையது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக, சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கிறது.

நாகவழிபாட்டிலே தொடங்கி, காலப்போக்கில் நாகபூசணி வழிபாடாக வளர்ந்து அவ்வழிபாட்டின் ஆறாத் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச்சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கொள்ளலே பொருத்தமாகத் தெரிகின்றது. பிறிதொரு காலத்தில், வட இலங்கை முழுவதுமே, நாகதீவு என்றழைக்கப்படலாயிற்று. இப்பெயரே பின்னர் இலங்கை முழுவதற்கும் இடப்படுவிட்டது எனலாம்.

இம்மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும். இலங்கை எங்கணுமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழைமை வாய்ந்தது நயினை நாகபூஷணி ஆலயமே என்பதும் ஐயமின்றிப் பெறப்படுகின்றது.

(ஈழத்து ஆலயங்கள் பாகம் 1, மாமன்ற வெளியீடு)




# நயினாதீவும் அதன் பன்முகக் கலாசாரமும்


பேராசிரியர் வ. மகேஸ்வரன்


இலங்கை என்பது புவியியலாளர்களால் தீவு என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தீவிற்குள் தீவாக அமைந்துள்ள நிலக்குறைகள் பலவுள்ளன. அவை வெறுமனே திடல்களாக அமைந்துவிடவில்லை. தமிழர் பண்பாட்டினுடைய வேர்கள் பலவற்றை அவை கொண்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண தீபகற்பத்துடன் இணைந்து காணப்படுகின்ற தீவுக்கூட்டங்களுள் ஒன்றாக விளங்குகின்ற நயினாதீவின் பன்முகத் தன்மை குறித்ததாகவே இக்கட்டுரை அமைகின்றது. தீவகம் என்ற எண்ணக்கரு இன்றைய உலகமயமாதல் சூழலில் அவசியமற்றதுதான். எனினும் காலங்காலமாக தீவுகளில் வாழ்ந்தவர்கள் தமக்கான தனித்துவமான அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதையும் நவீனமயமாதலுக்குட்பட்டு தமது அடையாளங்களை இழக்காமல் இருக்கிறார்கள் என்பதையும் இவ்விடத்தில் மனங்கொள்ளல் அவசியம். இன்றைய நாகரிகப் போக்குகளால் நாம் நமது பண்பாடுகள் பலவற்றை இழந்துவிட்டோம், இழந்துகொண்டும் வருகிறோம். எனவே நமது பண்பாட்டை மீள்கட்டமானம் செய்ய வேண்டுமாயின் தீவகங்களில் தேங்கிக் கிடக்கின்ற பண்பாட்டுத் தடயங்களை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளோம். அந்த வகையில் இன்றைய காலத்தில் தீவகப் பண்பாடு என்பது அர்த்தம்பொதிந்த சொல்லாடலாக உருப்பெறுவதை அவதானிக்கலாம்.

நிலவியலடிப்படையில் தீவகம் பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றது. இலங்கையின் வடமேற்கே – யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத் தொகுதியே தீவகம் என அழைக்கப்படுகின்றது. வேலணைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, கரைதீவு ஆகிய மக்கள் குடியிருப்பினைக் கொண்டிருக்கும் எட்டுத் தீவுகளையும் கண்ணாத்தீவு, பாலைத்தீவு, கற்கடகத்தீவு, நரையான்பிட்டி, சிறுத்தீவு, கச்சதீவு போன்ற மக்கள் வாழாத தீவுகளையும் உள்ளடக்கிய தீவுக் கூட்டங்களை தீவகத்துள் அடக்கலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பௌதீகப் பிரிவு நான்கினுள் இது தீவுப்பகுதியென உள்ளடக்கப்படுகின்றது.

(குகபாலன். கா: 1994: 1)

தீவகம் பற்றிய புராதன கதையாடல்கள் பல்வேறு விதமாகப் பரவிக் கிடக்கின்றன. அவை பெருங்கற்பண்பாட்டுக் காலத்திலிருந்து ஆரம்பிக்கின்றன."ஆதித் திராவிடக் குடிகளின் பெருங்கற்பண்பாட்டு அடக்கங்களாவன கறுப்பு, சிவப்பு வண்ண மட்கலங்கள், இரும்பாயுதங்கள், சுடுமண்ணாலான வட்டமான தாயக்கட்டைகள், சங்குகள், மணிகள் முதலியன இடம்பெறுவதால் இவர்கள் ஆதித் திராவிடக் குடிகள் என்பது வெளிப்படை. ஆனைக்கோட்டை, காரைநகர், சாட்டி முதலிய பகுதிகளிற் கிடைக்கப்பெற்ற பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள். இவற்றின் வரலாற்றினை முன்நகர்த்திச் செல்கின்றன" என்கிறார் ரகுபதி. இவரைத் தொடர்ந்து பேராசிரியர்கள் போப்பிஆராய்ச்சி, புஸ்பரத்தினம், சுதர்சன் செனவிரத்ன ஆகியோர் இதனை வழிமொழிகின்றனர்.

**The archaeological opine** that the History of civilization **in northern Sri Lanka. like** other regions of Sri Lanka. began **with the early Iron age people** who migrated from south **India since 1000 B. C. Evidences** print out that the people of **this culture had lined at** Kantarōtai, Ānaikkottai, Kalapōmi, Cātti, **Pūnakari, mannar** and Māmadu in north Sri Lanka.

**(Sutharsan , 1985,** Ragabathy 1987, pusparatham **1993, Indrapāla 2005, S**ēththampalam, 2004)

(pusparatham – 2014: 11)

பெரு நிலபரப்பான யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் பல்வேறு பண்பாட்டுக்கோலங்களின் மூலமாக தீவகங்கள் விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தீவகத்தின் மனித நாகரிக ஓட்டமொன்று நிகழ்ந்திருக்கிறது என்பதை தீவகங்களில் காணப்படுகிற பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்கள் விளக்குகின்றன.

இலங்கையில் நாக வழிபாடு என்பது மிக முக்கியமாக இருந்தது என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர். அதனுடைய எச்சங்களாக இன்று யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் பல்வேறு தடயங்களால் அறிய முடிகின்றது. அவற்றை பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

1. நாக வழிபாட்டின் தொன்மை
2. பாளி மொழி இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் நாக என்ற சொல்லை பல இடங்களில் பயன்படுத்தியுள்ளன.

நாக, நாககுலம்.

3. வட இலங்கையில் 'நாக' என்ற பெயரின் செல்வாக்கு.

நாகர் கோயில், நாகராசன்

4. நாக வழிபாட்டுக் கோயில்கள்

புதூர் நாக தம்பிரான் கோயில், புளியம்பொக்கணை நாக தம்பிரான் கோயில் (வன்னி)

5. நயினாதீவில் நாக வழிபாடு

நாக– நாக தம்பிரான்

பூஷணி – அம்மன் இணைப்பு நாகபூஷணி

(Pusparathnam – 2014:18)

தீவுப்பகுதியுட்பட யாழ் குடாநாட்டில் திராவிடர் வந்து குடியேறுவதற்கு முன் நாகர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் நாகதம்பிரான்,நாகபூஷணி முதலிய கடவுளரை வணங்கினர். மகாவம்சம், தீபவம்சம் முதலியன 'நாகதீபம்' என்பது புத்தசமய வளர்ச்சியைக் கொண்டது என்று குறிப்பிடுகின்றன. நாகர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புத்தர் வந்து போனார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாக என்ற ஆண் தெய்வமும் பூஷணி என்ற பெண் தெய்வமும் இணைந்த ஒரு இணைப்பே நாகபூஷணி அம்மன் என்று ஆகியது என்றும் அதாவது ஆணும் பெண்ணும் இணைந்த ஒரு கடவுள் வழிபாடு இங்கு நிலவியது என்றும் அது நாகதம்பிரானுடன் இணைந்தது என்றும் புஸ்பரத்தினம் குறிப்பிடுகின்றார். இனி நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கருவறை பற்றிய விளக்கத்தைக் கூற வந்த பேராசிரியர் வேதநாதன்

"ஆகமமரபுக்குட்பட்ட முறையில் அமைந்து விளங்கும் இவ்வாலயம் கருவறைக்குள் நிமிர்ந்து காணப்படும் கருநாகச் சிலை வடிவமும் அதன் கீழ் உள்ள அழகிய பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அருவுருவமான அம்பாளின் திருவுருவமும் சுயம்புருவங்களாவே உள்ளன."(வேதநாதன்: 1012. ப. 17. சர்வசமய சந்நிதிகள்: பொற்றாமரை) எனக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து நயினா தீவில் நாக வழிபாடும் பெண்தெய்வ வழிபாடும் இணைந்த ஒரு தொன்ம வழிபாடு நீண்ட காலமாகவே நிலவி வருகின்றதை அறிய முடிகின்றது.

நயினாதீவை பௌத்த மதத்தின் செல்வாக்குப்பெற்ற இடமாகவும் குறிப்பிடுவர். மணிமேகலை இதற்கான சான்றாக அமைகின்றது.

*பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீ*
*அந்தரமாறா ஆறய்ந்து யோசனைத்*
*தென்திசை மருங்கில் சென்று திரையுடுத்த*
*மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வம்*
*அணியிழை தன்னை வைத்து அகன்றது*
*தானென்...*

(சக்கரவாளக் கோட்டம் உரைத்தகாதை)

இனி அங்கே விளங்கிய தருமபீடிகை பற்றியும் மணிமேகலை விபரிக்கின்றது.

*உரைபெறுமும்முழநிலமிசை ஓங்கித்*
*திசை தொறும் ஒன்பான் முழுநிலம் அகன்று*
*விதிமாணடியில் வட்டங்குயின்று*
*பதும சதுர மீமிசை விளங்கி*
*அறவோர்க்கு அமைந்த ஆசனம் ஒன்றே.*

(மூன்று முழ உயரமுடையதாகி, திசைகளில் ஒன்பது முழம் வரை அகன்று'விதிமுறைகளுக்கு அமைய வட்டம் செய்யப்பட்டு, பதுமத்தை உடைய சதுரம், அதன் மேலே ஆசனம் அது தரும பீடிகை என விளங்கியது) எனக் குறிப்பிடப்படுகின்றது.

மேலாக நாகநாட்டரசர் இருவர் போர் புரிந்த போது அதனைத் தடுத்து சமாதானம் செய்த பெருந்தவமுனிவர் இருந்து அறம் உரைக்கும் தரும பீடிகை அது.

(மணிபல்லவத்துத் துயருற்ற காதை – 45 – 60)

என்றும் அது குறிப்பிடுகின்றது. இந்த வகையில் நோக்குகின்ற போது நயினாதீவு தமிழ் பௌத்த மரபின் தொன்மையை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது.

பௌத்தம் என்ற பெரும் மரபு இந்திய நாட்டில்தான் கால்கொண்டது. அது இந்திய உபகண்டம் முழுவதும் செல்வாக்குச் செலுத்தியதோடு மட்டுமல்லாது கடல்கடந்த நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றது. இந்த வகையில் தமிழ் நாட்டில் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு பௌத்தம் பரவியது. அதனுடைய செல்வாக்கை இலக்கியங்கள் வழியும் பௌத்த பாளிகள் ஆகிய குடவரை கோயில்கள் வழியும் பிராமி எழுத்துக்கள் வழியும் அறியமுடிகின்றது. தமிழ் பௌத்தர்கள் தமிழ் நாட்டில் பரவலாக வாழ்ந்துள்ளனர். பௌத்தத் துறவிகளும் வாழ்ந்துள்ளனர். இவர்களினூடாக பௌத்தம் தமிழ் நாட்டில் நிலை பெற்றது. அதன் வழிதான் மணிமேகலையை நாம் இனங்காணுகின்றோம். இந்த பரவலும் தொடர்பும் சோழர்காலம் வரை அதாவது கி. பி 13 நூற்றாண்டு வரை நிலைபெற்றது. நாகப்பட்டினத்தில் ராஜராஜப்பொரும்பள்ளி, ராஜேந்திசோழப் பொரும்பள்ளி என இரண்டு பௌத்த விகாரங்கள் இருந்ததை கல்வெட்டுக்கள் வழி அறிய முடிகிறது. மேலும் புத்தமித்திரன் என்ற தமிழ் பௌத்தன் வீரசோழியம் என்ற இலக்கண நூலை இக்காலத்தில் எழுதினான் என்பதையும் அறியமுடிகின்றது. ஆகவே நீண்டகாலம் தமிழ்பௌத்த

மரபு ஒன்று தமிழ் நாட்டில் நிலவியுள்ளது. இந்த மரபின் ஆரம்பகால செயற்பாடாகவே மணிமேகலையின் கூற்றையும் பௌத்தபீடிகையின் விவரணத்தையும் அடையாளப்படுத்த முடிகின்றது. அந்த மரபு தொடர்ந்தும் இன்று வரை பேணப்படுவது நயினா தீவு என்கிற கலாசார மையத்தின் அடையாளமாகும்.

தீவுப்பகுதிகள் ஏற்கனவே குறிப்பிட்டது போல வெறுமனே மணல் திடல்களாக அமையவில்லை, அவை பண்பாட்டின் நிலைக்களங்களாக அமைந்துள்ளன. அந்த வகையில் தீவுப்பகுதிகளுக்கு தமிழ் நாட்டிற்கும் மற்றும் ஏனைய பிராந்தியங்களுக்குமான தொடர்புகளை இவ்விடத்தில் அடையாளப்படுத்துவது அவசியமானதாகும். இந்திய பெருநிலப் பரப்புடன் அவை இடையறாத தொடர்பைக் கொண்டிருந்தன. அதனால் ராமேஸ்வரத்திற்கும் தீவுப்பகுதிக்கும் குறிப்பாக நெடுந்தீவுடன் தொடர்புகள் நிலவி வந்தன. பசுத்தீவு என்று சொல்லப்படுகின்ற நெடுந்தீவிலிருந்து ராமேஸ்வரம் கோயிலுக்கு அபிடேகத்திற்கு பால் கொண்டுசென்றதாக பழமரபுக்கதைகள் குறிப்பிடுகின்றன. மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்த இடமான திருப்பெருந்துறை நெடுந்தீவிலே அமைந்துள்ளது என்பாரும் உளர். சம்பந்தரும் சுந்தரரும் ராமேஸ்வரம் கரையில் நின்று கொண்டு தீவுக்கூட்டங்களினூடாக கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டே கேதீஸ்வரத்தையும் கோணேஸ்வரத்தையும் பாடினார்கள் என்றும் சிலர் குறிப்பிடுவர். மேலும் புராதன காலத்து இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து வரலாற்றுக் காலகட்டங்களிலும் இப்பிராந்தியங்களில் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக சோழர் காலத்து கோயில் கட்டுமானங்கள் அவர்கள் புழங்கிய காசுகள் முதலானவை இவ்விடங்களில் கிடைத்துள்ளன. மேலும் விஜயநகர நாயக்கர் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் பிராந்தியங்களில் வந்து குடியேறினர் என்பர். அத்துடன் இராமநாதபுரத்தை ஆண்ட சேதுமன்னர்கள் காலங்களிலும் இவ்வாறான குடியேற்றங்கள் நிகழ்ந்தள்ளன என்பர். சீனர்களுடைய ஊடாட்டமும் இங்கே நிகழ்ந்திருக்கின்றது என்பதை நயினாதீவில் கிடைத்த சீனச்சாடிகளை ஆதாரமாகக் கொண்டு கருத்துரைப்பர். இஸ்லாமியருடைய தொடர்பும் இப்பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ளது என்பதற்கு சாட்டி என்ற இடத்தில் காணப்படும் பண்டைய தர்க்கா ஒன்றை உதாரணம் காட்டுவர். இவற்றுக்கும் மேலாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோருடைய ஊடாட்டங்களும் தீவகங்கள் அடங்கலும் நிகழ்ந்துள்ளன என்பதை அவ்விடங்களில் உள்ள புராதன சின்னங்களின் வழியாகவும் தேவாலயங்களின் வழியாகவும் வாய்மொழிக் கதைமரபினூடாகவும் அதிகமாக அறியமுடிகின்றது. எனவே தீவகம் என்பது பல்பண்பாட்டுப் பயில்களமாக நீண்ட காலம் நிலைத்தது என்பதை மேற்குறித்த சான்றுகளின் வழி நிறுவமுடிகின்றது.




மேற்குறித்த தகவல்கள் யாவற்றையும் தொகுத்து நோக்குகின்றபோது தீவகப் பண்பாடு என்பது பன்முகத்தன்மை கொண்டிருப்பதை விபரிக்க முடியும். சில தீவுகளை தவிர ஏனையவை குடிசனம், கோயில், வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நிலைகள் ஆகியவற்றில் நீண்ட காலம் நிலைத்திருந்தன என்பதை உணர முடியும். எனினும் கால நிலையின் ஒவ்வாமை, தனிமைப்படுத்தப்பட்டமை, நிலவளத்தின் போதாமை முதலியவை இங்கு வாழ்கிற மக்களைப் புலம்பெயரச் செய்தது. பலர் புலம்பெயர்ந்து முதலில் யாழ்ப்பாணப் பெருநகரிலும் பின்பு வன்னிப் பிராந்தியத்திலும் அதற்கும் மேலாக தொழில் காரணமாக இலங்கையின் இதரபாகங்களிலும் பரந்தனர். பரந்த இடங்களில் நின்றனர், நிலைத்தனர், வெற்றி கொண்டனர்.

நயினாதீவிலும் மேற்குறித்த அம்சங்கள் நிலவிய போதும் அங்கு நிலவிய சமயச்சூழல் அதனை யாத்திரைக்குரிய புண்ணியதலமாக மாற்றியது. நயினை, நாகபூஷணி அம்மன் ஆலயம் என்பது வெறுமனே நயினாதீவு மக்களுக்குரிய ஆலயம் அல்ல. அது இந்து மக்கள் யாவருக்குமான யாத்திரைத்தலம் என்ற அடையாளம் கொண்டது. அதனால் யாத்திரிகர்கள் எந்தநாளும் விஜயம் செய்கின்ற புனித ஷேத்திரமாக அது விளங்குகிறது. அதுபோலவே பௌத்தர்களுக்குரிய யாத்திரைத் தலமாகவும் அது விளங்குகிறது. இவற்றை விட இஸ்லாமியப் பள்ளியும் கிறிஸ்தவ தேவாலயமும் இங்கு அமைந்துள்ளது. மேலும் பாரம்பரியமான சிறுதெய்வ கடவுளருடைய வழிபாட்டுத் தலங்களும் இங்கு நிலைத்துள்ளன. இதனால் இது ஒரு பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டுக் களமாக விளங்குகின்றது எனலாம்.

இலங்கையில் பௌத்தர்களும் இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒன்று கூடுகின்ற இடமாக கதிர்காமம் விளங்குகின்றது. அங்கே இன, மத, மொழி பேதமில்லை. அது போலவே வடக்கிலும் நயினா தீவு விளங்குகின்றது. தமிழ் பௌத்த மரபும் இந்து மரபும் இணைந்த ஒரு பண்பாட்டுக் கோலத்தைக் காலங்காலமாக நிகழ்த்தி, இலங்கையினுடைய அரசியல், இன முரண்பாடுகள் யாவற்றிலிருந்தும் வேறுபட்டு, பன்முகத்தன்மை கொண்ட மையப்புள்ளியாக நயினாதீவு விளங்குகின்றது. எனவே உலக சமாதானத்திற்கும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கும் சர்வமத சமரசப் பண்பாட்டிற்கும் முன்னுதாரணமாக இது விளங்குகின்றது எனலாம்.




# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

**கு. சாந்தலிங்கம்** *(ஓய்வுபெற்ற அதிபர்)*
*செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.*

சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தோற்றம் பெற்று ஆல்போல் தழைத்து வளர்ந்துவரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் தோற்றம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் அம்பிகையின் அடியார்களுக்கு தெளிவுபடுத்துவதில் எமது சபை பெருமிதம் அடைகின்றது.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் வருடாந்த மகோற்சவ காலத்தில் அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்கள் உணவுக்காகப் பட்ட கஷ்டங்களை நேரில் கண்டு மனம் வெதும்பிய, உள்ளூர் பெரியோர்களாலும் புத்திஜீவிகளாலும், வர்த்தகப் பெருமக்களாலும் 'நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரிகர்களின் அன்னதான சபை' என்ற பெயரில் உருவாக்கப்பட்டதே இன்றைய அமுதசுரபி. இச்சபைக்கு தமிழ்நாட்டில் இருந்து நயினாதீவுக்கு வருகை தந்த தமிழ் பேறறிஞர் கி.வா. ஜகந்நாதன் அவர்களால் வழங்கப்பட்ட பெயரே 'அமுதசுரபி அன்னதானசபை' என்பது. இப்பெயர் நயினை வரலாற்றோடும் இலக்கியச் சான்றோடும் பொருத்தமுற அமைந்தமை எம் சபைக்கு மிகவும் பெருமை அளிப்பதாகும்.

எமது சபை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் இருபத்தைந்து (25) உறுப்பினர்களை ஆரம்பகால உறுப்பினர்களாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட ஓர் ஸ்தாபனமாக ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் ஆரம்பகாலத் தலைவராக நயினாதீவு கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. சி.க. தம்பையா அவர்களும், உபதலைவராக திரு.வே.கந்தையா ஆசிரியர் அவர்களும் இணைச்செயலாளர்களாகத் திரு.க.வே. பரமலிங்கம் அவர்களும், திரு.இ.இ.பூபாலசிங்கம் அவர்களும் இணைப்பொருளாளர்களாக திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்களும், திரு.சி.இ.சின்னத்துரை அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். ஆரம்பகாலத்தில் சபைக்கெனச் சொந்தக் காணி இல்லாமையால் நான்கு ஆண்டுகள் வரை தனிப்பட்டவர்களின் காணிகளில் தற்காலிக கீற்றுக் கொட்டகை அமைத்து பல கஷ்டங்களின் மத்தியில் வருடாந்த மகோற்சவ காலங்களில் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களின் பசிப்பிணி தீர்க்கும் ஒரு ஸ்தாபனமாக நடாத்தி வந்தார்கள்.

சில வருடங்களின் பின் நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சு. இராமசாமி (சக்கரைச்சாமி) அவர்களிடம் பிரதான வீதியில் தற்பொழுது மண்டபம் இருக்கும் இடத்தில் விலையாக 5 பரப்புக்காணி சபைக்கென வாங்கியதோடு, அக்காணியில் தற்பொழுது பிரதான மண்டபமாக விளங்கும் 120 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்ட மண்டபத்தை அடியார்களுடைய ஒத்துழைப்போடும், நலன்விரும்பிகளுடைய ஆதரவோடும் நிரந்தரமாகக் கட்டிப் பல வருடங்களாக அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்கள் பசிப்பிணியின்றிச் செல்லக்கூடிய வகையில் தமது சேவையைத் திறம்படச் செய்து வந்துள்ளார்கள்.

காலப்போக்கில் ஆரம்பகால உறுப்பினர் களாகவும் சபையின் பிரதான பதவிகளை வகுத்த தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் ஏனைய சில உறுப்பினர்களும் இறந்த காரணத்தால் சபையின் நடைமுறை விதிகளுக்கமைய புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த ஆரம்பகால உறுப்பினர்களோடு புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து நாற்பத்தெட்டு (48) உறுப்பினர்களைக் கொண்ட சபையாக விரிவாக்கப்பட்டது. இப்புதிய சபையின் தலைவராக திரு. த. சிவாநந்தன் அவர்களும், செயலாளராக திரு. கு. சாந்தலிங்கம் அவர்களும், பொருளாளராக திரு. கு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் நியமிக்கப்பட்டு முன்னோர் காட்டிய வழியில் யாவரும் போற்றக்கூடிய வகையில் தம் சேவையைத் திறம்பட செய்து வருகின்றனர்.

வருடாவருடம் பெருகிவரும் அடியார் கூட்டத்தை ஒரு மண்டபத்தில் வைத்து உணவளிக்க முடியாமையினாலும், சபைக்கென வாங்கப்பட்ட காணி போதாமையினாலும் முன்னர் காணி தந்த உரிமையாளராகிய திருமதி. சக்கரைச்சாமி அவர்களிடம் மிகுதியாக இருந்த 12 பரப்புக் காணியையும் சபையினர் விலையாக வாங்கியதோடு அக்காணியில் 100 அடி நீளமும் 32 அடி அகலமும் கொண்ட புதிய மண்டபம் ஒன்று சபையினதும் அப்போதைய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்த மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நிதி உதவியுடனும் அமைத்து விழாக்காலத்தில் வரும் அடியார்கள் எவ்வித தடையுமின்றி குறுகிய நேரத்தில் உணவருந்திச் செல்லக்கூடிய வகையில் சேவையாற்றி வருகின்றனர். மேலும் இம்மண்டபம் விழாக்காலம் அல்லாத நாட்களில் பொதுமக்கள் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் நடாத்துவதற்கும் குறைந்த கட்டணத்தோடு உதவி வருவது பொதுமக்கள் மத்தியில் பெருஞ்சேவையாகப் போற்றப்படுகின்றது.

இந்நிலையில் சபையின் வளர்ச்சியில் மிகவும் ஈடுபாடு கொண்டவராகவும் ஆரம்பகால சபை உறுப்பினராகவும்

இருந்த காலஞ்சென்ற திரு. வே. சிவப்பிரகாசம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால் 50 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஒரு களஞ்சிய மண்டபம் பல இலட்சம் ரூபா செலவில் நன்கொடையாக அமைத்துத் தந்து வளர்ந்துவரும் சபையின் சேவைக்கு வளம் சேர்த்துள்ளமையை சபையினரும் ஏனையோரும் என்றென்றும் மறக்கமுடியாததாகும். இத்துடன் எமது சபைக்கு வடமேற்கே உள்ள சுமார் 10 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியை அதன் உரிமையாளர்களாகிய திரு திருமதி. இ. தியாகராசா குடும்பத்தினர், திரு. திருமதி. இ.கனகசபாபதி குடும்பத்தினர் ஆகியோர் சபைக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர். திருமதி மு. க. பொன்னம்பலம் குடும்பத்தினராலும் திரு திருமதி. தியாகராசா குடும்பத்தினராலும் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் இரண்டு நன்னீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டு சபைக்குத் தேவையான நன்னீர் பெறப்படுகின்றது. இவர்கள் அனைவருக்கும் அம்பாளின் திருவருள் என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

மேற்கூறப்பட்ட அடியார்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் முன் விறாந்தைகளுடனும், முகப்பில் விசாலமான மண்டபத்தோடும் கூடிய 36 அறைகளைக் கொண்ட ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டப அறைகள் விழாக்காலங்களிலும் ஏனைய நாட்களிலும் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் குறைந்த கட்டணத்தோடு தங்கிச்செல்ல பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவையன்றி சென்ற 18.03.2003இல் ஆரம்பிக்கப்பட்ட நூலகமும், அறநெறிப் பாடசாலையும் திறம்பட இயங்கி வருகின்றன. எமது அறநெறிப் பாடசாலை வகுப்புகள் நயினாதீவில் உள்ள மூன்று பாடசாலைகளிலும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடனும், அவ்வித்தியாலயங்களின் அதிபர்களின் ஆதரவுடனும் எமது சபையால் நியமிக்கப்பட்ட 12 ஆசிரியர்கள் மூலமாக பிரதி ஞாயிறுதோறும் நடாத்தப்பட்டு வருகின்றன. அறநெறிப்பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு அவ்வப்போது இந்து கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நூல்களும், பயிற்சிக் கொப்பிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன், இந்து கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சீருடைத்துணிகள் ஒவ்வொரு மாணவர் களுக்கும் ஏற்றவகையில் எமது சபையின் செலவில் சீருடைகளாக தைத்து வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். எமது அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களில் இருவர் தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ள தோடு, பல மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சையில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் எமது அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப்போட்டிகளும், நால்வர் விழா, சேக்கிழார் விழா, நவராத்திரி விழா போன்ற விழாக்களும் நடாத்தப்பட்டு அவர்களது சமய அறிவு மேலும் மேலும் வளர்க்கப் படுகின்றமை பாராட்டுக்குரியவையாகும்.

இவைதவிர எமது மண்டபத்தின் கிழக்குப்புறமாக உள்ள பிரதான வீதியில் இந்தியாவில் இருந்து வருகை தந்த சிற்பாசிரியர்களைக் கொண்டு அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களை 'அமுதசுரபி அழைக்கின்றது' என்ற பாவனையில் பல இலட்சம் ரூபா செலவில் ஒரு அழகிய வளைவுக் கோபுரம் யாழ் குடாநாட்டில் இல்லாத வகையில் அமைக்கப்பட்டுள்ளமை எமது சபைக்கு மேலும் சிறப்பினைக் கொடுப்பதாகும்.





இன்றைய நிலையில் எமது சபையில் 1200 அடியார்களுக்கு ஒரே தடவையில் உணவளிக்கக்கூடிய இடவசதியும், சுமார் 25000 அடியார்களுக்கு ஒருமுறையில் சமைத்து சபை பரிமாறக்கூடிய தளபாட வசதிகளும் உள்ளன.

எமது சபையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களைத் தவிர மூன்று (3) ஊழியர்கள் மாதாந்த வேதனத்தில் கடமை புரிகின்றனர். இவர்கள் தவிர எமது சபையால் அன்னதானம் வழங்கப்படும் அம்பாளின் மகோற்சவ காலங்களிலும், ஆடிப்பூரம் தைப்பூசம் போன்ற பெருவிழாக்களிலும் தேவைக்கேற்ப சமையல்காரரும் மண்டப பணியாட்களும் வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். இவர்களுக்கு அக்காலங்களில் வழங்கப்படும் வேதனம் குறைவுடையதாக இருந்தாலும் அவர்கள் அல்லும் பகலும் சபை உறுப்பினர்களோடு அயராது உழைத்து சென்ற ஐம்பது ஆண்டுகாலமாக சபையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்து வருகின்றார்கள் என்பதைக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இறுதியாக சென்ற ஐம்பதாண்டுகளுக்கு முன் இரவல் காணியில் தற்காலிக கீற்றுக் கொட்டகைகள் மூலம் அன்னதானம் வழங்கிய எமது சபை தற்பொழுது தனக்கென 32 பரப்புக் காணிகளையும் ஐம்பதாயிரம் மக்கள் வரை தங்கிச் செல்லக்கூடிய பாரிய மண்டபங்களையும் பிற வசதிகளையும் கொண்டு விளங்குகின்றதென்றால் அது அம்பாளின் திருவருளினாலும் தன்னலமற்ற அடியார்களின் நன்கொடை வளர்ச்சியினாலும் ஏற்பட்ட பெருவளர்ச்சியே எனக் கூறுவதில் பெருமை அடைகின்றோம். இவ்வாறு ஆண்டுதோறும் எமது சபையில் நடைபெறும் சேவை பெருந்தொண்டெனக் கருதிப் பணம், பொருள் உதவி வருகின்ற அடியார்களுக்கும், வர்த்தகப் பெருமக்கள், உத்தியோகத்தர்கள், விவசாயப் பெருமக்கள் மற்றும் பெரும் நிதிகளைத் திரட்டித் தருகின்ற புலம் பெயர்ந்து வாழும் அபிமானிகள், சபை உறுப்பினர்கள், நற்சேவைத் தொண்டர்கள், சேவையாளர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்துச் சபையின் பணிவன்பான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*(நன்றி: நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை - ஐம்பதாவது ஆண்டு நிறைவு பொன்விழா மலர் - 2009)*

# ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளால் (நயினைச் சுவாமிகள்) பாடப்பெற்ற நாகபூஷணி அந்தாதி



### விநாயகர் வணக்கம்

முத்திநாயகனே போற்றி மூலநாயகனே போற்றி
சித்தி நாயகனே தேவதேவ நாயகனே போற்றி
சத்தி நாயகனார் தந்த தனிப்பெரு முதலேவீர
கத்தி நாயகனே எங்கள் கடவுளே பேற்றி போற்றி!

### நாகபூஷணி அந்தாதி

1. ஓங்காரசக்தி உமையே நினதடியே னுளத்தின்
தாங்கா வருத்தம் தருமிடராதியைச் சங்கரித்து
நீங்காத் தியானம் நிறைஞானம் ஆனந்த நேயநிலை
பாங்காய் அருள்சிவையே பரையே பரமானந்தியே.

2. ஆனந்தவல்லி அகிலாண்ட நாயகி அம்பிகையே
மோனந்தரு முத்திவித்தே மயக்கமுனைப் பறுத்து
ஈனந்தரு வினைஎய்யா தொழித்து யமனணுகா
ஞானந்தர உமையே நயினாநகர்நாகம் மையே.

3. நாகம்மையே நளினாசனர் நாரணனாற் கரியர்
பாகம்மையே பரமானந்த வல்லி பதாம்புயத்தை
தாஇம்மையே தமியேன் இடர்தீர்த ரராசசிவ
யோகம்மையே உதவே உமையே உயர்உத்தமியே.

4. உத்தமியே என்னுயிர்க்குயிரே உணர்வுக் குணர்வே
பத்தினியே பரமானந்த வல்லி பதாம் புயத்தை
வைத்து நிமலமாயாதி கர்மம் மறலியற
எத்தினியே இடர்எல்லாம் தவிர்த்தெனை ஏற்றருளே.

5. அருளே அருளின்வடிவே அகண்ட அசரசா
பொருளே அனைத்தையும் பெற்றவளே என்பிழை பொறுத்து
இருளே தருவினை எய்யாதொழித்து யமனணுகாப்
பொருளே புகழ்கிளியே சிவமாம் புணர்ஒளியே.

6. ஒளியே ஒளியின் உருவே அடியர் உளக்கமலத்
தளியே அருந்தி அமர்சுரும்பே அடியேனைத் தொடர்
பழியே கழித்துப் பராநந்த மோன பரமசுக
மொழியே முடிவில் முதல்வாமியே அருள்முக் கண்ணியே.

7. முக்கண்ணி முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்தொழச்
செங்கண் அரியயன் தேவியும் இந்திரன் தேவியும் நின்
பக்கத்து நின்றுபணி செய்வர் அன்னை பதாம் புயம்வைத்
துய்க்கொள்வதுன் கடனே எனையீன்ற உமையவளே.

8. உமையே இமையத் திருந்தவளே உயிர்கட்குறுதி
தமையேதருநற் தயாநிதியே வினைச்சஞ் சலங்கள்
எமையே தொடர்ந்திடர் எய்யா தொழித்து யமனணுகா
தமையே அடிச்சுவடு என்தலைமேல் அருள் அம்பிகையே.

9. அம்பிகையே என் அருந்துணையே நின்னடி பிடித்து
நம்பிநின்றேன் இடர்எய்யா தொழித்துநவை களித்து
வெம்புகின்றேன் வினைமேவாமல் அந்தகனார்வெருட்டு
வம்பினில் என்னைவிடா தாண்டி மலர்வைத்தருளே.

10. வைத்தருள் நாக மகாராஜ வல்லிவடிவழகி
பக்தர்பல்கோடி தொழப் பங்கையாதனன் மால்மகவான்
எத்திசை யோரும் பரவுநின்சேவடி எய்தஇடர்
அத்தனையும் கெட்டதன்னே பரானந்த மானந்தமே!

### ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளால்
### (நயினைச் சுவாமிகள்)
### பாடப்பெற்ற
# நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை




கற்பகக் கன்றைக் கடம்பனைத்
தந்த கனகவரை
அற்புத மோன அருள் நாகம்
தாங்கும் அமிர்த வல்லி
தற்பரை வாமம் தழைத்தே
சகல உயிர்களுக்கும்
நற்பதியே எனைப் பெற்ற
சதானந்த நாகம்மையே. 1

பெற்றதாய் பார்க்கப் பிள்ளையான் வருந்திப்
பிறப்பென்னும் சாகரத்தாழ
நற்றவ மில்லா என்னைநீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
செற்றவக் கரையி லேறியான் உய்யத்
துணைஉனை யன்றியாருளர்சொல்
கற்றவர்க் கினியாய் நயினயம் பதிவாழ்
கண்மணி நாகபூஷணியே 2

அம்பிகை அமலை அரியவர்க்கெட்டா
ஆரணி பூரணிகெளரி
நம்பினோர்க் கின்பம் தரும்மனோன்மணியே
நற்றவரோ டுறவாக
வெம்பி வாடாதுன் கடன்வினை நீக்கி
விடுவதுன்கடன் வினைநீக்கித்
தம்பிரான் மோன சற்குரு போகம்
தந்தருள் நாகபூஷணியே 3

தந்தருள் ஞானசாதனம் சத்தியம்
தவறிலா நெறிபொறை அறிவு
பந்தமால் எய்யாப்பக்தி பேரன்பு
பகலிரவுன் அரவிந்த
அந்தமே யில்லா அடியிணை மாறா
தருள்புணர்ந் தோங்குநற்றியான
சிந்தையாய் மோன தேசிகன் திருத்தாள்
சேர்த்தருள் நாகபூஷணியே 4

சேர்த்தருள் அன்னே தீவினைகழியச்
ஜெனனமு மரணமுமொழியக்
காத்தருள் என்னை நின்கையில் தந்தேன்
கருணையே ஒளிவிழி பரப்பிப்
பார்த்தருள் ஈன்ற பகவதி ஆயி
பங்கயத்தாள் முடிசூடி
நீத்தருள் பாவ நிலைகெட மோன
நிலையருள் நாகபூஷணியே 5

பாவமே விளையும் பாழ்வினைஏதும்
பற்றிடாதிருக்க நின்பாலே
தாகமே மறவாதோர் நிலைபக்தி
தண்ணளி வளமருள் ஞான
யோகமே உதவி உலகெலாமீன்ற
உத்தம ருக்குற வாகிப்
பாகமே நீங்காப் பரமபரானந்த
பதமருள் நாகபூஷணியே 6

கற்றவர்க் கினியர் நயினையம் பதிவாழ்
காரணிநாரணன் தங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின்
வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ ரோடு சேயெனை இருத்தி
நாதநாதாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த
முத்திதா நாகபூஷணியே 7

முத்தியாங் கரையைப் பற்றி நானுய்ய
முன்னதாய் முரணலை மோதி
வற்றிடாமாய வாரிதி யதனில்
மயங்கி வீழ்ந்தாழ்ந்திடா வாறு
சத்தியாய்ச சிவமாயத்தனிப்பரம் தானே
தானுமாய் நின்ற தற்பரையே
சித்தெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாள்
திருமணி நாகபூஷணியே 8

காத்தெனையாளும் கனகமாவரையே
கமலையும் காயையும் மருங்கே
நீத்தவர் அமரர் கருடகெந்திருவர்
நின்பணிபுரிபவர் அன்னே
வேர்த்தவ ராய்நின்றுயிர்த் திரளாட்டு
வினையெலாம் பற்றி நீறாகப்
பார்த்தருள் விழியைப் பரப்புதி ஈன்ற
பார்ப்பதி நாகபூஷணியே 9

பார்ப்பதியேக பதியரன்பங்கி
பங்கயச் சிருட்டி பல்லுயிர்க்கும்
கார்ப்பதி பதியாய்க் கதிதருங்கா
தங்கையே கருணைமாகடலே
சீர்ப்பதியாகித் தெளிவுற ஈன்ற
சேயென உணர்த்தி ஈதுஎன்றே
பார்த்துளரா தாண்டடருள் புரிஞான
அம்பிகையே நாகபூஷணியே 10




# நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல்

**ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப் புலவர்**

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழாலூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைத்த களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம். 01

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டாளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 02

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன்முதலுர கர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 03

கொம்பினொடு துடிமுரசு முழவா மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 04

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 05

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்று
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 06

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 07

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 08

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 09

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
தனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய முமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. 11

# தேவி பஞ்சகம்

—— இல்லறஞானி க. இராமச்சந்திரா ——

விண்ணிருந்து குண்டெறியும் வெறியர் கூட்டம்
வேரோடிப் புவியையிட்டு மறையவேண்டும்,
அண்ணலார் காந்தி சொன்ன அஹிம்சா தர்மம்
அவனியை ஆள்பலருளத்தை ஆளவேண்டும்,
மண்ணுலகில் சகோதரத்வம் மலியவேண்டும்
மக்களெல்லாம் வறுமையின்றி வாழவேண்டும்
நண்ணுவார் தமைக்காக்க நயினைமேவும்
நாகபூஷணி அருள் நீ பாலிப்பாயே! 1

சுத்தான்ம சித்திபெற்ற துறவோர் மூலம்
சுத்த சமரச மார்க்கம் துலங்கவேண்டும்,
தத்துவ ஞானியர் கூட்டம் தழைக்கவேண்டும்,
தரணிமுற்றும் அடிமையின்றி வாழவேண்டும்,
சத்தியமும் அன்பும் எங்கும் பரவவேண்டும்,
சகஉயிரும் ஒன்றென்ற தகைமைவேண்டும்
பத்தருடன் முத்தர்களும் பணிந்துபோற்றும்
பரம தயாபரி அருள் நீ பாலிப்பாயே! 2

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை,
என்னினத்தார் வாழ்வொன்றே கருதவில்லை,
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுறவேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே! 3

முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்,
முனிவர்க்குந் தேவர்கட்கும் முதன்மை யீந்தாய்,
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமை யீந்தாய்,
பேரின்பக் காதல் வளம்பெருக வைத்தாய்,
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்,
இந்நாட்டைச் சொந்தமென்னும் இரு இனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்னாய்?4

அருளுவாய் அனைத் துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரிஆதி சக்தியே! நின்
கருணையின்றி, கணக்கிலாக் கஷ்ட முற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லை யென்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்ப துன்கடனாம் ஒப்பில் தாயே! 5

(நயினாதீவு நாகபூஷணியம்மன்மீது நவராத்திரி தோத்திரமாக
இயற்றப்பட்ட இப்பஞ்சகம் அத்தேவி சந்நிதானத்தில்
26-09-57, வியாழக்கிழமை மாலை சமர்ப்பிக்கப்பட்டது.)

# 'அமுதசுரபி'






மணித்தீப மெனும்நயினை தீவுநனி
வாழியதில் மகிழ்ந்து கோயில்
பிணிப்பிறவி யறுப்பதற்காக கொண்டுவரும்
அரவணிந்த பெரியாள் வாழி
கணித்திதுவே பேரறமென் றன்னதானம்
செய்யும் கருத்தோர் வாழி
அணித்தெனவே யார்க்குமனம் தரும் அமுத
சுரபியில்லம் அலர்ந்து வாழி!

– அறிஞர் கி.வா. ஜகந்நாதன், தமிழ்நாடு, இந்தியா

அன்புள நீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற, ஆற்றத்
தொண்டுசெயப் பல அன்பர் தோன்றத் தோன்ற
தோற்று சுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடியமுத சுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி
கோடானு காலமெல்லாம் வாழி வாழி!

– கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை , நயினை

# மனோன்மணி மாலை

—— யோகி சுத்தானந்த பாரதியார் ——

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மனமாய விருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமன வீறு தருவாய்
பொங்குதிரை யாழிபோல் என்னுளம் பூரிக்கப்
பொதுவேத முர சொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்து சாந்தம் அளிப்பாய்.

செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்ய ஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருளாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக்காத்து அருள் அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம்சுத்த
சக்தியே போற்றி! போற்றி!




# நயினாதீவு
# நாகேஸ்வரியம்மை பதிகம்

**முத்துக்குமாருப் புலவர்**

சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடர் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றோ
மந்திர காரண ரூபரூ பாதிசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந் தரிகௌரி நயினைமாநகர்க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (1)

சோடுற்ற நவரத்ன குப்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில ளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்தூ ரமும்
தோடுற்ற கொந்தளக மரகதப் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவி னாலே
தெரிசிக்க வருடந்து நீடாயு ளும்பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினா
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (2)

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாச வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகிக்
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூ றுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற்கொரு சகோதரி யென்ன வந்தருளும்
நாக பூஷணீ நாரணீ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (3)

சத்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி யராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளைபொன்னி னம்பலவ
ருடனிட மகிழ்வு மேவும்
நித்தியகல் யாணிசாம் பவிபுவன கௌமாரி
நிமலமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடி யவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி பெய்துநயி னாநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (4)

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறவழித் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமையிடர் நெளியவரு ஞமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும்நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (5)




## ஆலய வரலாற்றுக் கட்டங்கள் – ஒரு பார்வை

லைடன்தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, என்பவற்றோடு நயினாதீவும் சேர்ந்து சப்ததீவுகள் எனப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவு செல்லும் கடற்பாதையில் நடுநாயகமாகத் தென்மேல் திசையில் 20மைல் தொலைவில் உள்ள இத்தீவானது தனது கரையின் குறிகாட்டியாக நாகபூஷணியம்மையின் எழிலார்ந்த கோபுரத்தினைக் கொண்டுள்ளது. "ஓம்சக்தி சக்தி" என்று கடல் அலைகள் சப்தித்துத் துதிபாட உதய சூரியனின் வெண்பொற்கதிர்கள் கோபுரத்தின் மீது படர்ந்து பளிச்சென ஒளி வீச தெய்வீகத்தின் திருவருளே இது என வியப்புற அன்னை நாகபூசணி, நயினையிலே அருளாட்சி செலுத்திவருகின்றாள்

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழு மதுமாரி சொரியுநயி
னாநகரி ணண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (6)

வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகரவிழி வலை வீசியே
மின்கய மதன்சாலுள்ள விட்டடைத் துளபெரு
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்னைமுன்
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றைவேண் டிச்சடில
நண்கொண் டிடு நஞ் சுமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (7)

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவா சிவாய
எப்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ

அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தழுவு
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்த ருளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (8)

கந்தான சொரிசச் சினக்கும் கடாதடக்
கைமலை முகத் தவுணனைக்
கால்கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காத லனைமன் றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பந் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூவுலகு நீயா கையால்
சித்தா குலங்கொண்டு திரியநான் முறையோ
தினந்தி னம்சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பி னால்வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (9)

சீர்தங்கு தண்கனை யெனச்சேர் மனத்திற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்டவடுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராசர மெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருய வென்றுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. (10)

# நாவலர் பெருமானின் வழியில் ஆன்மீக எழுச்சி



**மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த வருடம் (2015) ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் தொகுப்பு.**

இந்த மண்ணில் சைவத்தைப் பற்றி சிந்திப்பதற்கு வித்திட்டவர் நாவலர் பெருமான். நல்லை நகர் நாவலர் பெருமான் இல்லை என்றால் இன்று சைவப்பாடசாலைகள் இருந்திருக்க வாய்ப்பில்லை. சைவ ஆசிரிய கலாசாலைகள் உருவாகியிருக்க வாய்ப்பு இல்லை. சைவப் பிரசங்கங்கள் நடைபெறுவதற்கும், சைவப் பாரம்பரியங்களை பண்பாடுகளை குடும்பங்கள் பின்பற்றுவதற்கும் வாய்ப்பில்லாமல் போயிருக்கும். அந்த பெரும் தெய்வமகன் நாவலர் பெருமான் வழிகாட்டிய பாதைதான் இன்றைக்கும் எம்மிடத்தில் எச்சமாக இருக்கின்ற விடயம்.

ஈழத்து சைவத்தின் வரலாற்றை சொல்லுகின்றவர்கள் நாவலர் பெருமானின் காலம் என்பது ஒரு மறுமலர்ச்சி காலம் என்பார்கள். மன்னர்கள் சமயத்தை வளர்த்த காலமெல்லாம் போய், ஒரு நைட்டிக பிரம்மச்சாரியான இளைஞன், தனது வாழ்வை அர்ப்பணித்து இந்த நாட்டிலே சைவமத எழுச்சியை ஏற்படுத்தியதை எவருமே மறந்துவிடமுடியாது. மன்னர்கள் தாங்கள் செய்த சாதனைகளை கல்வெட்டிலே எழுதியிருப்பார்கள். இல்லையென்றால் மன்னர்களுடைய வரலாற்றை ஒவ்வொரு நாடுகளும் ஏதோவொரு வகையில் சொல்லிக்கொண்டிருக்கும். ஆனால் ஒரு தனிமனிதன், ஐம்பத்தாறு வயது மட்டும் இந்த மண்ணிலே வாழ்ந்த ஒருவர் எவ்வளவோ வாய்ப்பு வசதிகளையெல்லாம் உதறிவிட்டு பிரம்மச்சரிய வாழ்க்கையிலிருந்து சுதேசிகளுக்காக சைவப்பாடசாலையை உருவாக்கி, நிறுவன ரீதியாக சமயத்தை வளர்க்கவேண்டும் என்று எடுத்த முயற்சியினுடைய அறுவடைதான் இந்த சபை, இன்றைக்கு இருக்கின்ற கோயில் வழிபாடு, தேவாரம் திருவாசகம் பாடுகின்ற முறை, விளக்கேற்றுதல் போன்றவையாகும். இந்தப் பாரம்பரியமெல்லாம் எச்சமாக இருப்பதற்கு நாவலர் தான் காரணம். அந்த நாவலர் பெருமான் காட்டிய பாதையில் சமய ஆன்மீக எழுச்சியை எப்படி ஏற்படுத்தலாம் என்பது பற்றி சில கருத்துக்களைச் சொல்வது பொருத்தமானது.

நாவலர் பெருமானுடைய காலம் இந்த நாட்டிலே அந்நியர் ஆட்சிசெய்த காலப்பகுதி. நாவலர் பெருமான் காலத்திலும் ஆங்கில மோகம் இருந்தது. நாகரிகத்தின் பக்கமாக திரும்பிப்போகின்ற பார்வை இருந்தது. பிறசமயத்திலே போய்ச் சேர்ந்தால் உயர்ந்த பதவி கிடைக்கும் என்பதற்காக வீட்டுக்குள்ளே சைவம் வெளியே இன்னொரு சமயமாக வாழ்ந்து ஏமாற்றுகின்ற ஒரு சமூகம் இந்த நாட்டிலே இருந்தது. ஆனால் நாவலர் பெருமான் இவற்றையெல்லாம் முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என எடுத்த முயற்சியில் அவர் இளம் வயதினராக இருந்தும் வெற்றிகண்டார். நாவலர் சிந்தனையைப் பின்பற்றி, பின்னாலே வந்தவர்கள் நாவலர் பாதையில் சென்றதனால், நாவலர் கண்ட பல கனவுகள் பின்னாளில் நனவாகின. இன்றைக்கு அந்த நனவுகள், அறுவடைகளையெல்லாம் பாதுகாப்பது எப்படி என்று சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஆங்கிலேயர்கள் கெட்டித்தனமாக கல்வியைக் கொடுத்து, மக்களை மதம் மாற்றிவந்த நிலையில், இதற்கு முடிவுகட்டவேண்டும் என்று நாவலர் பெருமான் விரும்பினார். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் போது பல கோயில்கள் அழிக்கப்பட்ட நிலையில், கீரிமலை நகுலேஸ்வரம் கல்மேடாக இருந்தது. திருக்கேதீஸ்வரம் காடாகக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் எத்தனையோ கோயில்கள் அழித்த இடத்திலே தேவாலயங்கள் நிமிர்ந்து நின்றன. அன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் இருந்த இடந்தான் முத்திரைச்சந்தை பகுதியில் இன்றுள்ள தேவாலயம். இந்தத் துன்பங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நினைத்த நாவலர் பெருமான் "எல்லீரும் புறப்படுவீர்; சமயத்தை எழுச்சிகாண வைப்பீர்; எங்கள் சைவத்தமிழர்களுடைய சொத்துக்களையெல்லாம் அழித்துவிட்டார்கள் அவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு புறப்படுங்கள்" என்று, கல்மேடாக இருந்த கீரிமலை சுற்றாடலில் நகுலேஸ்வரத் திருப்பணிக்கு ஒரு பிரசுரத்தை வெளியிட்டு, கீரிமலையிலே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியவர் நாவலர்.

திருக்கேதீஸ்வரம் காடாகிப் போயிருந்த நிலையில், கோயிலிருந்த இடம் எங்கே என்று தெரியாமலிருந்தபோது, கலப்பையினாலே உழுத இடத்தில் சில எழுந்தருளி விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பான செய்தியை மோர்னிங் ஸ்ரார் என்ற பத்திரிகையில் படித்த நாவலர் திடுக்குற்றார். "இதுதான் மாதோட்ட நன்னகர்.தேன் பொந்தொன்று அகப்பட்டு விட்டது. பாடல்பெற்ற தலம் அந்தப் பற்றைக்குள்தான் இருக்கின்றது. சைவ மக்களே புறப்படுங்கள், திருக்கேதீஸ்வரத்தை மீட்டெடுப்போம்" என்று நாவலர் வெளியிட்ட பிரசுரமும், அவரது முயற்சியும் தான் இன்றைக்கு ஐந்து தேர் ஓடுகின்ற திருக்கேதீஸ்வர திருத்தலமாகக் காட்சியளிக்கிறது.

"எங்களுக்கு சொந்தப் பள்ளிக்கூடம் வேண்டும் எனவே நல்ல திட்டமிடல் வேண்டும்" என்று அந்த இளைஞன் நினைத்ததின் விளைவுதான் 1848இல் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சைவப்பிரகாச வித்தியாசாலை. இதுவே இந்த நாட்டில் இன்றைக்கு நெடுந்தீவிலிருந்து பதுளை வரையில் இருக்கின்ற சைவப்பிரகாச வித்தியாசாலைகள் உருவாகுவதற்கு முன்னோடியாக ஒரு தனிமனிதனால் அமைக்கப்பட்ட பாடசாலையாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வசதிகள் இல்லாத காலத்தில் நாவலர் பெருமான் துணிந்து ஒரு பாடசாலையைக் கட்டி, பாடத்திட்டத்தை உருவாக்கி, புத்தகங்களை தானே அச்சிட்டு, தன்னிடம் கற்க வந்தவர்களை ஆசிரியர்களாகப் பயன்படுத்தி பணிசெய்தவர். இணுவில், கோப்பாய், புலோலி போன்ற பல இடங்களிலெல்லாம் தமிழ்ப் பாடசாலைகள் தோற்றம் பெறத்தொடங்கின. நாளடைவில் கல்விமான்கள், செல்வந்தர்களைப் பார்த்து "ஆங்கிலக் கல்லூரிகளை உங்கள் கிராமங்களில் தொடக்குங்கள். ஆங்கிலக் கல்விக்காக சைவத்தமிழ் மக்கள் மதம் மாறுகிறார்கள்; ஞானஸ்நானம் பெறுகிறார்கள்." என நாவலர் விடுத்த வேண்டுகோள்தான் பல ஆங்கிலப் பாடசாலைகள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது. நாவலர் பெருமானுக்கு அந்தச் சிந்தனைகள் ஏற்படாமலும், அவர் அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்காது விட்டிருந்தால், இன்று நாட்டில் சைவப்பாடசாலைகள் என்று இருந்திருக்க வாய்ப்பில்லை.

நாவலர் பெருமான் இல்லையென்றால் எங்கள் சமயத்தினுடைய நிலைமையை சொல்லமுடியாது. அன்று அவர் செய்த நல்ல காரியங்களுக்கு, இன்றைய இருபத்தொராம் நூற்றாண்டிலே வாழுகின்ற நாங்கள் என்ன செய்தோம்? அவர் தேடி வைத்தவற்றையும், அவர் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் திரும்பிப் பார்க்கவேண்டும். நாவலர் சிந்தனையில் உருவாகிய சைவப்பாடசாலைகள் இன்றைக்கு குருபூசைகளை கைவிட்டுவிட்டார்கள். ஒருகாலம் சமய எழுச்சியை ஏற்படுத்தியது குருபூசைகள். ஒரு காலம் சமய உணர்வை உருவாக்கியது சொற்பொழிவுகள். அந்தச் சமயச் சொற்பொழிவின் பாரம்பரியம் இந்த இருபத்தொராம் நூற்றாண்டில் மிகப்பெரிய அளவில் வளர்ந்திருக்க வேண்டும்.

இந்த நாட்டிலே, இந்த மண்ணிலே சைவத்தையும் தமிழையும் எழுச்சிபெற விடாமல் நாங்கள் மௌனித்திருக்க முடியாது. அனைவரும் சமயத்தின் மீதும், தாய்மொழிமீதும் பற்றுடையவர்களாக இருக்க வேண்டும். நாவலர் அத்தகைய பற்றை ஊட்டுவதற்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர். பின்னாளில் நாவலர் வழிவந்த இந்துபோர்ட் இராஜரத்தினம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், சேர் கந்தையா வைத்தியநாதன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வரையிலான பலர் தியாகம் செய்து வளர்த்த ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அந்தப் பாரம்பரியம் இன்று கோயில்களிலும் இல்லை; பள்ளித் தலங்களிலும் இல்லை; பல்கலைக்கழகங்களிலும் இல்லை; எங்கள் சமுதாயத்தின் உணர்வுகளிலும் இல்லை. இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாவலர் வழியிலே ஒரு எழுச்சி ஏற்படுத்தப்படவேண்டும். நாவலர் என்ன நோக்கத்திற்காக பாடசாலைத்திட்டத்தை உருவாக்கினாரோ, நாவலருக்குப் பின்னாலே ஒவ்வொரு ஸ்தாபகர்களும் அந்தந்தப் பாடசாலையின் நோக்கம் எதுவாக இருக்கவேண்டும் என்று அதனை ஆரம்பித்தார்களோ, அந்தப் பாரம்பரியத்திலிருந்து நாம் கடைசி வரையும் விலகக்கூடாது.

நாவலரின் சிந்தனைகளை வாழவைக்க வேண்டுமானால், கோயில்களிலும் சரி, பள்ளித்தலங்களிலும் சரி, எங்கள் பண்பாடுகளை நாம் காப்பாற்ற வேண்டும். நாவலர் வழியில் ஆன்மீக எழுச்சியை, சமய வளர்ச்சியை உருவாக்க வேண்டுமானால் இந்த நாட்டிலே இருக்கின்ற செல்வந்தர்கள் கல்யாண மண்டபங்களுக்குப் பதிலாக, பல்கலைக்கழகக் கல்லூரிகளையும், இந்துப் பல்கலைக்கழகத்தையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். தூய சிந்தனையும், விரிந்த நோக்கும், அர்ப்பணிப்பும் மிக்க நாவலர் பெருமான், தன் வாழ்வையே கொடுத்துச் செய்த சாதனையின் அறுவடையை சந்தித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், நாமும் காத்திரமான பணிகளைச் செய்வது காலத்தின் தேவையாகவிருக்கிறது.


# மாமன்றம் வாழ்த்துகிறது

90ஆவது அகவை நிறைவைக் காணும்

**சிவத்திரு எஸ். சுப்பிரமணியம் செட்டியார்**

அவர்களுக்கு சுகநலத்தையும் தீர்க்காயுளையும் வேண்டி
எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான்
பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**





# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பொன் மொழிகள்

ஆண்டவனது பேரருளினைப் பெறுவதற்கு கல்வியிலும் தியானம் சிறந்தது, நியாய வாதத்தினும் நெடுமூச்சு சிறந்தது, கவிமாரியினும் கண்ணீர் மாரி சிறந்தது, நூலாராய்ச்சியினும் வழிபாடு சிறந்தது, மண்ணோக்கிய சிந்தையினும் வானோக்கிய சிந்தை சிறந்தது என உண்மை அறிஞர் உரைத்து நிற்பர்.

மனித சக்தியை விருத்தி செய்து காரியசித்தியைப் பெற விரும்பிய மனிதன், முதற்படியாக காமம், கோபம் ஆகிய இரண்டினையும் அடக்குதல் வேண்டும். பிறர் பொருளை காஞ்சிரம் பழமெனக் கருதுதல் வேண்டும். பிறன் மனைவியை கனவிலும் நினைத்தல் கூடாது.

கொலை கூடாதென்பதற்குப் பிரதான காரணம் அப்பாவத்தால் துன்பம் வருமென்பதன்று, அது மனத்தை இரக்கமற்றதாகச் செய்து அடிக்கடி தீய அலைகள் எழும் இடமாகச் செய்யும் என்பது தான்.

அருளொழுக்கம் பெருகிய வழி, வெறுப்பு, வெகுளி என்னுமிவை தாமேயகல்வனவாம் அருள் நிறைந்த உள்ளத்தினுள்ளே அச்சம், கவலை, பொறாமை, துன்பம், மிடி, லோபம் என்பன ஒரு சிறிதும் புகமாட்டா.

அன்னத்தைப் பெறாத கூடல் அறுபது நாட்களுக்கு நிலைத்திருத்தல் கூடுமென்பர் அன்பினைப் பெறாத உயர் கணப்பொழுதாயினும் நிலைத்திருக்கமாட்டாது. அன்பே உடல், உயிர் இரண்டிற்கும் ஆதாரமாவது.

நமக்கு பேரழகோ, பெருஞ் செல்வமோ, பெரும் பதவியோ இல்லை என்றால் அது நம் பாக்கியம் ஏனென்றால் அவற்றைக் கொண்டு மற்றவர்களைக் கஷ்டப்படுத்தவோ நாம் தொல்லைப்படவோ வேண்டுவதில்லை.

அன்பிற்குப் பிறப்பிடமும் அறிவிற்குச் சிறப்பிடமுமான ஈசனிடம் சென்றவருடைய அவதாரதிகத்தை நாம் கொண்டாடுவதால், நம் மனமும் அப்பெரியாருடைய ஞானத்தையும் ஆனந்தத்தையும் அடையமுயலுகிறது.

இவ்வுலகத்தில் அடையக் கூடிய மேன்மை ஒன்றே அது சத்தியமும் நடுநிலைமையும் கொண்டு, பொய்யரிடமும் அநீதி செய்வரிடமும் வெறுப்பின்றி அன்புடன் நடந்து கொள்வதே.

தடையைக் கண்டு வெறுப்புக் கொண்டு போய்விடாமல் அதன்மேல் பிரகாசித்துக் கொண்டேயிருக்க வேண்டும். வெளிச்சம் ஊடுருவிச் செல்லவிடாமல் ஏதேனும் தடுத்தால் அதன் செயலே அதுவன்றி பிரகாசிக்கும் கிரணங்களின் தவறன்று

மூன்று போதும், மெய்யறிவுடன் எண்ணங்களை மனத்தில் கொள்வது, உபகாரமான செயல்களை செய்வது, தன் ஆதீனமில்லாமல் தானே நிகழும் நிகழ்ச்சிகளைத் திருப்தியுடன் அங்கீகரிப்பது நல்லது.


எந்த அளவுக்கு மனங்கலங்காமல் இருக்கிறாயோ அந்த அளவுக்குச் சக்தி உண்டாகும்.
ஆண்மையற்றவனே துயரப்படுவான், சினம் கொள்வான், சினமும் துயரமும் கொள்பவன் கஷ்டத்தை தாங்கி நிற்கமாட்டான், தோல்வியடைவான்.

நடுவு நிலையிலே நிற்கிற சில மனிதர்கள் மாத்திரம், உள்ளே மனத்திலும் வெளியே உலகத்திலுள்ளமுள்ள குணகுற்றங்களை உள்ளபடி அறிகிறார்கள். உண்மையறிவு ஒருவனுடைய நடுவு நிலைமையிலே வெகுதூரம் தங்கி நிற்கிறது.

கெட்ட எண்ணங்களைப் போக்குவதற்கு நல்ல எண்ணங்களை எண்ணுவது வழி, பகைவனது பகைமையை மறப்பதற்குத் தோழனது அன்பை நினைப்பது வழி, இருளை நீக்க விளக்கைக் கொண்டு வருவதுதானே வழி.

புறம்கூறுவதினால் ஆத்ம சக்தி நஷ்டப்படுவதேயன்றி எய்துகின்ற பலன் பிறிதொன்றில்லை ஆதலினால்இ எவ்வெவரும் புறங்கூறாமையைக் கைக் கொள்ள வேண்டும்.

# யாழ்ப்பாணத்து சித்தர் சிவயோக சுவாமிகள்



கடந்த மாதம் (மே) 29ஆம் திகதி தவத்திரு சிவயோகசுவாமிகளின் ஜெனன தினமாகும். இதனையொட்டி இந்தப்பக்கம் அவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினைத் தருகிறது.

இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. கைலாச பரம்பரையின் இது சித்தர்கள் நடமாடிய யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் என்னும் கிராமத்திலே 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி யோகநாதன் எனும் சிவயோக சுவாமிகள் பிறந்தார். இளம் வயதிலேயே தாயை இழந்த யோகநாதன் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கொழும்புத்துறை என்னும் கிராமத்தில் வாழ்ந்த அவரது தந்தையின் சகோதரியால் வளர்க்கப்பட்டார்.கல்லூரியில் யோகநாதன் பயின்ற காலத்திலேயே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணாக்கர்களுக்கு விளக்கும் குட்டிப் பிரசங்கியாகவும் இருந்தார். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து கொண்டு அவர் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராக கடமையாற்றினார். அப்போது தன் ஓய்வு நேரம் முழுவதையும் சமயப்பயிற்சியில் செலவிட்டார். தியானம், திருமுறை பாராயணம் போன்ற ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டார். ஆன்மீக சாதனை அவரை ஈர்க்கவே இறுதியில் தனது முப்பதாவது வயதில் வேலையில் இருந்தும் விலகி தனது வாழ்வை முழுமையாக ஆன்மீக சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

அக்காலத்தில் நல்லூர் தேரடியில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையை அறிந்த யோகநாதன் ஒருநாள் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றார். தனது சற்குருவை முதன்முதலில் சந்தித்தது குறித்து அவர் பின்னர் பல நற்சிந்தனைப் பாடல்களில் அழகாகக் கூறியுள்ளார். தேரடியில் யோகநாதனின் செவிகளில் ஒலித்தவை "ஆரடா நீ? தேரடாவுள்! தீரடா பற்று". மலைத்து நின்ற சீடனைப் பெருங் கருணையோடு நோக்கிய சற்குருநாதன் "உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப் போகின்றேன். வா வா" என்று அருகிலழைத்து அன்போடு ஞான உபதேசம் அருளினார். அன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் வாழ்ந்து கடும் தவம் ஆற்றிய யோகநாதன் தனது சற்குருவிடமிருந்து தீட்சை பெற்று யோகர் சுவாமிகள் ஆனார். பின் தனது குருவின் கட்டளைப்படி யோகர் சுவாமிகள் கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலம் இலங்கை முழுவதையும் பாதயாத்திரையாக அவர் சுற்றி வந்தார். பாத யாத்திரையை முடித்துக்கொண்டு குருவிடம் திரும்பி வந்த யோகர் சுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பா சுவாமிகள் "யோகா இரண்டு யானைகள் ஒரு முனையிற் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறைச் சந்தியில் இலுப்பை மர வேரை பார்" என்றார்.

தனது குருவின் கட்டளைப்படி யோகர் சுவாமிகள் கொழும்புத்துறைச் சந்தியில் இருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்களாக தியான நிலையில் அமர்ந்திருந்தார். பல முறை வேண்டிக் கேட்டுக்கொண்ட பிறகு இலுப்பை மரத்துக்கு அண்மையில் அடியவர்களால் அவருக்கு என அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிசையில் யோகர்சுவாமிகள் தங்கினார். இது 1914 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. யோகர் சுவாமிகள் தனது வாழ்வின் அடுத்த ஐம்பது ஆண்டுகளையும் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தச் சிறு குடிசையில் கழித்தார். தொடக்கத்திலே அணுகுவதற்கு முடியாதவராக இருந்தார். ஆனால் காலப்போக்கில் சில அடியவர்களை அருகில் வர அனுமதித்தார்.மிக விரைவில் அந்தக் கொழும்புத்துறைக் கொட்டில் இலங்கை முழுவதற்கும் அருள் வழங்கும் ஆன்மீகத் திருவுருவத்தின் ஆச்சிரமமாக மாறியது. வாழ்வின் பல துறைகளைச் சார்ந்த மக்களும் இக்குடிசைக்கு வந்தனர்.

நெடுந்தூரத்திலிருந்து வரும் யாத்திரிகர்களும் தினம் வரும் அயல் பக்தர்களும் ஆசானின் திருவடியின் கீழ் ஒன்று கூடி அங்கு விரிக்கப்பட்டுள்ள பாய் மீது அமர்ந்திருப்பார்கள். பொதுவாக அவரது ஆச்சிரமத்திற்கு மாலை நேரத்திலேயே பக்தர்கள் வருவது வழக்கம். சைவ மார்க்கம் பற்றியும் பண்டைக்கால முனிவர்கள் ஞானிகள் பற்றியும் வேதாந்த சித்தாந்த தத்துவத்தின் தனது கோட்பாடுபற்றியும் அவர் பேசுவார். ஆசானும் அடியவர்களும் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவர். தனது மென்மையான குரலில் அவர் பாடுவார். ஆழ்ந்த வி ஷயங்கள் குறித்தும் உலகியல் விஷயங்கள் குறித்தும் அவர் பேசுவார். அல்லது அடியவர்களுடன் மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளை யோகர் சுவாமிகள் வலியுறுத்தி வந்தார். அடியவர்களுக்கு அவர் வழங்கிய கட்டளைகள் நபருக்கு நபர் மாறுபடும். பொதுவான ஒரு பரிகாரத்தை அவர் தருவதில்லை. யாருக்கு எது தேவையோ அதைத் துல்லியமாக அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்கு பக்தியையும் உபாசனையையும் கற்பிப்பார். வியாதிக்கு ஏற்ற மருந்து என்று சுவாமிகள் கூறுவதுண்டு. யோகர் சுவாமிகள் அடியவர்கள் சகிதம் பலமுறை இந்தியாவுக்கு திருத்தல யாத்திரைகளையும் மேற்கொண்டார்.

வெள்ளை வேட்டியும் சால்வையும் மட்டுமே யோகர் சுவாமிகள் அணிந்திருப்பார். உயர்ந்த தோற்றமும் ஆரோக்கியமான திருமேனியுமுடைய யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணத்து வீதிகள் வழியாகவும் வயல் வெளிகளினூடாகவும் தினமும் பல மைல்கள் தூரம் நடப்பார்.தனது வெண்மையான தாடியும் தலைமுடியும் சூரிய வெளியில் பிரகாசிக்க கறுப்புக் குடையுடன் யோகர் சுவாமிகள் யாழ் குடாநாட்டு வீதிகளில் கம்பீர நடையுடன் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். தினமும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து தனது குடிசையில் திருவடி வழிபாடு செய்வார். பல மேலைத்தேசத்தவர்கள் கூட சுவாமிகளைத்

தரிசிக்க வந்தனர். அடியவர்கள் வாழ்வில் யோகர் சுவாமிகள் புரிந்த அற்புதங்களோ ஏராளம். பிற்காலத்தில் இந்த அற்புத நிகழ்ச்சிகள் பல மொழிகளிலும் நூல்களாக அடியவர்களினால் வெளியிடப்பட்டுள்ளன.

பல பாடல்களை யோகர் சுவாமிகள் தம் வாழ்வில் பாடியருளினார். அவை அவர் அகத்திலிருந்தே வெளிவந்தன. பின்னர் இவை ஒன்றாக திரட்டப்பட்டு நற்சிந்தனை என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. உள்ளத்தை உருக்கும் நற்சிந்தனைப் பாடல்கள் பல ஒலிப் பதிவு நாடாக்களாகவும் வெளிவந்துள்ளன. 1935 ஆம் ஆண்டு சில பக்தர்களைக்கொண்டு சிவதொண்டன் என்னும் மாதாந்த சமய சஞ்சிகையை வெளிவருமாறு செய்தார். 1953 ஆம் ஆண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் சிவ தொண்டன் என்னும் ஆன்மீக நிலையத்தை நிறுவினார். சுவாமிகளின் விருப்பப்படி பின்னர் மட்டக்களப்பிலும் ஓர் சிவதொண்டன் நிலையம் நிறுவப்பட்டது. இன்று லண்டன் நகரிலும் சிவதொண்டன் நிலையம் சிறப்புறப் பணியாற்றுகின்றது. சைவ சமயத்தை மேலைத்தேசங்களில் பரப்புவது பற்றியும் கிழக்கு மேற்கு இடையே ஒரு பாலம் அமைப்பது குறித்தும் யோகர் சுவாமிகள் அடிக்கடி கூறி வந்தார். அன்று சைவசமயம் மேலோங்கி வேரூன்றி நிற்பதற்கு வித்திட்டவர் யோகர் சுவாமிகள். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலே தனிப்பெரும் முனிவராக அருளாட்சி புரிந்து வந்த யோகர் சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் தனது 91 வது வயதில் மகாசமாதி அடைந்தார்.




# அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

# வைரவிழா மலர்



மாமன்றத்தின் வைரவிழா மலர்
இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

**முதலாவது தொகுதியில் மாமன்ற வரலாற்றுப் பதிவுகள், நம்நாட்டு இந்து சமய வரலாற்றில் உயர் நிலையில் வைத்துப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், தவத்திரு யோகர் சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உட்பட இந்து மத வரலாற்றில் தடம்பதித்த செம்மல்களைப் பற்றி அறிஞர் பெருமக்கள் எழுதிய வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளும் அடங்கியுள்ளன.**

**இரண்டாவது தொகுதியில், மாமன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்திய இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், மாமன்றம் நடாத்திய சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு பற்றிய தொகுப்பு, இலங்கை இந்து மத வளர்ச்சி தொடர்பான பிராந்திய ரீதியிலான நோக்கு போன்ற பல காத்திரமான விடயங்களுடன் மாமன்ற வரலாற்றில் நிகழ்வுகளின் நினைவாக ஏராளமான நிழற்படங்களையும் உள்ளடக்கியதாக வைரவிழாச் சிறப்பு மலர் மலர்ந்துள்ளது.**

இரு தொகுதிகளாக, 1200 ற்கும் அதிகமான பக்கங்களுடன் வெளிவந்துள்ள இந்த சிறப்பு மலரின்
விலை ரூபா 3000/- (கடதாசித் தோற் பெட்டகத்துடன்), ரூபா 2500/- (கடதாசித் தோற் பெட்டகம் இல்லாது)

தொடர்புகளுக்கு: **அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகம் - கொழும்பு**, தொலைபேசி - 011 2434990
**மாமன்ற யாழ். பணிமனை,** தொலைபேசி - 021 222 1075






# அவுஸ்திரேலியாவில் அகில இலங்கை இந்து மாமன்ற


## வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு

இடம்: **துங்காபி சமூக மையம் - பில்லியர்ட் அறை**
(Toongabbie Community Centre 244 Targo Rd, Toongabbie NSW 2146 , Community Billiard Room)
காலம்: **18-06-2016 சனிக்கிழமை மாலை 5.45 மணி முதல் 7.15 மணிவரை**

பேச்சு/கலந்துரையாடல்:
**இலங்கையில் இந்துக்களின் நிலை - திரு. கந்தையா நீலகண்டன் (மாமன்றத் தலைவர்)**
புத்தக வெளியீட்டினை தொடர்ந்து சிவனடியார்களுக்கு இராப்போசனம் வழங்கப்படும்.
**இந்த அழைப்பினை உங்கள் குடும்ப மற்றும் நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.**
**சிட்னி வாழ் அனைத்து இந்துப் பெருமக்களையும் அன்புடன் அழைக்கிறோம்.**
கு.பார்த்தீபன் (இந்து மாமன்ற இணைப்பாளர் - சிட்னி) (Coordinator - ACHC Sydney)

# திருக்கோயில்களில்

## பஞ்சபுராணம் ஓதும் வழக்காறு ஏற்பட்டமை



பன்னிரு திருமுறை வரலாற்றில் திருமுறை வகுப்பிற்குப் பின் கோயில்களில் அக்காலத்தே பன்னிரு திருமுறைகளிலும் ஒவ்வோர் பாடலைப் பாடும் வழக்கமே தொன்று தொட்டு இருந்து வந்திருக்கின்றது. தேவாரக் காலத்திற்கு முன்னும் சில தலங்களில் பதிகம் ஓதும் வழக்கு இருந்து வந்ததென்பதை சாசனங்கள் நன்கு தெரிவிக்கின்றன. தேவார வகுப்பு ஏற்பட்டு பன்னிரு திருமுறைகளும் திருக்கோயில்களில் ஓதப்பட்டு வந்ததின் பின் திருக்கோயில் கிரியைகளுக்கு ஏற்ற விதத்தில் பூசையின் போது 'பஞ்சபுராணம்' ஓதும் வழக்கு ஏற்படலாயிற்று. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் போன்ற பாடல்களில் ஒவ்வோர் பாடலைப் பாடும் ஒழுங்கு முறையே பஞ்சபுராணம் ஓதல் எனப்படும். இவ்வழக்கு அக்காலத்தே திருப்பதிகம் விண்ணப்பித்தல் என்றே சாசனங்களில் குறிக்கப்பட்டிருப்பதால் அக்காலத்தே ஒருபதிகமாகவே பாடல்களை ஓதியும் இருக்கலாம். மேலும் பன்னிரு திருமுறைகளில் ஒரு திருமுறைக்கு ஒரு பதிகம் வீதம் பாடி வந்தார்கள் போலும்.

பிற்காலத்தே இவ்வழக்கு மாறி இன்று திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதும் வழக்கமே நடைமுறையிலுள்ளது. இவ்வழக்கிற்கு தக்க ஆதாரம் பற்றி சான்றுகள் இல்லை. வயது முதிர்ந்த ஓதுவாமூர்த்திகளும் இது மரபு என்கின்றனர். ஆனால் பஞ்சபுராணத்திற்கு ஒரு தோற்றுவாயைத் திருக்கோவையாருண்மை என்ற நூலில் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நூலில் தொடக்கத்திலுள்ள ஒரு பகுதி இங்கு ஆராயத்தக்கது. "சந்தானாசாரியர் திருவாக்குகள் சாத்திரமாயிருக்கும். சமயாசாரியர் திருவாக்குகள் அதன் அனுபவப் பயனாகிய தோத்திரங்களாயிருக்கும், அத்தோத்திரங்களாகிய மெய்ஞானத் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் எனும் திருப்பாடல்கள் சைவத்திற்கும் சிவபூசைக்கும் சிவாலயநித்திய நைமித்தியத்திற்கும் அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாயிருக்கும்" எனவரும் பகுதி நோக்கற்பாலது. இம்முறையே பின்னர் பஞ்சபுராணம் ஓதும் வழக்கு ஏற்படுவதற்குத் தோற்றுவாயாய் அமைந்திருக்கலாம் எனக் கருதலாம். இதில் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் ஒரு பாடலாகக் கொண்டு எண்ணினால் ஐந்து நூல்கள் கிடைக்கின்றன. மேலும் பஞ்சபுராணம் எனும் பதத்தின் ஈற்றில் வழங்கும் புராணம் என்பது கூட ஈற்றில் வழங்கும் பெரிய புராணம் காரணமாக அமைத்துக்கொள்ளப் பெற்றதென்றும் ஊகிக்க இடமுண்டு.

திருக்கோவையாருண்மை ஆசிரியர் கூறிய இன்னோர் கருத்தும் இங்கு நோக்கற்பாலது. "இத்தோத்திரங்கள் சைவத்திற்கும் சிவபூசைக்கும் சிவாலய நித்திய நைமித்தியத்திற்கும் அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாயிருக்கும்." என்று கூறுகின்றனர். இதன் பொருளாவது சிவாலயத்தில் சிவாச்சாரியார் சிவபூசை செய்து முடித்து வேத மந்திரங்களை ஓதுவது போல இத்தோத்திரங்கள் தமிழில் ஓதத்தக்க மந்திரங்களாயிருக்கும்" என்று கூறுகின்றனர். இதன் பொருளாவது சிவாலயத்தில் சிவாச்சாரியார் சிவபூசை செய்து முடித்து வேத மந்திரங்களை ஓதுவது போல இத்தோத்திரங்கள் தமிழில் ஓதத்தக்க மந்திரங்களாகும் என்பதே இதன் கருத்தாகும். மேலும் வேதமந்திரங்களை வடமொழியில் வேதியர் ஓத திருமுறை மந்திரங்களை ஓதுவார் மூர்த்திகள் தமிழில் ஓதி வந்தார்கள் எனவும் அறியலாம். இக்குறிப்பு இன்றுள்ள நடைமுறைக்கும் மிகப் பொருந்தும். சித்தாந்த அட்டகம் இயற்றியருளிய ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் காலம் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கமாகும். திருக்கோவையாருண்மை ஆசிரியர் சந்தான குரவர் எனக் குறிப்பிடுவதால் அவர் இதற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவாகும். இந்நூல் செய்த காலம் பதினைந்தாம் நூற்றாண்டாயிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.


ஈழத்து ஆறுமுகநாவலர் அவர்கள் 'அருட்பா' என்ற தலைப்பில் மேற்குறிப்பிட்ட ஐந்து நூலையும் ஒரே நூலாக அச்சிட்டதும் கவனித்தற்பாலது. தேவாரம் என்பது நூல் பெயராகியும் கூட அது மிகவும் விரிந்ததானபடியால் சிறுநூலாகக் கருதியே நாவலா அவர்கள் அகத்தியர் தேவாரத்திரட்டை மட்டுமே தம்தொகுப்பினுள் சேர்த்துக்கொண்டார். அவர் அச்சிட்ட அருட்பாத் தொகுப்பு பின்வரும் ஐந்து நூல்களை அடக்கியதாகும். அகத்தியர் தேவாரத்திரட்டு, திருவாசகம் முழுமையும், பெரிய புராணம் செய்யுள் திரட்டு (முப்பத்தேழு பாடல்கள்) என்பவையாகும். இவைகளே பஞ்சபுராணம் பாடுவதற்கான ஆதாரநூல் என்ற கருத்தோடு பாடுகின்ற ஓதுவார் மூர்த்திகளுக்கு உதவியாக இருக்கவல்ல அடக்கமான நூலாக இருக்கவேண்டி வெளியிடப்பட்டதென்று எண்ணலாம். பெரிய புராணச் செய்யுள் திரட்டு ஆறுமுகநாவலர் காலத்திற்கு நெடுநாள் முன்னதாகவே வழக்கில் இருந்ததென்பதும் அறியக்கிடக்கின்றது. இத்திரட்டு பாட்டு வழக்கிலும் பயின்று ஏட்டுவழக்கிலும் இருந்து வந்திருக்கின்றது.

நாலாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் புராணத்தில் பொருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடுதல் ஓதுவார் மூர்த்திகளுக்கு எளிதன்று என்ற காரணத்தால் அவர்கட்குப் பயன்பெறும் பொருட்டே இத்திரட்டு நம்முன்னோரால் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய மாயூரப்புராணம் எனும் தலபுராணத்தின் சிவாலய தரிசன விதி ஆறாம் பாடலில் சிவபிரான் முன்நின்று பாடப்படவேண்டிய அருட்பாடல்களைப் பின்வருமாறு கூறுகின்றார். அச்செய்யுள் வருமாறு:

"நிறையருட் பாடல் ஆகி
    நிரம்பு தேவாரம் யாரும்
அறைதிரு வாசகம் சீர்
    அமைஇசைப் பல்லாண்டு
குறைதவிர் புராண இன்ன
    கொண்டுறத் துதித்தல் செய்து
மறைபுகழ் விபூதி மேனி
    வளைந்திரு கையால் ஏற்க"

இங்கு பஞ்சபுராணம் என்ற பெயரைக் குறிப்பிடாமல் ஐந்து அருள் நூல்களையும் பாட வேண்டும் என்று அவர்கள் குறிப்பதிலிருந்து இம்மரபின் பழமையை நன்குணரலாம்.

(நன்றி:-பண்ணிசைத் தத்துவம்)



# கோமாதாவும் சான்றோர் பராமரிப்பும்

குு. கோபிராஜ் *B.A. (Hons)*

பசுவின் உடம்பெங்கும் நாம் வழிபடும் அத்தனை தெய்வங்களும், நமக்கு பயனளிக்கும் தேவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆலயத்தில் இருக்கும் விக்கிரகத்தில் மூர்த்தியை வரவழைத்து இருத்தி பூசிப்பர். ஆனால் பசுவின் இத் தெய்வங்கள் எல்லாமே தானாக உறைவர். எனவே நாம் கோபூசை செய்து வழிபட்டு நல்ல பயனை பெறுவது சுலபமானது.

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும். அதன் அருகில், நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை எனும் ஐவகை பசுக்கள் இருக்கும். இவை முறையே இவற்றின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும், தீர்த்தங்களும் இருக்கும். இத்தகைய சிறப்பான பசுவை வருத்தாது இரக்கத்தோடு பலாசங்கோலினால் மெல்ல, போ, போ என இயக்குக. கோபித்து அதட்டி அடிப்போர் நரகத்திலே வீழ்வர். பசுசை வணங்கி புல்லை கொடுத்தோர் சிவலோகத்தை அடைவர். பசுவை அட்டமி தோறும் நீராட்டி, பூச்சூடி அன்னமும் ஜலமும் ஊட்டி தூபதீபம் காட்டுவது சிறப்பானது.

ஈவுரிஞ்சிக்கல் நாட்டுதலும், சிவனுக்கும் ஆச்சாரியருக்கும் பசுவை தானமாக கொடுத்தலும், பசுவை கண்டு இரங்கி தாம் வாங்கி வளர்த்தலும், இடபத்தை தானமாக சிவ சந்நிதிக்கு கொடுத்தலும் பெரும் புண்ணியமாகும். பால், தயிர், கோசலம், கோமயம், நெய் போன்றன சிவனுக்கு அபிடேகம் பண்ணுவது ஆலய கிரியைகளில் சிறப்பானதாகும்.

சான்றோர் வரிசையில் இமயத்தில் இருந்து தென் நாடு நோக்கி வந்த சுந்தரமுனிவர் என்பவர் வரும் வழியில் பசு மேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடப்ப அவனைச் சூழ்ந்து நின்று பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதை கண்டார். பசுக்கள் துயர் துடைக்காது செல்வது பாலம் எனக்கருதித் தன் யோக சித்தியினால் தனது உடலை ஒரு மரத்தின் மேல் கிடத்தி விட்டு மூலன் உடலிற் புகுத்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார்.

மீண்டும் வந்த போது தன் உடலைக் காணாமையால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தில் தவமிருந்து மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தை தந்து திருமூல நாயனார் எனும் சிறப்பு பெயர் பெற்று சிவகதி அடைந்தார்.

விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் பசு மேய்ப்பவன். பசுவை கோலால் அடிப்பதை கண்டு மனம் பொறுக்க மாட்டாது விலக்கித் தானே பசுவை மேய்த்து வந்தான். மணியாற்றங் கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தாமாக சுரந்து பொழிந்த பாலை வீணாகாத வகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்து வழிபட்டான்.

இந்த உண்மையை அறியாத மூடர் சொற் கேட்ட தந்தையார் பாலை மண்ணில் பாழ் செய்கின்றானே என அதை காலால் இடற தன் சிவ பூசைக்கு குந்தகம் செய்தவர் காலை சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாகி தந்தையின் கால்கள் தறிபட்டன.

ஆனாய நாயனார் என்பவர் பசுக்களை மேய்த்தலையே சிவப்பணியாகக் கொண்டவர். புல்லாங்குழல் இசைக்குப் பேரிசையாளர். பஞ்சாட்சர மந்திரத்தை புல்லாங்குழலில் இட்டு இசைத்துப் பசுக்களை மகிழச் செய்பவர். இவரது பஞ்சாட்சர இசையில் தேவர்களும் தம் மூர்க்கம் தணிந்து தெய்வ இசைப்பட்டனர். இசையால் பசு மேய்த்த சிவ புண்ணியத்தால் ஆனாயர் சிவபதம் பெற்றார்.

தன்மைந்தன் அரச வீதியில் உலாவர தேரினிடையே புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்து போனது. இதனைக் கண்ட தாய்ப்பசு தாங்கொணாத துயரால் கண்ணீர் விட்டு கதறி அழுதது. இதனை அறிந்த மன்னன் பெரும் துயருற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயர்துடைக்க உதவா என உணர்ந்தான். தன் ஒரே மகனை இழந்து வருந்தும் தாய்ப்பசு போல தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறையெனத் துணிந்தார். தன் மகனை வீதியிற் கிடத்தி தானே அவன் மீது தேரைச் செலுத்திக் கொன்றான்.

"தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உற ஊர்ந்த அருமந்த செயல்"

கண்ட சிவபெருமான் அருளால் பசுக்கன்றும், அரசிளங்குமாரனும் உயிர் பெற்று சிவகதி அடைந்தனர். ஒரு பசுவின் கன்றைக் கொன்றதற்காக தன் மகனை கொன்று பசு ஓம்பிப் பரகதி பெற்றார் மனுநீதிச் சோழன்.

இலங்கையில் போர்த்துக் கேயர் ஆட்சி நடந்த காலம் யாழ்ப்பாணத்தில் பசுக் கொலையையும், புலாலையும் மறுத்த சைவ மக்கள் வாழ்ந்த காலம். போர்த்துக்கேயப் பறங்கியருக்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் கொழுத்த பசுவைக் கொடுக்க கொடிய பாவம் செய்வதிலும் பார்க்க பரதேசம் போவதே மேலெனக் கருதி இரவோடிரவாக கடல் கடந்து இந்தியா சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார். பசுக் கொலைக்கு அஞ்சி பிரதேசம் போய் சிவகதி பெற்ற ஞானபிரகாசர் போன்று பசுவிற்கு தம் இன்னுயிர் வழங்கிய மெய்யடியார்கள் பலரையும் இந்துமத நூல்கள் எடுத்துக் கூறி உள்ளன.

**உசாத்துணை நூல்**


1. கோமாதா கருத்து களஞ்சியம் "கோபூசை செய்வோம்" – கந்த. சத்தியதாசன்

2. கோமாதா கருத்து களஞ்சியம் – சு. செல்லத்துரை.

## யாழ் நகரில் மாமன்ற வைரவிழா சிறப்புமலர் வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீடு நிகழ்வு கடந்த மே மாதம் 28ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலும், மறுநாள் 29ஆம் திகதியன்று கொழும்பிலும் நடைபெற்றது.

மே மாதம் 28ஆம் திகதியன்று காலை யாழ் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் மலர் வெளியீடு வைபவம் இடம்பெற்றது. அன்றைய தினம் காலை 8.30மணியளவில் நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்ற யாழ் பிராந்திய பணிமனையிலிருந்து வைரவிழா சிறப்பு மலர் பிரதிகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. மாமன்ற சிவதொண்டர் அணியைச் சேர்ந்த மாணவர்கள் கொடி, குடை, ஆலவட்டம் மற்றும் நந்திக் கொடிகளை ஏந்திய வண்ணம் ஊர்வலத்தின் முன்னே அணிவகுத்துச் செல்ல, சமயத் தலைவர்களும், பிரமுகர்களும், மாமன்ற உறுப்பினர்களும் உட்பட ஏராளமான இந்து மக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நல்லைக் கந்தன் ஆலயத்தில் நடந்த பூசை வழிபாட்டின் பின்னர் ஊர்வலத்தினர் நல்லை ஆதீன கலா மண்டபத்தை வந்தடைந்தனர்.

காலை 9.30 மணியளவில் மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து பேரூர் ஆதீன இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் நந்திக்கொடியை ஏற்றிவைத்தார். இதன் பின் மாமன்ற சிவதொண்டர் அணி மாணவ மாணவிகளது திருமுறைப் பாராயணமும் சிவாச்சாரியப் பெருமக்களது வேதபாராயணமும் இடம்பெற்றது. தொடர்ந்து மாமன்றப் பிரதித் தலைவர் திரு.மா.தவயோகராஜா ஆரம்ப உரையாற்றினார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனம் ஆன்மீகச்சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரையை வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து வைபவத்திற்கு தலைமை தாங்கிய திரு.கந்தையா நீலகண்டன் உரையாற்றினார். இவரது உரையின் பின் மாமன்ற உபதலைவரும் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்பு மலர் அறிமுகவுரையை நிகழ்த்தினார். இதன் பின் மாமன்ற வைரவிழா மலர் வெளியீடு இடம்பெற்றது. வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் க.வி. விக்னேஸ்வரன், இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ.ஆ.நடராஜன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோருக்கு மலரின் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.தொடர்ந்து ஏனையோரும் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

இதன் பின் மாண்புமிகு நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களும், இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ.ஆ.நடராஜன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். இந்த வைபவத்தின் முக்கிய அம்சமாக பேரூர் ஆதீன இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் ஆன்மீகப் பேருரையாற்றினார். மாமன்றப் பொருளாளர் திரு.வே.கந்தசாமி வழங்கிய நன்றியுரையைத் தொடர்ந்து, இறைவணக்கத்துடன், நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

## கொழும்பில் வைரவிழா சிறப்புமலர் அறிமுக விழா

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா மலர் அறிமுக விழா கடந்த மாதம் 29ஆம் திகதியன்று கொழும்பில் உள்ள மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் காலை 8.00மணி முதல் கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வைரவிழா சிறப்புமலர் பிரதிகள் அலங்காரத் திருவாசிப்பீடத்தில் வைக்கப்பட்டு சமயத் தலைவர்கள், பிரமுகர்கள், மாமன்ற உறுப்பிர்கள், மற்றும் இந்து மக்கள் புடைசூழ நந்திக்கொடிகள் சகிதம் மாமன்றத் தலைமையகத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

மாமன்றத் தலைமையகத்தில் காலை மணி 9.45அளவில் மங்கள விளக்கேற்றல் நந்திக்கொடி ஏற்றல் இறைவணக்கம் என்பனவற்றைத் தொடர்ந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மாமன்ற உபதலைவரும் மாமன்ற சமூகநலன் குழு தலைவருமான விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா வரவேற்புரை நிகழ்த்தினார். அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனம் ஆன்மீகச்சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையுரை ஆற்றினார். இதன் பின் சிறப்புமலர் வெளியீடு இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் கலந்து கொண்ட மேல்மாகாண ஆளுநர் மாண்புமிகு கே.சி.லேகேஸ்வரன், கிழக்கு மாகாண ஆளுநர் மாண்புமிகு ஒஸ்ரின் பெர்ணான்டோ, எதிர்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா.சம்பந்தன், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மாண்புமிகு மனோ கணேசன், இந்திய பதில் உயர்ஸ்தானிகர் மாண்புமிகு அரிந்தம் பக்ஷி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வைரவிழா மலர் அறிமுகவுரையை நிகழ்த்தினார். இதன்பின் பேரூர் ஆதீன இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் ஆன்மீகப் பேருரையாற்றினார். மாமன்றப் பொதுச்செயலாளர் திரு. சி.தில்லைநடராஜா அவர்கள் வழங்கிய நன்றியுரையைத் தொடர்ந்து இடம்பெற்ற இறைவணக்கத்துடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

## நயினாதீவில் புத்த பெருமானின் சிலையை நிறுவுதல்

**மேற்படி விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பாக அதன் தலைவரும் பொதுச்செயலாளரும் கையெழுத்திட்டு 2016 ஏப்ரல் முதலாம் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் விபரம்**

நயினாதீவில் புத்த பெருமானின் 62 அடி உயர சிலையை நிறுவுவது தொடர்பாக எமது அங்கத்துவ சங்கங்கள் மற்றும் வட மாகாண இந்துக்களிடமிருந்தும் கண்டனங்களைப் பெற்றுள்ளோம்.

உலகளாவிய ரீதியில் கணிக்கப்பெறும் சக்திபீடங்களில் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலும் ஒன்று என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

குறிப்பிடப்பட்ட சிலை நிர்மாணமானது இந்துக்களின் மனதைப் புண்படுத்தியுள்ளது. பௌத்த சமயத்தவர்களுக்கு வேண்டப்படும் இடங்களில் இவ்வாறான புத்தர்சிலைகளை நிறுவுவதை இந்துக்கள் ஒருபோதும் எதிர்க்க மாட்டார்கள் என்பதை நாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். எவ்வாறாயினும் அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்துக்கள் வாழும் இடங்களில் இவ்வாறு புத்தர் சிலைகளையும், பௌத்த விகாரைகளையும் அமைப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் மேலும் இச்சிலை நிர்மாணமானது இந்துக்களின் புனித ஸ்தலமொன்றின் முக்கியத்துவத்தையும் கௌரவத்தையும் குறைப்பதாக உள்ளதுடன். இது சமயங்களுக்கிடையேயான நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் மேம்படுத்த உதவுமெனக் கூறமுடியாது.

சகல இனத்தவரையும், மதங்களையும் சமமாகவும், நீதியாகவும் நடாத்துவார் என்ற நம்பிக்கையில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்துக்கள் உட்பட இந்நாட்டு மக்களால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரின் பிரதிநிதியாக வடமாகாண ஆளுநர் என்ற பதவியில் தாங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுவது எமக்கு மிகுந்த மனச்சங்கடத்தை ஏற்படுத்துகின்றது.

இன்று வெளிவந்த செய்தித்தாளொன்றில் தங்கள் நேர்காணலில் அதிமேதகு ஜனாதிபதிமேல் வடபகுதி மக்கள் முழு நம்பிக்கையை வைத்துள்ளதாகக் கூறியுள்ளீர்கள். அதேபோல் தாங்கள் வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டபோதும் தங்கள் நியமனம் இதேபோல் தான் அம்மக்களால் வரவேற்கப்பட்டது.

எதிர்வரும் வெசாக் பண்டிகையை வடபகுதியில் மிகவும் பாரிய அளவில் கொண்டாடுவதற்கு ஊக்குவிப்புக் கொடுத்துவருவதாக செய்திகள் வாயிலாக நாம் அறிகின்றோம். பௌத்தர்கள் வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவதில் எமக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை. எனினும் இது அரச அனுசரணையுடன் நடைபெறுவது தேவையற்றது என்பதைமிகுந்த மனக்கிலேசத்துடன் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தாங்கள் வடமாகாண ஆளுநர் என்ற வகையில் வடமாகாண மக்களின் கலாசாரத்தை முதலில் மேம்படச் செய்தல் வேண்டும். தாங்களும் அரசாங்கமும் பௌத்தமதத்தைப் பேணிப்பாதுகாக்கும் அதேநேரம் ஏனைய மதங்களையும் பேணிப்பாதுகாப்பதும் தங்கள் கடமையாகும். இதுவே அதிமேதகு ஜனாதிபதியின் அரசால் உருவாக்கப்படும் நல்லாட்சிக்கான குறிப்பிடக்கூடிய குறிக்கோளாகும்.

இந்துக்களின் மனநிலையை மேலும் விரிவாக கூறுவதற்காக எமக்குத் தங்களுடனான அவசர சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருவீர்களென நாம் எண்ணியுள்ளோம்.

| | |
|---|---|
| *கந்தையா நீலகண்டன்* | *சி. தில்லைநடராஜா* |
| *தலைவர்* | *பொதுச் செயலாளர்* |

## வடமாகாண ஆளுநருடன் இந்து மாமன்றத் தூதுக்குழுவினர் சந்திப்பு

வரலாற்றுப் புகழ்மிக்க சக்தி பீடங்களிலொன்றான நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயச் சூழலில் 62 அடி உயரமான புத்தர்சிலையொன்றை நிறுவுவதற்கு அரசால் முயற்சி எடுக்கப்படுவதாகவும், இதற்கு வடமாகாண ஆளுநர் முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் தொடர்பில் இந்து மாமன்றம் கடந்த (2016) ஏப்ரல் 01ஆம் திகதியன்று தனது கண்டனத்தை பத்திரிகைகள் வாயிலாகவும் ஆளுநருக்கும் தெரிவித்ததுடன், அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்துக்களின் புனித தலங்களுக்கு அருகாமையில் இவ்வாறான சிலைகளை அமைப்பதை இந்துக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தது.

இதனையடுத்து 2016.04.27ஆம் திகதி காலை 11.00 மணியளவில் பத்தரமுல்லையிலுள்ள ஆளுநரின் அலுவலகத்தில் மாமன்றத் தூதுக்குழுவினருடன் ஆளுநர் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தார்.

இத்தூதுக்குழுவில் மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், பொதுச் செயலாளர் திரு. சி. தில்லைநடராஜா, பொருளாளர் திரு. வே. கந்தசாமி, உபதலைவரும் சமூகநலன் குழுத்தலைவருமான திரு. சி. தனபாலா மற்றும் மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ வைதீஸ்வரக்குருக்கள், முகாமைப் பேரவை உறுப்பினர் திரு. ந. மன்மதராஜன் ஆகியோர் பங்குபற்றினர்.

நயினாதீவில் நிர்மாணிக்கப்படவுள்ள புத்தர் சிலை இந்துமக்களை மதரீதியாக பாதிக்குமெனவும் இதனால் இனநல்லுறவு கேள்விக்குரியதாக இருக்குமெனவும் கலந்துரையாடலின்போது மாமன்றத் தூதுக்குழுவினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் ஆளுநர் என்றவகையில் வடமாகாண மக்களின் சமய விழுமியங்கள், கலாசாரங்கள் என்பவற்றை மேம்படச் செய்ய தாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதுடன் பௌத்தமதத்தைப் பேணிப்பாதுகாக்கும் அதேநேரம் ஏனைய மதங்களையும் பாதுகாப்பது தங்கள் கடமையாகுமெனவும் தூதுக்குழுவினரால் எடுத்துச்சொல்லப்பட்டது.

சகலதையும் செவிமடுத்த ஆளுநர் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையெனவும் வடமாகாண மக்களின் மனதை புண்படுத்தும் எவ்வகையான நடவடிக்கையையும் தான் மேற்கொள்ள மாட்டேன் எனவும், பிறமதத்தினரின் மத வழிபாட்டினையும் அவர்களது கலாசாரத்தையும் பேணும் வகையிலுமே தனது நடவடிக்கைகள் அமையுமெனவும், நயினாதீவில் பாரிய புத்தர் சிலையை நிறுவுவது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்ததோடு தனது நடவடிக்கைகள் எவ்விதத்திலும் பக்கச்சார்பானதாகவோ அன்றி வடமாகாண மக்களின் அபிலாசைகளை புறக்கணிப்பதாகவோ இருக்கமாட்டாதெனவும் உறுதியளித்தார்.

(27.04.2016)

# மாமன்றத்தின் புத்தாண்டுச்செய்தி

**(இவ்வருட சித்திரைப் புத்தாண்டையொட்டி மாமன்றம் விடுத்திருந்த செய்தி)**

கடந்த மூன்று தசாப்தங்களாக நமது மக்கள் அனுபவித்து வரும் துயர்வாழ்வுக்கு இன்னமும் விடிவு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவர்களை விட்டுவிலகவில்லை.

மீண்டும் எமது மக்களின் வாழ்வை ஒளிமயமானதாக மாற்ற வேண்டும் என்ற நன்நோக்கில் சமூக, சமய, கல்விப் பணிகளை முழு மூச்சுடன் ஆற்றவேண்டிய கடப்பாட்டில், இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமான "அகில இலங்கை இந்து மாமன்றம்" உள்ளது. இதற்காக நாடு முழுவதும் சிவ தொண்டர் அணிச்சேவை, ஆன்மீகக் கருத்தரங்குகள், ஆன்மீக வெளியீடுகள், மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசப் புத்தகங்கள் வழங்குதல், இடம் பெயர்ந்து அல்லலுறும் எமது மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் போன்ற சேவைகளை இந்து மாமன்றம் மிகுந்த உத்வேகத்துடன் முன்னகர்த்திவருகின்றது. அதேநேரம் நல்லாட்சி அரசும் இது தொடர்பான தனது முன்னெடுப்புக்களை பாரிய அளவில் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென மாமன்றம் இந்நாளில் கோரிக்கை விடுக்கின்றது.

இவைதவிர அகதி முகாம்களில் தங்கியிருக்கும் எமது மக்கள் சொந்த இடங்களில் வாழ முடியாத நிலைமை துயர்மிகு பிரச்சனையாகும். இந்த விடயத்தை நாம் காலத்திற்குக் காலம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு அவை நிறைவேற்றப்பட்டதாக கூற முடியாதுள்ளது. சில பகுதிகளில் காணிகள் விடுவிக்கப்படும் அதேவேளை வேறு பகுதிகளில் படைகளின் முகாம் விஸ்தரிப்புக்கென பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவற்றை நோக்கும் போது நல்லாட்சி அரசும் மனச்சுத்தியுடன் இதனைச் செய்யவில்லையா என எண்ணத் தோன்றுகிறது.

இதேபோல் மீள்குடியமர்ந்தோருக்கான வீடு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் கூடத் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மக்களின் பிரச்சனைகளை மனபூர்வமாக தீர்க்க அரசும், மாகாண சபையும் சேர்ந்து வலுவான திட்டங்களை உடன் வகுக்க வேண்டும், என இந்து மாமன்றம் வலியுறுத்துகின்றது.

இதேவேளையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான குடிநீர்ப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை. இதற்கு அரசு முக்கிய இடம் கொடுத்துத்தீர்க்க வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். மிகவும் வறிய, பின்தங்கிய மக்களுக்காக மாமன்றம் ஒரு சில இடங்களில் குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைக்க நிதியுதவிகளை செய்துவருகிறது. எனினும் எமது நிதிநிலைமைக்கேற்ப நாம் எடுக்கும் நடவடிக்கைகள் அம்மக்களின் ஒரு சிறுவிகிதத்தினரின் தேவையையும் பூர்த்தி செய்யுமா என்பது கேள்விக்குறியே. எனவே மத்திய, மாகாண அரசுகளே இவற்றிற்கு முழுமையான தீர்வினை வழங்கவேண்டும்.

மேலும் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கலாச்சாரச் சீரழிவை நோக்கும்போது இந்து மாமன்றத்தால் வாளாவிருக்கமுடியவில்லை. இளம் பெண்பிள்ளைகள், குழந்தைகள் ஆகியோர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது எமக்கு அன்றாட செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. நாம் மனிதசமூகமா அல்லது மனிதசமூகமென்ற பெயரில் நடமாடும் மிருகங்களா என எண்ணத் தோன்றுகின்றது.

இன்றைய கலாச்சார சீரலிவுக்கு போதைவஸ்து பாவனையும் ஒரு காரணமென மனநோய் நிபுணர்கள் கூறிவருகின்றனர். போதைவஸ்து என்பது முன்னர் எமது சமுதாயம் அறிந்திராத ஒரு சொல்லாக இருந்தது. இன்று அது சகல மக்களிடையேயும் ஊடுருவி முக்கியமாக பாடசாலை மாணவர்களை இளம்வயதிலேயே நோயாளிகளாக மாற்றிவிடும் கொடுமையை எங்கு சென்று முறையிடுவது எனத் தெரியவில்லை. போதைவஸ்து வர்த்தகத்தால் எத்தனையோ முதலாளிமார் குறுக்கு வழியில் கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் அதேவேளை இளம் சமூகத்தை அது சின்னாபின்னப்படுத்தியுள்ளதை இந்து மாமன்றம் சுட்டிக்காட்டுகின்றது. இதனை ஒழிப்பதற்காகவே பாடசாலைகள்தோறும் சிவ தொண்டர் அணிகளை ஸ்தாபிப்பது, மாணவர்களிடையே சமய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்வது, போன்ற நடவடிக்கைகளை இந்து மாமன்றம் எடுத்துவருகின்றது. எனினும் எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் போதைவஸ்தை முற்றாக ஒழித்து விடுமெனக் கூறமுடியாது. இதற்காக நல்லாட்சி அரசு திட்டவட்டமான, கடினமான எதிர் நடவடிக்கைகளை எடுத்து எமது இளம் சந்ததியினரை (வடக்கு கிழக்கு உட்பட) காப்பாற்ற வேண்டுமென இப்புத்தாண்டில் அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மேலும் சிறைச்சாலைகளில் வாடும் எமது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திவரும் மாமன்றம் இது தொடர்பாக அவர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது உடன் வழக்கைப்பதிவு செய்து நீதியின்முன் நிறுத்துங்கள் என அடிக்கடி அரசைக்கேட்டுவந்துள்ளோம். எனினும் இவர்கள் தொடர்பாக அரசின் நடவடிக்கை எமக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. மீண்டும் இப்புத்தாண்டில் நாம் அரசைக் கேட்டுக்கொள்வது, யாதெனில், ஒன்றில் அவர்களைப் பொது மன்னிப்பில் விடுவியுங்கள். அல்லது வழக்கைப்பதிவு செய்து நீதிமன்றத்திற்கு முன் நிறுத்துங்கள். எமது மக்கள் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியாத நிலையில், இருக்கும்போது எமது உடன்பிறப்புக்களின் விமோசனத்திற்காக இப்புத்தாண்டில் சகல கேளிக்கைகளையும் கொண்டாட்டங்களையும் தவிர்த்து இறை வழிபாட்டில் ஈடுபடுமாறு சகலரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இப்புத்தாண்டிலாவது நாம் மேற்சொன்ன எமது மக்களின் அத்தியாவசியப் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க வேண்டுமென்ற நல்லாட்சி அரசை வற்புறுத்துவதோடு, தமிழ் பிரதிநிதிகளுடன் இணைந்து எம்மக்களுக்கான நீதியானதும், சகலரும் ஏற்கும் வகையிலுமான ஒரு அரசியற் தீர்வினையும் வழங்குவதன்மூலம் எமது தாய்நாட்டை சொர்க்க பூமியாக்க சகல இனத்தவரின் பங்களிப்பையும் பெற துர்முகி வருடத்திலாவது ஒளிபிறக்க வேண்டுமென எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

# யாழ் மாவட்டத்தில் கலாசார சீர்கேடுகள்

**(யாழ் மாவட்டத்தில் அண்மைக்கால கலாசார சீர்கேடுகள் தொடர்பாக மாமன்றம், கடந்த மே மாதம் 4ஆம் திகதியன்று பத்திரிகைகளுக்கு விடுத்திருந்த செய்திக்குறிப்பு)**

எமது மூதாதையர் காலம் தொட்டு தமிழர் பண்பாடு பாரம்பரியம், ஒழுக்கநெறி என்பவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்த யாழ் மண்ணின் மக்கள் வாழ்வு ஏன் இவ்வாறு திசைதிரும்பியது என எண்ணும்போது மனம் பொருமுவதைத் தவிர வேறு வழியைக் காணமுடியவில்லை.

திருட்டுக்கள், ஒழுக்கச்சீர்கேடுகள், போதைவஸ்துப் பாவனையென சமுதாயத்தையே பாழ்படுத்தும் நடவடிக்கைகள் ஒவ்வொரு மனிதனின் சிந்தனையிலும் பதிந்து அவை திருத்தப்பட வேண்டுமேயொழிய சட்டத்தாலும், அடக்கு முறையாலும் திருத்தப்பட முடியாதவையாகும். அப்படித் திருத்தப்பட்டாலும் அது தற்காலிக தீர்வாக இருக்குமே தவிர நிரந்தரமாக மனித சமுதாயத்தை நல்வழிக்குக் கொண்டு வரமாட்டாது.

எனவே இவற்றை திருத்துவதற்கு பொலிசாரின் உதவி பெறப்படமுடியாதுள்ளது, அரசியல் வாதிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை அரசு ஏனோ தானோ என்ற மனப்போக்கில் இருக்கின்றதென்று பிறரைக் குற்றம் சொல்லும் நாம் ஒவ்வொருவரும் எம்மைத் திருத்தமுடியாதா எனச் சிந்திப்போம். தனிமனிதன் சிந்தித்து திருந்தும்போது, சமுதாயம் திருந்தும் அப்போது நாடேதிருந்தும்.

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ் மண் கந்தபுராணக் கலாசாரத்தைத் தன்னகத்தே கொண்டது. அம்மண்ணில் இன்று நடைபெறும் கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு யார் காரணம் இதற்கு அம்மண்ணின் மைந்தர்களாகிய நாமே காரணம் என்பதை எத்தனை பேர் இதய சுத்தியுடன் ஏற்றுக்கொள்வார்கள்.

எனவே ஒவ்வொரு தமிழ் மகனும் தன்னைத்தானே திருத்திக் கொள்வதுடன் முடியுமானவரை மற்றவர்களையும் திருத்த முற்படவேண்டும். முக்கியமாக இளம் தலைமுறையினரை நல்வழிக்கு இட்டுச் செல்ல வேண்டும். இதனை சமய ரீதியாக, சமூகரீதியாக, கல்விரீதியாக, அரசியல்ரீதியாக அணுகுவதன் மூலம் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். இவ்வாறான சமுதாய மறுமலர்ச்சிக்கு அதிமேதகு ஜனாதிபதியின், நல்லாட்சி அரசாங்கம், வடமாகாண முதலமைச்சர், எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பும் தேவையெனினும் எமது சமுதாயத்திலுள்ள புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள், மதத்தலைவர்கள் ஆகியோரும் முன்னின்று பணியாற்ற வேண்டும். இவை தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் சிந்தனைக்களம், இந்து மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து சமுதாயத்தை நல்வழிப்படுத்தி வருகிறது.

எனவே பிற அமைப்புக்களும் இவ்வாறு தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி இழந்து கொண்டிருக்கும் எமது பண்பாட்டை, கலாசாரத்தை, மனிதநேயத்தை, கல்விநிலையை மீளக்கட்டியெழுப்பி தமிழர் சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ எமது மூதாதையர் வழிநின்று செயல்படுவோமாக.!

## மாமன்றத்தின் அனுதாபம்

### ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் ஏ.ஆர். சுரேந்திரன்



ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் ஏ.ஆர். சுரேந்திரன் அவர்களது மறைவையிட்டு மாமன்றம் அதிர்ச்சியும் ஆழ்ந்த வருத்தமுமடைகிறது.

சமய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தவும், கல்லூரி மாணவர்களிடையே சைவசமய அறிவைப்புகட்டும் வகையில், பரீட்சைகளை நடாத்தி பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கிவருவதுடன் சமய நடவடிக்கைகளிலும் பல ஆண்டுகளாக ஈடுபட்டுவரும் கொழும்பு விவேகானந்த சபையை பத்து ஆண்டுளுக்கு மேலாக தலைமைதாங்கி வழிநடாத்திய பெருமை ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் ஏ.ஆர். சுரேந்திரனையே சாரும்.

இவர் மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிலும் அங்கத்துவம் வகித்து, நிதிகளை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் உச்சப் பயன்பாடுகளை அடையத்தக்கதாக ஆலோசனைகளை வழங்கி, செயற்பாடுகளையும் கண்காணித்தவர். மாமன்ற நடுத்தீர்ப்பு மையம் நிறுவுவதற்கும், அம் மையத்தின் விதிகளைத் தயாரிப்பதற்கும் அளப்பரிய பணியாற்றியதுடன், இந்து அறக்கட்டளைச் சட்டத்தினை தயாரித்துத் தருமாறு அன்றைய இந்து கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரன் நியமித்த சட்டத்தரணிகள் குழுவிலும் பணியாற்றி, அச்சட்டத்தினை ஆக்கித்தந்த சிறப்புக்குரியவர்.

பொதுவாகவே சட்டத்தரணிகள் சிலர் அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்குவதில் தயங்கும் அதேவேளை, அதிக கட்டணம் அறவிடுவதும் வழக்கம். ஆனால் அமரர் சுரேந்திரன் தன்னை நாடிவருபவர்களுக்கு இருபக்க நியாயங்களையும் விரிவாக எடுத்துரைத்து — சட்ட நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய இலாப நட்டங்களையும் தெளிவாக விளக்கி, செய்யும் சேவைகளுக்கு மாத்திரம் மனச்சாட்சிக்கு ஏற்ப, மற்றவர் மனம் நோகாமல் சிறுதொகையையும் பெற்று வந்ததை எல்லோரும் நன்கு அறிவர்.

இவரைக் குருவாக, வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட இளம் சட்டத்தரணிகளுக்கும், சட்டம் பயிலுனர்களுக்கும் மனிதாபிமானத்துடன் நல்லறிவையும் வழங்கி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவதானமாகவும், நிதானமாகவும், விவேகமாகவும் நடக்க வழிகாட்டியதை அவர்கள் அடிக்கடி நினைவுகூர்வதை அறிவோம்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்துக்கொள்கிறது.

# மாமன்றத்தின் அனுதாபம்

## அமரர் பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்



பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம் அவர்களது மறைவையிட்டு மாமன்றம் பெரும் அதிர்ச்சியும் ஆழ்ந்த வருத்தமுமடைகிறது.

மாமன்ற முகாமைப் பேரவையில் நீண்டகால உறுப்பினராகவிருந்து செயற்பட்ட பேராசிரியர் கனகரத்தினம் அவர்கள் மாமன்றத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் தன்னாலான வகையில் பங்கினையாற்றிவந்துள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறை விரிவுரையாளராக நீண்டகாலம் கடமையாற்றிவந்திருப்பதுடன், இந்து நாகரிகத்துறையின் பல பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக்குரியவர். பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். சர்வதேச இந்து மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு பல ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்பித்துள்ளார். "ஆறுமுகநாவலர் வரலாறு - ஒரு சுருக்கம்" என்ற இவரது நூலை கடந்த 2008ஆம் ஆண்டு மாமன்றம் வெளியிட்டு வைத்ததைச் சிறப்பாகச் சொல்லலாம்.

மாமன்றத்தால் வெளியிடத் தீர்மானிக்கப்பட்ட "தேர்" என்னும் ஆய்வுச் சஞ்சிகையின் ஆக்கத்திற்கு பெரிதும் முயற்சி எடுத்தார். எனினும் அவர் காலத்தில் அதனை நிறைவேற்ற முடியவில்லை என்னும் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் அதேவேளை அதனை உருவாக்கி வெளியிடுதலே அன்னாருக்கு மாமன்றம் செய்யும் அஞ்சலியாகவிருக்கும் என்பதையும் குறிப்பிடவேண்டும்.

பேராசிரியர் சகலருடனும் அன்புடனும், பண்புடனும் பழகும் இயல்பு கொண்டவர். இவரது மறைவு குடும்பத்தினருக்கு மட்டுமல்ல இந்து மாமன்றம் உட்பட தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பேரிழப்பாகும்.

பேராசிரியரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

(26.05.2016)

## அமரர் மா. சுப்பிரமணியம்



யாழ் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும், சமய ஆர்வலரும் சமூகத் தொண்டனுமாகிய திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களது மறைவையிட்டு மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது. வர்த்தகத்துறையில் கால்பதித்த அமரர். சுப்பிரமணியம் அவர்கள் வர்த்தகத்துறைக்கு மேலாக சமய சமூகப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்தவர்.

கொழும்பு- 13 ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்து சமயத் தொண்டாற்றியதோடு, பல தமிழ்ப் பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்களையும் நிர்மாணித்துக் கொடுத்தவராவார். கொழும்பு தமிழ்சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவராகவிருந்தும் அரும்பணியாற்றியிருக்கிறார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்த அமரர். சுப்பிரமணியம், மாமன்றத்தின் சமூகசேவை செயற்பாடுகளுக்கு பெரிதும் உதவிவந்துள்ளார். கீரிமலையில் மாமன்றத்தால் நிர்மாணிக்கப்பட்ட யாத்திரிகர் மடத்தில் தன் செலவில் தனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக ஓர் அறையை நிர்மாணிப்பதற்கான நன்கொடையை வழங்கி அம்மடத்தை நிர்மாணிப்பதில் பெரும் பங்காற்றியமை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

தனது தொழிலுக்கப்பால் கல்வி, சமய, சமூகத் தொண்டுகளுக்கு தேவையான அனுசரணைகளை அவ்வப்போது வழங்கி மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்தவர் இவர் . அன்னாரின் மறைவு இலங்கை வாழ் இந்து மக்களுக்கு பேரிழப்பாகும்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு மாமன்றம் தனது அனுதாதபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்துக்கொள்கிறது.

(04.06.2016)

# மாமன்றச் செய்தி

## மாமன்றத்தின் மகா சிவராத்திரி விழாவும் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு

கடந்த மார்ச் மாதம் 07ஆம் திகதியன்று அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் மகா சிவராத்திரிப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அன்றைய தினம் மாலை 6.00 மணி முதல் நான்கு ஜாமங்களும் மாமன்றத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும், சிவலிங்கத்திற்கும் விசேட பூசைகளும் அபிஷேகங்களும் நடைபெற்றன.

அதே தினம் காலை, தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் சிவதீட்சையை வழங்கப்பட்டது. இதன்போது மாணவ மாணவியர், இந்து மன்றங்களினது உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் இந்து மக்களும் சிவதீட்சையைக் திருவருளுடன் குருவின் மூலமாகப் பெற்றுக் கொண்டனர்.

சிவராத்திரி தினத்தன்று, இரவு வழிபாட்டு நிகழ்ச்சிகளின்போது இந்து ஒளி சிவராத்திரி சிறப்பிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# மாமன்றக் கல்விக்குழு நடாத்திய கலந்துரையாடல்

த.மனோகரன்

அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக்குழுவின் ஏற்பாட்டில் "நாடளாவிய ரீதியில் தமிழ் மற்றும் தமிழர் கல்வியின் இன்றைய நிலையும் எதிர்நோக்கும் தேவைகளும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கடந்த மே மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற முதல்நாள் நிகழ்வு இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவியரின் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழில் தேசிய கீதமும் பாடப்பட்டதைத் தொடர்ந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திரு.சி.தில்லைநடராஜா வரவேற்புரையையும், சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஆசியுரையையும் வழங்கினார்கள்.

கல்வித்துறையில் ஆர்வம் கொண்ட பலர் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

நாட்டிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆளணி, பௌதிகவளப் பற்றாக்குறைகள் உட்பட மாணவ மாணவியரின் கல்வித்தேவைக்குத் தடையாகவுள்ள விடயங்களைக் கண்டறிந்து நிவர்த்தி காண்பதற்கான வழிவகைகளை உரியமுறையில் மேற்கொள்ளும் முயற்சியே இக் கலந்துரையாடலின் நோக்கம் என்றும், மாமன்றம் சமயக்கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சித்திரம், ஆரம்பக்கல்வி உட்பட சகல பாடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி, நாடளாவிய ரீதியில் நமது பிள்ளைகள் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்புடையதாக உயர்ந்த உரிய கல்வியைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள் வகுப்பதும், தேவைகளை நிறைவேற்ற உரிய தரப்புகளுடன் தொடர்பு கொண்டு செயற்படவும் உள்ளதாக கல்விக் குழுச் செயலாளர் திரு.த.மனோகரன் விளக்கமளித்தார்.

மாமன்ற கல்விக் குழுவின் தலைவர் திரு. மா.கணபதிப்பிள்ளை பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் திரு.மனோ கணேசன் தனது உரையின்போது, தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி நிலையில் கவனம் செலுத்தும் இந்து மாமன்றக் கல்விக் குழுவைப் பாராட்டியதுடன், வளம் கொண்ட தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக சமாந்தர வகுப்புக்கள் தமிழ் மாணவர்களின் நன்மை கருதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாக குறிப்பிட்டார்.

சிறப்பு அகதியாகக் கலந்துகொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் திரு.வே.இராதாகிருஷ்ணன் பேசும்போது, தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியவளப் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுப்பதாகவும், கணித விஞ்ஞான பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றைத் தயாரித்து குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரியவளப் பற்றாக்குறையை நீக்குவதற்கு வழிசெய்வதாகவும் தெரிவித்த அமைச்சர் இந்து மாமன்றம் கல்வி தொடர்பில் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை பாராட்டியதுடன், அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் தனித்தனியாக கலந்துரையாடல்களும், கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன. இதற்கு திரு.கணேசன் சிவராஜ் பொறுப்பாகவிருந்து வழிநடத்தினார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு அவர்களது கருத்துக்களை எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், அவை யாவும் பதிவு செய்யப்பட்டன. கல்விக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட இச் செயற்பாடானது தொடரும் நடவடிக்கைகளுக்கான ஆரம்பமாகவே கொள்ளப்படவேண்டும்.

நாடளாவிய ரீதியில் ஒன்பது மாகாணங்களிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளையும், அவற்றில் கற்கும் மாணவ மாணவியரையும், கற்பிக்கும் ஆசிரிய ஆளணியினரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதன் மூலம் கல்விப் பணியைத் திறம்பட நமது சமுதாயம் திருப்தியடையும் வகையில் கண்காணிக்க முடியும் என்பது கல்விக்குழுவின் நம்பிக்கையாகும்.

## மாமன்றச் செய்தி

### ஆலயங்களில் மிருகப்பலியிட்டு வேள்வி நடாத்துவதைத் தடைசெய்தல்

ஆலயங்களில் மிருகங்களைப் பலியிட்டு வேள்வி நடாத்துவதற்கு யாழ் மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியதையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் மகிழ்ச்சியடைகின்றது. இந்த உத்தரவானது சைவ மதத்தின் உன்னத கொள்கையையும் ஆலயத்தின் புனிதத்தையும் மேம்படுத்த உதவுமென்பது மாமன்றத்தின் நம்பிக்கை. சமுதாயத்திலுள்ள இவ்வாறான மூடக்கொள்கைகளையும், மதத்திற்கு முரணான செயல்களையும் தடுக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கும் சமய அமைப்புக்களுக்குமே உரியதாகும். இவ்வகையில் நீதிமன்றத்தின் இத்தடையுத்தரவு மிகவும் போற்றுதற்குரியது.

எனினும் சமீபத்தில் யாழ் மாவட்டத்தின் சங்கானை மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேசங்களில் இவ்வாறான மிருகப்பலி நடைபெற்றதையிட்டு இந்து மாமன்றம் வருந்துவதுடன் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்நடவடிக்கைகள் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பதாகவும் அமைகிறது.

ஆலயங்களில் மிருக பலி நடத்துவதை சட்டவிரோதமாக்கும் மசோதாவை இந்து சமய விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்டதாக மாமன்றம் அறிகிறது. இந்நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கனவே வரவேற்றுள்ளது. இம்மசோதாவை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பித்துச் சட்டமாக்க வேண்டுமெனவும் மாமன்றம் கேட்டுக்கொள்கின்றது.



(04.04.2016)


## நிகழ்வுகளின் பதிவுகள்

**அகில இலங்கை இந்து மாமன்றத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் (07.03.2016)**




**மகாசிவராத்திரி தினத்தன்று மாமன்றத்தில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு (07.03.2016)**









**மாமன்ற அனுசரணையில் பொலன்னறுவை சிவன் ஆலயத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி நிகழ்வுகள் (07.03.2016)**



**திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி நிகழ்வுகள் (07.03.2016)**



இந்திய துணைத்தூதுவர் மாண்புமிகு ஸ்ரீ ஆ.நடராஜன் அவர்களை மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், திரு. மா.தவயோகராஜா, திருமதி அ.கயிலாசபிள்ளை, கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் வரவேற்றவேளையில்.




மகாசிவராத்திரி இந்து ஒளி சிறப்பு இதழை ஸ்ரீ. ஆ. நடராஜன் அவர்கள் பெற்றுக்கொண்டபோது




புனித பாலாவியிலிருந்து பக்தர்கள் தீர்த்தம் எடுத்துவந்து மகாலிங்கத்திற்கு அபிஷேகம் செய்கின்றனர்.

## நிகழ்வுகளின் பதிவுகள்




கிளிநொச்சியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் புதிய கட்டட திறப்பு விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் , ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி அவர்களும் கட்டடத்தைத் திறந்து வைக்கின்றனர். (26.05.2016)




திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியின் இரண்டாவது கட்டடத்திற்கான நிதிஉதவியை, இந்திய உயர்ஸ்தானிகர் மாண்புமிகு வை.கே.சின்ஹா, சபைத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டனிடம் வழங்கினார். அருகில் உயர்ஸ்தானிகரின் முதன்மைச் செயலர் ஸ்ரீமதி ஈஷா ஸ்ரீவத்ஸவா அவர்கள்.




அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் திருமுறிகண்டியில் அமைக்கப்படும் சரவணப் பொய்கை வழிபாட்டுத்தலத்திற்கானதும், வாழ்வாதார திட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றின் கட்டடங்களிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு (26-05-2016)



வரணி, சாவகச்சேரியில் சிவதொண்டர் அணியினருக்கான நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், திரு. ராஜ்மோகன் ஆகியோரும் நிகழ்வில் பங்குகொண்ட சிவதொண்டர் அணியினரும்.



சம்பூரில் புனரமைக்கப்பட்டுவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தினைப் பார்வையிட்டவேளை.



300 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்ட ரகுபதிசர்மா அவர்களை மன்னிப்பளித்து விடுவிக்கும்படி, சிவாச்சாரியார்கள், மற்றும் மாமன்றத் தலைவர் ஆகியோர் முன்னைநாள் ஜனாதிபதி மாண்புமிகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.








தேவிபுரம், குருதேவர் அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழாவில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன், சுவாமி கலாநிதி ஆறு.திருமுருகன், மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் தமிழ் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டனர். புதிய கட்டடத்தை ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் திறந்து வைத்தார்கள்.



தேவிபுரம், குருதேவர் அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.




நயினாதீவில் அமைக்கப்படவிருந்த புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மாண்புமிகு ரெஜினோல்ட் கூரே அவர்களை மாமன்றப் பிரதிநிதிகள் சந்தித்தபோது.





அவுஸ்திரேலியா-சிட்னியில் உலக சைவப் பேரவையின் விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் சொற்பொழிவாற்றியவேளை.



திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் ஆன்மீகப் பெருவிழா (06-03-2016) நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ ஆ.நடராஜன், திரு. எஸ்.தியாகராஜா (STR) மற்றும் திரு. திருமதி தம்பு துரைராஜா.




சம்பூர் மீள்குடியேற்ற நிகழ்வில், மீள்குடியேற்ற அமைச்சர் மாண்புமிகு தே.ம.சுவாமிநாதன், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண மாண்புமிகு ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோருடன் அழைப்பின்பேரில் கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்கள் திரு. சி.தனபாலா, திரு. சி.த.சி.அருளானந்தன், திரு. கந்தையா நீலகண்டன், திரு. வே.கந்தசாமி, திரு. சி.தில்லைநடராஜா.


தேசிய சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல்கள் அமைச்சர் மாண்புமிகு மனோ கணேசன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியவேளை.
இ-வ: திரு. ஜெ.நிரோஷ்காந், சி.தனபாலா, சி.தில்லைநடராஜா, த.மனோகரன், வே.கந்தசாமி, சி.த.சி.அருளானந்தன், கந்தையா நீலகண்டன், மா.தவயோகராஜா, சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், திரு. க.பாலசுந்தரம்

# நிகழ்வுகளின் பதிவுகள்

## முன்னைநாள் பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் நினைவுப் பேருரை நிகழ்வுகள்




அமரர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்



சக்தி இல்ல மாணவிகளின் இறைவணக்கம்




திருமதி கதிர்காமநாதன் அவர்களின் அஞ்சலி




மாமன்றத் தலைவரின் அஞ்சலி



மாமன்ற உபதலைவரின் அஞ்சலி



மௌன அஞ்சலி



தமிழருவி த.சிவகுமாரன் அவர்களின் நினைவுப் பேருரை



பொதுச் செயலாளர் சி.தில்லைநடராஜா நன்றியுரை

## கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற அமரர் சுரேந்திரன் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள்





திருமதி சுரேந்திரன் அவர்கள் அமரருக்கான அஞ்சலி வணக்கம் செய்கிறார்.



திரு.மா.தவயோகராஜா அவர்களின் அஞ்சலி



திரு. விவேகானந்தன் உரை



வித்துவான் வசந்தா வைத்தியநாதன் உரை





திரு. கந்தையா நீலகண்டன் உரை






## திரு.ஐ.தி.சம்பந்தன் அவர்களுக்கு 'சமூகசீலர்' விருது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் சர்வதேச இணைப்பாளரும், சைவத்தமிழ் ஆர்வலரும், மாமன்றத்தின் "இந்து ஒளி"யை சர்வதேச அளவில் கொண்டு செல்பவருமாகிய திரு. ஐ.தி.சம்பந்தன் அவர்களுக்கு, பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் "சமூகசீலர்" என்ற விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. இலண்டனில், பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், கடந்த ஏப்ரல் 30 முதல் மே 01ஆம் திகதி வரை நடாத்திய "நடராஜ தத்துவமும் திருமந்திரமும்" எனும் தொனிப்பொருளிலான 17ஆவது மாநாட்டின் போது மேற்படி விருது திரு. ஐ.தி.சம்பந்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.


ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்தில் மாமன்றத்தின்
சிவதொண்டரணி விரிவாக்கல் பணிகளும்
மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகள்
வழங்கலும்

உடையுக்குளம் தமிழ் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கான அத்தியாவசிய தேவையை கருத்திற் கொண்டு இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டது




வன்னேரிக்குளம் பாடசாலையில்
மாணவர்களுக்கான
இலவச அப்பியாசக் கொப்பிகள்
வழங்கப்பட்டது

மாமன்றத்தின் சமூகநலன் குழுவினால் முள்ளியவளை – கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட
பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது. அருகில் பிரதேச செயலர் திரு.குணபாலன் அவர்களும்.




சிவதொண்டரணி
நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கற்சிலைமடு
தமிழ்க்கலவன் பாடசாலையில் சிவதொண்டரணி
விஸ்தரிப்பு நிகழ்வும் இலவச
அப்பியாசக் கொப்பிகள் வழங்கலும்.




கேப்பாப்புலவு பாடசாலையில்
சிவதொண்டரணி விஸ்தரிப்பு நிகழ்வும்
இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கலும்.

# மாமன்றச் செய்திகள்



## அமரர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்

### அஞ்சலி நிகழ்வும் நினைவுப் பேருரையும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி, இவ்வருடம் பெப்ரவரி மாதம் மறைந்த கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உலக சைவ பேரவை, கொழும்பு விவேகானந்த சபை, கொழும்பு மகளிர் இந்து மன்றம், இந்து வித்தியா விருத்தி சங்கம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த சிறப்பு நிகழ்வும் நினைவுப் பேருரையும் கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதியன்று காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின் போது, தமிழருவி த. சிவகுமாரன் "எமது பண்பாடு: அன்றும் - இன்றும்" என்ற தொனிப் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.



## வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூக நலன் குழுத் தலைவராக தொண்டாற்றி, இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதியின் தோற்றத்திற்கு வித்திட்டு, அதனை விருட்சமாக்கிய பெருமைக்குரிய அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களது சேவையை மறவாது மாமன்றம் வருடந் தோறும் நினைவுப் பேருரையை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. அந்த வகையில், இவ்வருட நினைவுப் பேருரை கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதியன்று மாலை இரத்மலானை சக்தி இல்லம் மாணவர் விடுதியில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களும் சிறப்பு விருந்தினராக இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். ஜெயக்குமார் அவர்களும் கலந்து கொண்டனர்.

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் "செய்வன திருந்தச் செய்" எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்வின் போது, விடுதி மாணவர்களது பிறந்த தின வைபவமும் இடம்பெற்றது.

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- நாகேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு 4
- உயர்சக்தி ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பிகை 7
- நயினைப் புலவர் நாவில் நாகபூஷணி அம்மன் 12
- நாகமணிப் புலவரின் நயினை மான்மியமும் நாகம்பாளும் 14
- நயினாதீவும் அதன் பன்முகக் கலாசாரமும் 19
- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் தோற்றமும் வளர்ச்சியும் 22
- நாகபூஷணி அந்தாதி 24
- நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை 25
- நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல் 26
- தேவி பஞ்சகம் 27
- 'அமுதசுரபி' 27
- மனோன்மணி மாலை 27
- நாகேஸ்வரியம்மை பதிகம் 28
- நாவலர் பெருமானின் வழியில் ஆன்மீக எழுச்சி 30
- முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பொன் மொழிகள் 32
- யாழ்ப்பாணத்து சித்தர் சிவயோக சுவாமிகள் 33
- திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதும் வழக்காறு ஏற்பட்டமை 35
- கோமாதாவும் சான்றோர் பராமரிப்பும் 36
- மாமன்ற வைரவிழா சிறப்புமலர் வெளியீட்டு நிகழ்வு 37
- மாமன்றச் செய்திகள் 38
- மாமன்றக் கல்விக்குழு நடாத்திய கலந்துரையாடல் 42
- மாமன்றச் செய்திகள் - நினைவுப் பேருரை 48

# மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீட்டு நிகழ்வு - கொழும்பு (29-05-2016)



கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆயைத்திலிருந்து ஊர்வலம் புறப்படுகிறது



ஊர்வலத்தில் வைரவிழாச் சிறப்பு மலர் வைக்கப்பட்ட பீடத்தை தாங்கியவாறு தொண்டர்கள் வருகை



வைரவிழா சிறப்பு மலர் வைக்கப்பட்ட பீடத்தினருகில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்



மாமன்ற உபதலைவர் சின்னத்துரை தனபாலா அவர்கள் வரவேற்புரை.



இ-வ: திரு. கந்தையா நீலகண்டன் (உரை). ரவீந்திரமோகன். சந்திரா ஜயரட்ண, மாண்புமிகு ஒஸ்ரின் பெர்னான்டோ. மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன், வண. மருதாசல அடிகளார், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன், மாண்புமிகு இரா.சம்பந்தன், மாண்புமிகு மனோ கணேசன், மாண்புமிகு அரிந்தம் பக்ஷி



வைரவிழா மலர் சிறப்புப்பிரதியை திரு. க.கனக-ஈஸ்வரன். திருமதி அ.கயிலாசபிள்ளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.



பேரூராதீன இளையபட்டம் மருதாசல அடிகளாருடன் மேல்மாகாண ஆளுநர் மாண்புமிகு கே.சி.லேகேஸ்வரன் அவர்கள் அளவளாவிய வேளையில்



கிழக்கு மாகாண ஆளுநர் மாண்புமிகு ஒஸ்ரின் பெர்னான்டோ அவர்களை மாமன்றத் தலைவர் கௌரவித்தவேளை



எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா. சம்பந்தன் அவர்களை மாமன்றத் தலைவர் கௌரவித்தவேளை



ஏஜஏ காப்புறுதி நிறுவன அதிகாரி திரு.சந்திரா ஜயரட்ண உரை




சைவமுன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா) திரு. ரவீந்திரமோகன் உரை



மாண்புமிகு மனோ கணேசன் அவர்களுக்கான கௌரவத்தினை மாமன்ற சமூகநலன் குழு செயலாளர் திரு ஜெ. நிரோஷ்காந் வழங்குகிறார்



இந்திய பதில் உயர்ஸ்தானிகர் மாண்புமிகு அரிந்தம் பக்ஷி உரை



கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கான கௌரவத்தை மாமன்றப் பொருளாளர் திரு. வே.கந்தசாமி வழங்கிய வேளை



பேரூராதீன இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் அவர்களின் ஆன்மீகப் பேருரை



ஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டவேளை



சக்தி இல்ல மாணவிகளின் இறை வணக்கத்துடன் நிகழ்வின் நிறைவு.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/195/NEWS/2016



இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.